www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**பொல்லாத சனிதுலைஞ்சு போம்!**

**மந்திரிமார் வாறார்கள் மாலையெல்லாம் ரெடிதானே
சந்தியிலே போய்ப்பார் சரியோண்டு - இந்தமுறை
எல்லாஞ்சரியாப்போம்: எங்களுக்கும் நிம்மதிதான்
பொல்லாத சனிதுலைஞ்சு போம்!**

*-ஈழமோகம்*

இதழ் 69 | ஏப்ரல்.6 - ஏப்ரல்.19, 1995 | விலை 7.00

## இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வு:

## • ஒற்றையாட்சி முறை நீக்கம் • வடக்கு கிழக்கு இணைப்பு
## • கிழக்கின் முஸ்லிம் சிங்களப்பிரதேசங்கள் ஊவாவுடன் இணைப்பு

# அமைச்சர் குழு யாழ் பயணம்!

***தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி முறையொன்றை அரசு முன்வைக்கவுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.***

***விடுதலைப்புலிகளுடனான அடுத்தகட்டப் பேச்சின் போது அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இருக்கும் அமைச்சர் மட்டத்திலான குழுவினர் இத்தீர்வுத்திட்டத்தை முன்வைத்து புலிகளுடன் பேசவுள்ளனர் என அரசு தரப்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.***

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, ஏற்கெனவே அரசு குறிப்பிட்டபடி அரசியல் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதென்றும், புலிகளுடனான அப்பேச்சுவார்த்தையின் போது, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கு பிரதேசங்களை இணைத்து ஒரு பிராந்திய அலகாக உருவாக்குவது, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறைப் பிரதேசத்தையும், சிங்களவர் வாழும் பிரதேசங்களையும் ஊவா மாகாணத்துடன் இணைப்பது. அரசியலமைப்பில் ஒற்றையாட்சி எனக்குறிப்பிடுவதைத் தவிர்ப்பதனூடாக சமஷ்டி முறைமை ஒன்றை உருவாக்குவது ஆகிய அடிப்படைகளைக் கொண்ட தீர்வுத்திட்டம் ஒன்று தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

புலிகளுடனான இப்பேச்சுவார்த்தைகளில் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், பொது நிர்வாக ஊள்நாட்டமைச்சர் ரட்னசிறி விக்கிரம நாயக்கா, வர்த்தகத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ன ஆகியோர் கலந்து கொள்ளலாம் எனவும் பேசப்படுகிறது. நீதிய மைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இப்பேச்சுவார்த்தைக்ளில் கலந்து கொள்வார் என முன்னர் பேசப்பட்ட போதும், அவர் அனேகமாக இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள மாட்டார் என நம்பகமாக தெரியவருகிறது.

எனினும், புலிகளுடனான பேச்சுக்காக எதிர்வரும் எட்டாம் திகதி யாழ் செல்லவுள்ள அமைச்சர் மட்டத்திலான குழுவினர் உடனடியாக இது பற்றி எதுவும் பேசப் போவதில்லை என்றும், அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்தும் அடிப்படைகள், ஒழுங்குகள் குறித்து மட்டுமே பேசுவர் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை பொது ஜன ஐக்கிய முன்னணியுள் அங்கம் வகிக்கும் டி.யு.என்.எப்பினர் வட - கிழக்கை இணைத்து வழங்கப்படும் எந்தவொரு தீர்வையும் ஏற்கப்போவதில்லை எனவும், தாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனராம்.

இதேவேளை, அமைச்சர்கள் மட்டத்திலான குழு யாழ் வந்து பேசிய போதும், அது முன்வைக்கப்போவது ஒரு நகல் திட்டமாகவே இருக்கும் என்றும், இதுதம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வரும்வரை தாம் இப்போது வைத்துள்ள கோரிக்கைகளை விட்டுகொடுப்பதில் நியாயமில்லை எனவும் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அரச உயர்மட்ட குழுவான இக்குழுவின் பேச்சுவார்த்தையின் போது, தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வுகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் காலம் வரும்வரை இந்நிலைமை தொடர்வது தவிர்க்க முடியாததே என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. •



## கண்துடைப்போ?

எதிர்வரும் ஏப்பிரல் 28ஆம் திகதி பிரான்சில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளுடனான மாநாட்டின் போது, இலங்கைக்கான உதவி வழங்கப்படுவதற்கு ஒரு நிபந்தனையாக புலிகளுடனான அரசின் பேச்சுவார்த்தைகளின் வெற்றி குறித்து கோரப்படும் என்றும், அரசு தரப்பில் வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு யோசனைகள் எவை, அவை தொடர்பான புலிகளின் அபிப்பிராயம் என்ன என்பவை தொடர்பாக கேட்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதுவே அவசர அவசரமாக அமைச்சரவை மட்டத்திலான பேச்சு ஒன்றை புலிகளுடன் நடாத்த வேண்டிய தேவையை அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

உதவி வழங்கும் நாடுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வாக நீங்கள் முன்வைத்துள்ள தீர்வுகள் என்ன என்பதை தமக்கு அறிவிக்க முடியுமா என அரசாங்கத்திடம் கேட்டிருப்பதாகவும் அரச உயர் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு அடிபடுகின்றது.

இதன் காரணமாக, உதவிவழங்கும் நாடுகளுக்கு காட்டுவதற்கான ஒரு கண்துடைப்பாக இப்பேச்சுவார்த்தை அமைந்துவிடுமோ என்ற அச்சம் தமிழ் அரசியல் வட்டாரங்களில் எழுந்துமுள்ளது.

எவ்வாறெனினும், புலிகள் கேட்டுக் கொண்டபடி முடிவுகளை அந்த இடத்திலேயே எடுக்கக்கூடிய அதிகாரம் கொண்ட அமைச்சரவை மட்டத்திலான பிரதிநிதிகள் யாழ் செல்வது ஒரு நல்ல அறிகுறியே என்று கொள்ள வேண்டும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். •

## யுத்தமூலம் சமாதானம்!

'சமாதானம் அல்லது யுத்தத்தின் மூலமேனும் சமாதானத்தை அடைவதே அரசின் உறுதியான நோக்கம்'

மேற்படி பிரகடனத்தை மீண்டுமொருமுறை வெளியிட்டிருப்பவர் வேறுயாருமல்ல சாட்சாத் நமது பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்தவேதான்.

மெனிக்கின்ன எனும் இடத்தில் கடந்த மார்ச் மாதம் 29ம் திகதி கூட்டுறவுச் சங்கமொன்றின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

''யுத்தத்திற்கு முடிவொன்றை காணுதலே எமது நோக்கம். அதற்காக அமைச்சு சீருடையை கழற்றி எறிந்துவிட்டு போர்ச்சீருடையை அணியவும் நான் தயார்: நாட்டின் பிரதான இனத்தின் உரிமையை பாதுகாக்க நாங்கள் எல்லோரும் கைகோர்ப்போம்.'' என அக்கூட்டத்தில் சிங்கள பௌத்தர்களை அறைகூவியுள்ளார்.

அநுருத்த ரத்வத்தை இவ்வாறு பேசுவது இது முதற்தடவையல்ல. காமினி திசாநாயக்க கொலையை அடுத்து முதன் முதலாக அவர் இவ்வாறு பேசத்தொடங்கினார். அதன் பிறகு இவ்வாறு பேசுவது அவரது வழமையாகப் போய்விட்டது.

இந்த அரசாங்கமும் அமைச்சரவையும் அதன் படையும் சிங்கள மக்களை பாதுகாக்க உள்ளதே ஒழிய இந்த நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாக்க அல்ல என்பதுவும், சிங்கள மக்கள் பாதுகாப்பாக வாழும் வகையில் நடந்து கொள்வதே மற்றைய இனங்கள் சமாதானத்தை அனுபவிக்க உள்ள வழியென்று இப்பேச்சு மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி கூறியுள்ளது.

அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னரே வரப்போகும் அரசாங்கத்தைப்பற்றி விமர்சிக்கிறார்கள் எனக்கூறி அரசாங்கத்தின் கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து விமர்சிக்கப்பட்ட விமர்சனங்களை, கண்டித்த ஜனநாயகவாதிகள் இப்போதாவது இதை புரிந்து கொள்வார்களோ என்னவோ? •

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மு.கா.மாநாடு: அதே பழைய சரடுகள்!

முஸ்லிம் காங்கிரஸின் 13வது தேசியமாநாடு 02.04.1995 ஞாயிற்றுக் கிழமை சுகததாஸ உள்ளக அரங்கில் இடம் பெற்றது. மாநாடு ஆரம்பமாவ தற்கு முன் உள்ளே செல்வதற்காக 45 நிமிடங்கள் வெயிலில் கியூவரிசையில் நிற்க வேண்டியிருந்தது. அரசியல் அதியுயர்பீட உறுப்பினர் சட்டத்தரணி ஜவாட் அவர்களும் என்னுடன் வெயிலில் காய்ந்தவர்களில் ஒருவர். இறுதியில் கதவை உடைத்துக்கொண்டு ஆதரவாளர்கள்.படையெடுத்தனர். பின்னர் ஜனாதிபதி, பிரதம மந்திரி, எதிர்க்கட்சித் தலைவர், கட்சியின் பிரமுகர்கள் ஆகியோர் சமுகமளித்தனர்.

இங்கு வழமைக்கு மாறான ஒரு செயலும் இடம்பெற்றது. அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் கட்சித் தலைவர்களின் ஆசனங்களில் அமராமல் பார்வையாளர் என்பது பகுதியில் அமர்ந்திருந்தார். இடையில் இரண்டு தடவைகள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்கள் உரிய இடத்தில் வந்து அமர்ந்திருக்குமாறு வேண்டியும் அவர் அதனை ஏற்கவில்லை. பின்னர் முதல் அமர்வாக வாழ்த்துரைகள் இடம் பெற்றன. தொண்டமான் அவர்கள் வாழ்த்துரைக்கு அப்பால் சென்றதால் சிவசிதம்பரத்துடன் மோதவேண்டியேற்பட்டது. தொண்டமான் தமிழில் உச்சரிப்பு இல்லாமல் கொச்சையாக பேசினார். தொண்டாவின் பேச்சில் கெடுபிடியுத்தத்தின் உச்சக்கட்டத்தில் சிவசிதம்பரம் நின்றார். சிவசிதம்பரம் அவர்கள் பேசும் போது நாங்கள் தீர்வாக வைத்த சமஷ்டி அமைப்பு முறையானது 30 வருடங்களுக்கு முந்தியது என்றும், அதை இப்போதுதான் தொண்டமான் உட்பட புலிகளும் பேசுகின்றனர் என்றார்.

அடுத்ததாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அவர்களின் உரை இனிமையாகவும், ஒழுங்குமுறையாகவும் அமைந்திருந்தது. சுரேஸ் பிரேமச்சந்திரனும் உணர்ச்சிகரமாக பேசினார். இவையெல்லாம் ஒரு புறமாக இருக்க எப்போதும் தேசிய மாநாட்டில் கதாநாயகராக விளங்கும் முஸ்லிம் காங்கிரஸின் மூத்த துணைத்தலைவர் மருதூர்க்கனி அவர்கள் இம்முறை நடந்த மாநாட்டில் அமைதியாக ஆசனத்தில் அமர்ந்திருந்தமை மாநாட்டின் சிறப்பம்சங்களின் ஒன்றாகக் காணப்பட்டது.

இரண்டாவது அமர்வு அரசியல் அமர்வாக காணப்பட்டது. தலைவரின் உரை இடம்பெற்றது. தலைவர் பேச்சை ஆரம்பித்தார். பேனங்களுக்கான ஆசனங்களில் முன்வரிசையில் புலிகளால் கொலை செய்யப்பட்ட வட.கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எ‌ல். எம்.மன்சூர் (சம்மாந்துறை) அவர்களின் தாய் அமர்ந்திருப்பதை தலைவர் கண்டார். ஒரு போடு போட்டார். இந்த மாநாட்டிற்கு மன்சூரின் தாய் வந்திருப்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன் என்றார். மன்சூர் புலிகளால் கொலை செய்யப்பட்டு 5 மாதங்கள் கழிந்து அவருடைய தந்தையை நான் கண்ட போது மிகக் கவலையுடன் சொன்னார் ''தலைவர் இதுவரையும் தமது வீட்டுக்கே வரவில்லையென'' வேதனைப்பட்டார். இது சம்பந்தமாக அரசியல் பீட உறுப்பினர் ஒருவர் தலைவரைக் கேட்டபோது நான் மன்சூரை புலிகள் கொலை செய்ததற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் தன்னுடைய பதவியை இராஜினாமாச் செய்து குறிப்பிட்ட வேறு ஒரு நபருக்கு வழங்குமாறு கூறினேன். ஆனால் அவர் செய்யவில்லை. அப்படி அவர் நடந்திருந்தால் இது நடந்திருக்கமாட்டாது என்றார். வாழ்க! தலைவர்.

பேச்சைத் தொடர்ந்தார் தலைவர். முஸ்லிம் காங்கிரஸின் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான யோசனைகள் மாநாட்டில் வெளியிடப்படும் என்று பத்திரிகையில் அறிக்கை விட்டிருந்தார்கள். ஆனால் தலைவர் அது சம்பந்தமாக எதையும் குறிப்பிடவில்லை. 12 வது மாநாடு கல்முனையில் நடைபெற்றதைப் பற்றியே பேசினார். உரத்த குரலிலே சப்தமிட்டாரேயொழிய எந்தவிதமான முக்கிய அம்சங்களும் அவருடைய பேச்சில் இருக்கவில்லை. இரண்டு விடயங்களை அவர் குறிப்பிட்டார். எந்த நாட்டு அரசியல் முறையினையும் இங்கு அறிமுகம் செய்தாலும் 8% முஸ்லிம்களை உள்ளடக்கிய தீர்வைத்தான் முஸ்லிம்காங்கிரஸ் ஆதரிக்குமென்றும் முஸ்லிம்களை திருப்திப்படுத்தாத எந்தவித தீர்வினையும் முஸ்லிம் காங்கிரஸ் ஏற்காது என்றார். இக்கருத்தினை ஒரு சாதாரண அரசியல் தெரியாத மீன் வியாபாரி கூட உரத்த குரலில் கூறலாம். ஆனால் அரஷ்ஃப் சுற்றிச் சுற்றி இந்த வட்டத்திற்குள்ளேயே நேரத்தைக் கழித்தார்.

இறுதியாக என்னுடைய கருத்தில் கல்முனையில் செய்தது போன்று அஷ்ரஃப் பாவித்த அரசியல் நுட்பமே முஸ்லிம் காங்கிரஸின் 13வது தேசிய மாநாடு எனலாம்.

# திரிசிங்களே!




'திரிசிங்களே' (முச்சிங்களம்) எனும் பெயரில் வாரப்பத்திரிகை ஒன்று மார்ச் மாதத்திலிருந்து வெளிவரத்தொடங்கியுள்ளது.

இப்பத்திரிகை, தென்னிலங்கையில் இதுவரை வெளிவந்து கொண்டிருந்த சிங்கள பௌத்த பேரினவாதப் பத்திரிகைகளான **திரிசூலே, சிங்கள பௌத்தயா** ஆகிய பத்திரிகையின் வரிசையில் இணைந்துள்ளது.

இப்பத்திரிகையின் கோஷம் ''தேசத்தை மீட்போம்'', ''சிங்களவர்களே இப்போதேனும் விழித்தெழுங்கள்'' என்பதே.

இப்பத்திரிகையின் ஆசிரியர் ''ரோகண குமார'' என்பவர். இவர் ஆரம்பத்தில் **லக்திவ** பத்திரிகையிலிருந்து ''சுனில் மாதவ'' தலைமையிலான முழு ஆசிரியர் குழுவும் வெளியேறி ''ஹிரு'' பத்திரிகையை ஆரம்பித்தபோது, லக்திவ பத்திரிகையை தொடர்ந்து நடத்தியவர். ரோகண குமாரவால் நடத்தப்பட்ட லக்திவ பத்திரிகை இனவாதத்தை தூக்கிப் பிடித்தது. பின் அதிலிருந்து முரண்பட்டு விலகி '**திரிசூலே**' எனும் இனவாத பத்திரிகையை தொடங்கினார். அப்பத்திரிகை நடத்திக்கொண்டிருந்த போதே '**சுவந்த**', '**சொந்துர**' என்ற மஞ்சட் பத்திரிகைகளையும் நடத்தினார்.

பின் '**திரிசூலே**' பத்திரிகையிலிருந்தும் விலகி இப்போது '**திரிசிங்களே**' எனும் பெயரில் புதிய பத்திரிகை தொடங்கியிருக்கிறார்.

இப்பத்திரிகையின் இரண்டாவது இதழும் வெளிவந்துவிட்டது. அதில் ஒரு கட்டுரை ''13வது திருத்தச்சட்டத்தை உடனே நீக்கு'' எனும் தலைப்பில் ஒரு முழுப்பக்கக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. தமிழரும் நீக்கத்தான் சொல்கிறார்கள் அது போதுமானதல்ல என்ற கருத்தின் அடிப்படையில். ஆனால் இக்கட்டுரையோ; தமிழர்களுக்கு அதி

→15

# இன்னொரு பம்மாத்து தானோ?

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் பேரில் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட இளைஞர்களை கூடிய விரைவில் விசாரித்து விடுதலை செய்வதாக பொ.ஐ.ஐ.மு. தேர்தல் பிரச்சாரங்களின் போது சொல்லியிருந்தது. பதவிக்கு வந்ததும் செப்டம்பர் 14ஆம் திகதி மேற்படி விவகாரத்தை ஆணைக்குழுவொன்றையும் ஜனவரியில் அமைத்திருந்தது.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் ஜே.எப்.ஏ.சொய்ஸா தலைமையிலான அந்த ஆணைக்குழு விசாரணைகளின் பின் முன்வைத்த சிபார்சுகளில், கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக எந்த விதமான குற்றச்சாட்டுகளுமின்றி அடைக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிற 181 பேரை விடுதலை செய்யுமாறு தெரிவித்திருந்தது. ஆனால் இன்னமும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. பாராளுமன்ற தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் மொத்த எண்ணிக்கை 632 என்பது கவனிக்கத்தக்கது. அதுமட்டுமன்றி விசாரணைகள் முடிந்துவிட்டதாக ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்த போதும் இன்னமும் அது தொடர்பான அறிக்கை வெளியிடப்படவில்லை. முன்னைய கால ஆணைக்குழுக்கள் போலத்தான் இதுவும் வெறும் பம்மாத்துதானா என்பது மனித உரிமையாளர்களின் கேள்வி!

# ஊழல் – 3 எட்டு ஆட்டுக் கிடாய்களும் சம்பா அரிசி மூடைகளும்

எல்லோரும் இன்று சொல்வது போல ''17 வருட கால ஊழல்'' ஆட்சியின் வாரிசு ஒன்றின் கோர முகம் இங்கே கிழிகிறது. அரச நிர்வாக இயந்திரத்தின் கடைசி உறுப்பு கிராமசேவையாளர் என்பது யாவரும் அறிந்ததே. ஓட்டமாவடி 2ம் வட்டாரத்துக்கும் அவ்வாறுதான் ஓர் கிராம சேவையாளர் இருக்கிறார் எம்.எம். ஹனிபா என்றும் எம்.எம். அலிபார் என்றும் எம். முகமது அலி என்றும் நாமகரணம் சூட்டப்பட்டு அழைக்கப்படுபவர் எனினும் 'விறுதா விதானையார்' என்னும் பதமே அவரது குணநலன்களையும் பணியையும் அச்சொட்டாக விளக்கப் பயன்படுவதாகும். அவர் கிராம சேவையாளர் மட்டுமல்ல.

1. ஐ.தே.கவின் கற்குடாத் தொகுதி முஸ்லீம் லீக் இளைஞர் அமைப்பின் அமைப்பாளர்.

2. ஓட்டமாவடி முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் அமைப்பின் செயலாளர்.

இவ் விறுதா விதானையார் ஓட்டமாவடியில் பிறந்தார். ஓட்டமாவடி முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் ஆரம்ப காலப் பொழுதைக் கழித்தார். பிறகு என்ன நினைத்துக் கொண்டாரோ பள்ளிக்கூடம் போகவே இல்லை. 1977 இல் ஐ.தே.க ஆட்சிக்கு வந்த பின்னர் 1979 August க.பொ.த. சா/தரத்தில் சகல பாடங்களிலும் திறமைச்(?) சித்தி அடைந்தார். (வியக்கவேண்டாம் ஆள் மாறாட்டம் செய்துதான்) இம்மோசடி கண்டுபிடிக்கப்பட்டதும், வழக்குப் பதிவு செய்யப்பட்டதும், பிணையில் வெளிவந்ததும், வழக்கு இலக்கம் SCIB/79369 கொண்ட வழக்கு கோவை முன்னைநாள் நீதி அமைச்சர் தேவநாயகம் காலத்தில் காணாமல் போனதும் பிந்திய கதைகள்.

இத்தகைய பெறுமை மிக்க விறுதா விதானையின் கண்டறியப்பட்ட சில திருவிளையாடல்களை இவ்விடத்தில் நினைவு கூர்வது நல்லது.

1981 இல் வாகனேரியில் நிறுவப்பட்ட பால் சேகரிக்கும் நிலையத்தில் பெருமான் 81 – 83 வரை முகாமையாளராக (அதற்குரிய அடிப்படைத் தகைமைகளான ஆங்கில அறிவும் இசாயனவியல் சித்தியும் இல்லாத போதும்) கடமையாற்றிய வேளையில் நிதி மோசடியில் ஈடுபட்டதாகவும், அப்போதைய கோறளைப்பற்றுஉதவி அரசாங்க அதிபர் திரு. ஜீ. கிருஸ்ணமூர்த்தி அதனைக் கண்டு பிடித்ததாவும், அதன் வழி இவர் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதவும் அறிய முடிகிறது. நிதி மோசடி சம்பந்தப்பட்ட சோர்வுப்பணத்தை மாதாமாதம் 1000/= வீதம் கட்டஒப்புக் கொண்டுமீள நியமனத்தை பெற்றுக் கொண்டார். (பணம் கட்ட வேண்டுமா என்ன?) பின்னர் தேசிய பால் சபை ''மில்க் செட்'' கம்பனியாக்கப்பட்ட போது இவரின் திருவருள் பிடியில் இருந்து தப்பிக் கொண்டது. (சேவை நீக்கம் செய்யப்பட்டார்.)

பின்னர் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களை கிராம சேவையாளர்களாக உயர்த்தும் உத்தரவை 1989இல் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச விடுத்த போது கிராமசேவையாளர் நியமனம் வழங்கப்படுவதற்கு இரு மாதங்களுக்கு முன்பு இவர் பயிர்ச்செய்கை உத்தியோகத்தரானார். (முன்னாள் பா.உ தேவநாயகம் அவர்களின் கைங்கரியத்தில்) பிறகு என்ன இருமாதங்களில் விதானை.

வடக்கு கிழக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் இவர் மீதான குற்றப்பத்திரிகை மாகாண முதலமைச்சரின் உள்துறைச்செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டபோது சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டார். ஆயினும் வரதர் நாட்டை விட்டுப் போகும் போது நல்லதொரு காரியத்தை செய்ய விரும்பி மீள் நியமனம் செய்யுமாறு உள்துறைச்செயலாளரைப் பணித்தார். கோட்டான் மீண்டும் குடியேறியது.

1990 இல் இரண்டாவது ஈழப்போரின் காரணமாக அகதிகளுக்கான நிவாரணப் பொருளை அரசு அனுப்பிய போது அதை மொத்த வியாபாரிக்கு விற்று பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டதும் சீமான் கொழும்பில் பெலிமார் ஹொட்டலில் மூன்று மாதம் அஞ்ஞாத வாசம் செய்தார். அப்பாவிகளை பிடிப்பதில் வல்லவர்களான வாழைச்சேனை பெற்றோல் செற் இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் கப்டன் சொய்சா, வாழைச்சேனை காகித ஆலை ராணுவ முகாம் பொறுப்பாளர் பிரிகேடியர் கருணாதிலக ஆகியோர் விறுதா விதானையை பிடிப்பதாக உரைத்த சூழ் வாழைச்சேனை முழுவதும் கேட்டதாம். அப்போதிருந்த மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் ஆர்.தியாகராசா கூடச் சூழ் உரைத்தாராம்.

பலன் என்ன! மீண்டும் ஹனிபா ஓட்டமாவடி புக்கான்.

இவருடன் முரண்பட்ட உயர் அதிகாரியான ஓட்டமாவடி உதவி அரசாங்க அதிபர் ஏ.சி.எம்.சாதிக்கின் அவர்களை கஜ ரத துர பதாதிகளுடன் போய் தையப்புடைத்தார். 1992இல் உதவி அரசாங்க அதிபராக ஏ.கே.உதுமான் அவர்கள் நியமனம் பெற்றதும் விறுதா விதானை அவரது வீடு வரை சென்று வீட்டைச் சேதப்படுத்தினார். பின்னாளில் உதுமானின் படுகொலையுடன் இவர் பேசப்படும் பேற்றையும் எய்தினார்.

கிழக்கில் 1991 டிசம்பரில் பெய்த கடும் மழைக்கு 93இல் நிவாரணம் வழங்க முடிவெடுக்கப்பட்ட போது கற்குடாவில் ஹனிபா அவர்களின் கிராம சேவையாளர் பிரிவுக்குமட்டுமே நிவாரணம் வழங்கப்பட்ட பெருமைக்கும் அன்னாரே காரணம். இவை தவிர இவரின் கொடைச் சிறப்புக்குக்கான சில ஆதாரங்களும் உள்ளன.

1. மோன குருசாமியின் தங்கச்சி திருமணத்துக்கு எட்டு கிடாய்களும் சம்பா அரிசி மூடைகளும் அனுப்பி வைத்தார.

→15

# நீயுமா சுவிஸ்?

அண்மையில் சுவிற்சலாந்திலிருந்து இலங்கை வந்திருந்த அந்நாட்டின் 'உண்மை அறியும் குழுவினர்' கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த பின் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் திரட்டியுள்ள 'உண்மை'களின் அடிப்படையில் சுவிஸிலிருக்கும் 12,000க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவர் என்று தெரியவருகிறது.

கொழும்பிலுள்ள சுவிஸ் நாட்டு ஸ்தானிகராலயத்தை சேர்ந்த **மைக்கல் மோர்ஃப்**, சுவிற்சலாந்திலுள்ள அகதிகளுக்கான அலுவலகத்தை சேர்ந்த **ஸ்ரீபன் பாராக், கிறிஸ்தோபர் எரிக்ஸ்மன்** ஆகியோரைக் கொண்ட இக்குழு தெரிவித்த தகவலொன்றின்படி சுவிஸில் 24,000 இலங்கையர்கள் இருக்கின்றனர். இவர்களில் 6,000 பேருக்கு அந்நாட்டுப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது. இன்னொரு 6,000 பேருக்கு பிரஜா உரிமை வழங்கப்படவுள்ளது. மிகுதி 12,000 பேர் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

இங்குள்ள நிலைமைகள் அகதிகள் திருப்பி அனுப்பப்பட உள்ளனவா என்று ஆராய்வதகற்காக வருகைதந்த இவர்கள், இங்குள்ள நிலைமைகள் திருப்திகரமாக உள்ளதாகவும் அகதிகள் திருப்பி அனுப்பப்பட முடியும் என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அகதிகள் குடியேறியுள்ள மற்றைய நாடுகளைப் போலல்லாமல், சுவிஸ் இங்கு அகதிகளை திருப்பி அனுப்புவதில் ஏற்கெனவே தீவிரமாக உள்ளது தெரிந்ததே. அண்மையில் சரிநிகர் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்த முரளிதரன் என்ற இளைஞர் தன்னை எவ்வாறு சுவிஸ் அரசாங்கம் நாடு கடத்தியது என்று தெரிவித்திருந்தார். சுவிஸில் தான் எவ்வாறு பொலிஸாரால் நடாத்தப்பட்டார் என்பதைத் தனது முதுகில் இருந்த காயங்களைக் காட்டி விளக்கியிருந்தார்.

அகதிகளை நாடு திருப்பி அனுப்புவதற்காக அவர்களை துன்புறுத்தவும் சுவிஸ் பொலிஸ் தயங்காது என்பதற்கு ஒரு முரளிதரன் மட்டுமல்ல பல உதாரணங்கள் உண்டு!

இவ்வளவுக்கும்பால் சுவிஸ் அரசு சுவிஸிலுள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என முடிவெடுப்பது நகைப்பிற்கிடமானது. அதுவும் திருப்பி அனுப்புகின்ற முடிவை எடுப்பதற்காக, சுவிஸிலிருந்து இருவரை இலங்கையில் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி, அவர்கள் நிலைமை சுமுகமாகவிருக்கிறது என்று கூறுவதை வைத்து அம்முடிவு எடுக்கப்படவுள்ளது.

சுவிஸ் அரசு தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது என்று முடிவெடுப்பது குறித்து சொல்வதற்கு ஒன்றுமில்லை. அது அந்த நாட்டின் முடிவு.

அதற்காக கிழக்கு மாகாணத்தில் நிலைமை சுமுகமாக இருக்கிறது என்று உண்மைக்குப் புறம்பாக அறிவிப்பது தென்பதை என்னவென்பது?

ஒருவேளை, இவர்கள் கிழக்கு என்று நினைத்து வேறெங்காவது போய்வந்தார்களோ தெரியவில்லை! முடிவுகளை நியாயப்படுத்த தகவல் திரட்டுவோர் பட்டியலில் சுவிசும் சேர்ந்து கொண்டுள்ளது போலும். வாழ்க சுவிஸ் தேசம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



௨

# பனை வளரும் நிலத்தில்...

டி.சிவராம்





எனது 'முதலாவது' யாழ்ப்பாணப் பயணத்தைப் பற்றித் தொடர்ந்து எழுதுவதற்குக் கால அவகாசம் கிடைக்காத வண்ணம் அடுத்த பயணம் ஒழுங்காகிவிட்டது. இம்முறை **ஒப்சேவர்** பத்திரிகை ஆசிரியர் **அஜித் சமரநாயக்க**, 71இல் நடைபெற்ற ஜே.வி.பி. ஆயுதக்கிளர்ச்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் தற்போது ,ராவய பத்திரிகையின் ஆசிரியராக இருப்பவருமான **விக்டர் ஐவன்** ஆகியோருடன் வடக்கு நோக்கிப் பிரயாணமானேன். அத்துடன் சென்ற தடவை போல் தமிழோசையின் ஆனந்தியும் என் கூட. அஜித்தும், ஐவனும் பழைய இனிய நண்பர்களாதலால் பயணம் எச்சந்தர்ப்பத்திலும் அலுப்புத்தட்டவில்லை.

தமிழர் பிரச்சினை தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் திட்டவட்டமான முறையில் துணிச்சலாக தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்துள்ள ஐவனுக்கு யாழ்ப்பாணத்தில் மிகுந்த மதிப்புடன் கூடிய வரவேற்பைக் காணக்கூடியதாக இருந்தது. பல இளம் புலிகளுக்கும் யாழ்ப் புத்திஜீவிகளுக்கும் அஜித் சமரநாயக்காவைப் பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இது சற்றுக் கவலைக்கிடமாகப்பட்டது. ஏனெனில் இனப்பிரச்சினை தொடர்பாக தென்னிலங்கையில் நீண்ட காலமாகப் பயப்படாமல் எழுதிவரும் ஒரு சிறந்த ஆங்கில எழுத்தாளர் அஜித். அவரது சிங்கள எழுத்துக்கும் நல்ல மதிப்புண்டு. இரண்டாவது ஈழப் போர் தொடங்கிய காலத்தில் சண்டே ஐலன்ட் ஆசிரியராக அவர் இருந்த போதுதான் இலங்கைத்தீவில் இரண்டு இராணுவங்கள் உள்ளன என்றும் புலிகள் ஒரு மரபுவழி இராணுவமாக உருமாறியுள்ளனர் என்றும் நான் எழுதிய கட்டுரைகள் அப்பத்திரிகையில் வெளிவந்தன. தன்னைப் பற்றிக் குடாநாட்டில் அதிகம் தெரிந்திருக்கவில்லை என்பது அஜித்திற்கு சற்று வியப்பாகத் தானிருந்தது. இப்படியாகச் சிற்சில உறுத்தல்கள் இருந்தாலும் தாண்டிக் குளத்தினூடாக யாழ்ப்பாணம் சென்றதும், வழி நெடுக கண்ட யுத்த அழிவுகளும், தமிழர் படும் துயர்களும், புலிகளின் தேச நிர்மாண முயற்சிகளும், அஜித்திலும், ஐவனிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டன எனக்கூறினால் மிகையாகாது.

89 - 90 இல் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியைப் போல புலிகளும் ஒரு முரட்டுத்தனமான பாசிச இயக்கம் என தென்னிலங்கையில் ஒரு கருத்து பல புத்திஜீவிகள் மத்தியில் காணப்படுகிறது. ஐவனும், அஜித்தும் புலிகளுடன் மேற்கொண்ட பல சந்திப்புக்களின் பின் இக்கருத்து மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியது என எண்ணுகின்றனர். இப்படியான எண்ணம் அவர்களில் தோன்ற காரணமாக அமைந்தவற்றுள் ஈழநாதம் ஆசிரியர் ஜெயராஜ் உடன் நடைபெற்ற மதிய உணவுச் சந்திப்பைக் கூறலாம். யாழ்ப்பாணத்தில் பத்திரிகைச் சுதந்திரம் கிடையாது. ஆனால் தென்னிலங்கையில் அது சாத்தியமாவதால்தான் பல குறைகளைச் சுட்டிக்காட்டியும், அரசியல் தலைமைகளை விமர்சித்தும் செயல்படக்கூடியதாக இருப்பதாக ஐவன் ஒரு பலத்த விமர்சனத்தை அந்தச் சந்திப்பில் முன்வைத்தார் அங்கு ஈழநாதம் பத்திரிகையின் இயக்குனரும் புலிகளின் முக்கிய உறுப்பினருமான தினேஷ் (வவுனியா) இருந்ததாக ஞாபகம்.

ஐவனுடைய விமர்சனத்தை ஜெயராஜ் கவனமாகச் செவிமடுத்து தொடர்ந்து விரிவான விவாதத்தில் ஈடுபட்டதும், பின்னர் மதிய விருந்தில் மிகக் கரிசனையாக உபசரித்ததும் ஐவனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது என்பது அன்று மாலை ஞானம் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற சம்பாஷனையில் புலப்பட்டது.

புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனுடன் நடைபெற்ற சந்திப்புக்களும் எனது இரு சிங்கள நண்பர்களிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்பது தெளிவாகத் தெரிந்தது. அதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, நடேசன் பல வருடங்களாகத் தென்னிலங்கையில் உள்ள ஒரு இடதுசாரிக் கட்சியுடன் தொடர்பாக இருந்தவர் என்பதும் அதன் காரணமாக அவருக்கு பல சிங்கள இடதுசாரித் தலைவர்களைத் தெரிந்திருந்தது



அஜித் சமரநாயக்க

என்பதுமாகும். தென்னிலங்கை இடதுசாரி அரசியலலைப்பற்றியும், அதன் பல நெழிவு சுழிவுகளைப் பற்றியும் நடேசன் இவர்களுடன் சரளமாகச் சிங்களத்தில் உரையாடியது இவர்களை 'நெகிழ' வைத்துவிட்டது. இப்படியான ஒரு நபர் புலி அமைப்பினுள் முக்கிய பதவி வகிப்பது நன்றன்றோ எனப் பேசிக் கொண்டார்.

இரண்டாவது விடயம், நடேசனுடைய மனைவி வினீதா ஒரு சிங்களப் பெண் என்பதாகும். அவரைப் பற்றி ராவய நடத்தும் சஞ்சிகையில் படத்துடன் ஏற்கெனவே கட்டுரை வெளியாகி இருந்தது. தமது அரசியலையும், மொழியையும், கலாசாரத்தையும் உள்ளிருந்து புரிந்து கொண்ட மனிதன் ஒருவன் புலிகளினுள்ளும் உண்டு எனும் எண்ணம் எனது நண்பர்களிருவருக்கும் ஒரு பரமதிருப்தியைக் கொடுத்ததென்பது புரியக்கூடியதாயிருந்தது. ஆனந்தியுடன் வேறு நிகழ்ச்சி ஒன்றிற்குச் செல்ல வேண்டியிருந்ததால் நடேசனுடைய சந்திப்பிற்குப் போக முடியவில்லை. நடேசனைப் பின்னர் உண்ணாவிரதம் இருந்த பொலிசாரின் விடுவிப்பின் போது சந்திக்கக் கூடியதாயிருந்தது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். தென்னிலங்கையின் பல பகுதிகளில் பொலிஸ் சேவையில் கடமையாற்றியிருக்கிறார்.

நடேசன் அவ்விடம் இருந்தமையால் சிங்களப் பொலிசாரின் விடுவிப்பை ஒட்டி 'ராவய' பத்திரிகைக்காக தமிழ்ச்செல்வனுடன் எடுத்த பேட்டியை மொழி பெயர்ப்பது சுலபமாயிற்று. விடுவிக்கப்பட்ட பொலிசார் பலரிற்கு தமிழ் நன்றாகத் தெரிந்திருந்தது. அவர்கள் அனைவரின் சார்பிலும் ஒருவர் தமிழில் நீண்ட நன்றியுரையாற்றினார். நன்றியுரையில் கூடுதலாக தம்மை இவ்வளவு காலமும் எவ்விதத்திலும் கவனிக்காது விட்டிருந்த அரசை கடுமையாகச் சாடினார். இன்னொரு பொலிஸ்காரர் சிங்களத்தில் மிக நீண்ட உரையாற்றி அலுப்புத்தட்ட வைத்துவிட்டார். இதன்பின் செஞ்சோலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு அனைவரும் செல்ல அழைப்பிருந்தது. தமிழீழத் தேசியக் கொடியேற்றத்தை ஓரமாக நின்று பார்த்துவிட்டு என் சிங்களச் சகபாடிகள். உணவுக்குச் சென்றுவிட்டனர். எனக்கும் அவர்களுடன் கூடப்போய்விடலாம் என கடும் உந்தல். ஆனால் ஆனந்தியால் விடாப்பிடியாக மறிக்கப்பட்டுவிட்டேன். நின்றது ஒருவகையில் நல்லதாயிற்று. பாதாள பங்கரில் வைத்து விசாரிக்கப்படுவதாக தென்னிலங்கையில் பரவலாகக் கருதப்படும் யோகரத்தினம் யோகி விழாவிற்கு வந்து இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்தார். பிரதம விருந்தினர் தமிழ்ச் செல்வன். போட்டியில் வென்ற சில சிறுமியருக்குப் பரிசளிக்க யோகி பல தடவைகள் அழைக்கப்பட்டார். அறிவிப்பாளர் அவரை விடுதலைப்புலிகள் உறுப்பினர் யோகி என்றே



வீக்டர் ஐவன்

குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சிக்கு காந்தரூபன் அறிவுச் சோலையிலிருந்தும் ஒரு பஸ்ஸில் பல சீருடையணிந்த சிறார்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். குடாநாட்டில் உள்ள அனாதைச் சிறாருக்கு அறிவுச் சோலையும், சிறுமியருக்கு செஞ்சோலையும் அமைக்கப்பட்டுள்ளன. (ஏனைய பகுதியிலுள்ள தாய் தந்தையற்ற குழந்தைகளும் இவற்றில் சேர்க்கப் படுகின்றனரா எனத்தெரியவில்லை) இவர்களுக்கு இசை தொடக்கம் கராட்டி வரை பல விடயங்கள் கற்பித்துக் கொடுக்கப்படுகின்றன. முறுக்கேறிய ஒரு பார்வையுடன் காந்தரூபன் அறிவுச்சோலைச்சிறார்கள் கறுப்புச்சீருடையில் அணிவகுத்து வாகனத்திலிருந்து இறங்கி நின்றதைப்பார்க்க ஐவனுக்குச் சற்றுத் திகைப்பாகிவிட்டது.

தம் குழந்தைகளுக்கு கல்வியூட்டும் வசதி கூட இல்லாத மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியருக்கும் பல பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்வியூட்டல் நடைபெற்றுவருவதாக அறிந்தேன். காணக்கிடைக்கவில்லை.

இதனிடையில் ஒரு நாள் மாலை நெல்லியடியில் ஒரு கலை நிகழ்ச்சியைக் காணச் சென்றிருந்தேன். பிரமாண்டமான கூட்டம். கரும்புலி மில்லர் தாக்கியழித்த இராணுவமுகாம் இருந்த பாடசாலையின் மைதானம். ஆவியின் இனியவள் என்று ஒரு நாடகம். பேய், மோகினி இந்தவகையில் ஏதோ ஒரு விகட நாடகமோ என எண்ணினேன். காசி ஆனந்தனின் தமிழ் ஈழ முழக்கத்தில் அள்ளுண்டு அவருக்கு இரத்தப்பொட்டு வைக்க வரிசையில் நின்ற அந்தக்காலத்தில் மட் /முத்தவெளி அரங்கில் இவ்வாறான பெயர்களில் நகைச்சுவை நாடகங்கள் பௌர்ணமியில் நடைபெறுவதுண்டு. நாடகம் தொடங்கிய பின்னர்தான் விளங்கிற்று, ஆவி என்பது தனித்தமிழென்று. அதாவது தமிழீழத்தாய் பற்றிய நாடகம். அவள் உயிரினும் (ஆவி) இனியவள். அடுத்த நாடகம் ''அவள் ஒரு மாதிரி'' இரண்டிலும் யாழ் சமூகத்தில் ஊறிப் போயிருக்கும் பல போலி மனோபாவங்களுக்கு நல்ல அடி கொடுக்கப்படுகின்றது. கலைப்பெறுமானத்தில் பெரும் தொய்வேற்படாதவாறு செய்திருந்தனர். மேடையில் தம்மைக் கண்டு மகிழந்தனர் யாழ் மக்கள். அந்த நாடகத்தில் சுருக்கமான, பவ்வியமான ஒரு காதல் காட்சி. அமைதியாகவும் இடையிடையே சற்றுச் சிரித்துக் கொண்டும் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் கடும் கிளுகிளுப்புக் கொண்டு ஓசையெழுப்பிற்று. திடீரென கட்டுண்டு உணர்ச்சிகள் பீறிட்டது போல.

காலங்காலமாக யாழ் சமூகத்தில் காணப்பட்டு வந்த பல பிறழ்வுகளுக்கு காரணமான தூய்மைவாதத்தை சட்ட ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் இறுக்கிப்பிடித்து நடைமுறைப்படுத்தும் போது சிக்கல் வராமல் போகாது. தூய்மைவாதப் பிடியினுள் சிறு சந்தர்ப்பம் கிடைப்பினும் திமிறுவது மனித இயல்பு. நெல்லியடியில் அது தெரிந்தது.

யாழ் தூய்மைவாதப் பாரம்பரியத்தின் சிக்கலுக்குரிய எல்லைகள் எவை என்பதை புலிகள் மதிப்பிட்டுச் செயல்படுவதே ஆரோக்கியமானது.

பாலசிங்கமும் அவரது மனைவியும் நாம் புறப்படு முன்னர் எமக்களித்த இரவு விருந்தில் தரப்பட்ட அனைத்து உணவுவகைகளையும் எம்மால் ஒரு கை பார்க்கமுடியாத அளவிற்கு வயிறு முட்டிப் போயிற்று.

உபசரித்த புலிகளுக்கு இவர்களால் இவ்வளவு சொற்பமாகத்தான் உண்ணமுடிகிறதா என ஆச்சரியம் முகத்தில். கலாநிதி பாலசிங்கத்திற்கு நாம் சென்ற வேளையில் சுகயீனம், சின்னமுத்து என்றார். பேசிக் கொண்டிருக்கையில் அவருடைய ஊர் மட்டக்களப்பில் உள்ள மண்டூர் என்பதை அறிந்து கொண்டேன். பாட்டனார் மண்டூர் கந்தசுவாமி கோயில் குருக்கள் பரம்பரையைச் சேர்ந்தவராம்.

புறப்படும் நாள் வந்தது. கவலைதான். கிளாலிக்கடலின் ஒரு பக்கம் சூரியன் மெல் இளஞ்சிவப்பாக உதித்துக் கொண்டிருந்தது. மீண்டும் மீண்டும் வருவேன் எனச் சொல்லிக்கொண்டேன் கடல் மாதாவிடம். அவளுக்கு என்னைத் தெரியும். நான் மீள்வேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வ.ஐ.ச.

# தொடர்க நின்பணி!

முஸ்லிம்களைப் பற்றிப் பேச முஸ்லிம் அரசியல் தலைவர்களே மறந்து போன கால கட்டத்தில் சரிநிகரிலும், ஏனைய தமிழ்ப் பத்திரிகைகளிலும் முஸ்லிம்கள் பற்றிய ஆக்கங்களை எழுதி வரும் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களை எப்படிப் பாராட்டுவது என்று எமக்குத் புரியவில்லை.

சரிநிகர் இதழ் 67ல் வெளிவந்த ''முஸ்லிம்களும் ஒரு சில கனவுகளும்'' என்ற ஜெயபாலன் அவர்களின் ஆக்கம் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு படிப்பினையாக விளக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் புத்திஜீவித்துவ தலைமைத்துவத்தின் பணியையும் சுட்டிக் காட்டுகிறது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அவர்கள் பாதிக்கப்பட்ட காலங்களில் எவ்வாறு தென்னிலங்கை இடதுசாரிகள் குரல் எழுப்பினார்களோ, அவ்வாறே இனத்துவ எல்லைகளைக் கடந்து நீர் முஸ்லிம் சமூகத்திற்காக எழுப்புகின்ற உரிமைக் குரல் எம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது.

உமது மானுட நேயத்தை நாங்கள் போற்றுகிறோம். தொடர்க நின் பணி!

**அமைப்பாளர்**
**கல்வி அபிவிருத்தி மாநாடு**


## மட்டக்களப்பு கல்வி திணைக்கள ஊழல்:

# மேலும் சில தகவல்கள்!

68 வது இதழின் 2ம் பக்கத்தில் ''மட்டக்களப்பு ஊழல்கள்'' என்று பெரிய தலைப்பிட்டு ''சொல்லாமல் கொள்ளாமல் வந்திறங்கிய தளபாடங்கள்'' எனும் முதலாவது உப தலைப்பில் வெளிவந்த குறிப்பு தொடர்பாக இக்கருத்தை வெளிப்படுத்துகின்றேன்.

மட்டக்களப்பில் ஊழலுக்குப் பேர் போன திணைக்களம் என்று கல்வித்திணைக்களம் பற்றிய உண்மையை தெளிவாகச் சொல்லிவிட்டு, அதே உண்மையின் குரல்வளையை அடுத்த பந்தியில் நசித்துக் கொலை செய்து விட்டு ஊழலின் உச்சங்களை இராமர்களாகக் காட்டுகிறீர்கள். மட்டக்களப்புக் கல்வித் திணைக்களத்துக்கு எஸ்.எஸ்.மனோகரன் கல்வி பணிப்பாளராக வந்த பின்தான் அத்திணைக்களம் ஊழலில் சாதனை படைத்ததுடன் மட்டக்களப்பின் கல்வித்தரம் அதல பாதாளம் வரை அடிபட்டுச் சென்றுள்ளது.

உண்மையில் தளபாடத்தை தயாரித்து வழங்கும் பொறுப்பு முன்னாள் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வோல்டர் நாணயக்காரவினால் ஆஞ்சநேயர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு அதனை மேற்பார்வை செய்யும் பொறுப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ஜே.முத்துராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் இணைப்பாளராக கல்வித்திணைக்கள இலிகிதர் சுந்தரலிங்கம் என்பவர் நியமிக்கப்பட்டார். இந்த சுந்தரலிங்கம் தான் தற்போது மனோகரனால் அடிக்கப்படும் பகல் கொள்ளைகளுக்கு உடந்தையானவர் (மற்றையவர் களஞ்சியக் காப்பாளர் கிருஸ்ணானந்தன்).




எனவே இந்த தளபாட கொந்துறாத்து விடயத்தில் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றவர்கள் சுந்தரலிங்கமும், இவரூடாக கல்விப்பணிப்பாளர் மனோகரனும், முத்துராஜாவுமே தவிர பொறியியலாளர் தேவ தீபனல்ல. உண்மையில் ஆஞ்சநேயர் சண்முகராசாவும் தேவதீபனும் பரம விரோதிகள். அத்துடன் தேவதீபனுக்கும் மனோகரனுக்கும் இடையில் இடம் பெறும் பனிப்போரில் தேவதீபனை மடக்கவும், அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரின்ஸ் காசிநாதரைப் பழிவாங்கவும் சரிநிகர் பயன்படுத்தப்பட்டது ஒன்றும் புதுமையான விடயமல்ல.

**கே.மாசிலாமணி**
**மட்டக்களப்பு**

## மறுக்கிறார்

# இப்ராஹிம்

தங்களின் சரிநிகர் பத்திரிகையான பெப்.23 - மார்ச் 08, 1995, இதழ் 66ல், பக்கம் 16, 15ல் வெளியிட்டுள்ள ''4000க்கு 2000 தா! 1500 க்கு 500தா!'' என்ற செய்தியில் என்னை மக்கள் அன்போடு அழைக்கும் ''சலுசல இப்றாகிம்'' என்ற பெயரைக் குறிப்பிட்டு எழுதியுள்ள அர்த்தமற்ற செய்தியினால் என் மனநிலையும், குடும்ப கௌரவமும் பாதிக்கப்பட்டுள்ளதோடு என் சுய கௌரவத்திற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதனால் அச்செய்திக்கு என்னுடைய மறுப்பையும், ஆட்சேபனையையும் வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கிறேன்.

மேற்படி இதழில் செய்தியாளரின் பெயரைக் கூடக் குறிப்பிடாமல் வெளியான இச்செய்தியில் என் பெயரைக் குறிப்பிட்டுள்ளதால் இவ்வூரிலே பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்கல்விக்குத் தெரிவாகியுள்ள என் பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, சுமத்தியுள்ள குற்றச்சாட்டினை சட்டப்படி நீரூபித்துக் காட்டுங்கள். இல்லையேல் மறுப்புத் தெரிவித்து பத்திரிகை தர்மத்தினைக் காப்பாற்றுங்கள்.

**ஏ.எல்.எம். இப்றாலெவ்வை**
**கிராம உத்தியோகத்தர்**
**காத்தான்குடி.**

*★ இக்கடிதம் காத்தான்குடி மக்களுக்குச் சமர்ப்பணம்*

*ஆ-ர்*

## விமர்சனம் தருக

கடந்த 8-9 மாதங்களாக எனது கட்டுரையை சரிநிகரில் பிரசுரம் செய்து உதவியமைக்காக உங்களுக்கும் அதில் ஈடுபாடு கொண்டு உதவிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கட்டுரை சம்பந்தமான அபிப்பிராயங்களையும், விமர்சனங்களையும் எதிர்பார்கிறேன். அதனை நூலாக வெளியிடும் போது திருத்திக்கொள்ள முனைகிறேன். சரிநிகர் இதழுக்கு இதழ் சிறப்பாக பல விதமான அம்சங்களையும் உள்ளடக்கியதாக வந்து கொண்டிருக்கின்றது. பாராட்டுக்கள்.

**வி.ரி.தர்மலிங்கம்**
**தலவாக்கலை**

# பணிக்குப் பாராட்டு!

ஒழிவு மறைவின்றி நாட்டில் நடக்கும் நன்மை தீமைளை கடந்த பல வருடங்களாக தயக்கம் இன்றி எழுதி வரும் தங்கள் பத்திரிகையைப் பாராட்டுகின்றேன். ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு அரசியல் கட்சி சார்ந்த போக்கில் உள்ள இக்காலகட்டத்தில் சமத்துவமான முறையில் செய்திளை வெளியிடும் தங்கள் பத்திரிகைப் பணி மிகவும் பெறுமதி வாய்ந்த ஒன்று என்பது எனது எண்ணம். மலரும் இப்புத்தாண்டில் உங்கள் பணி சிறப்படைய வாழ்த்துகிறேன்.

**ம.வர்ணகுலசிங்கம்**
**செங்கலடி**

# பாலம்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து சில மாதங்கள் கடந்து விட்டபோதும், அது இன்னமும் தனது நடவடிக்கைகளை 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு சட்டத்திற்கமையவே செய்துவருகிறது. இந்த அரசியலமைப்புச் சட்டம்தான், எதேச்சாதிகாரமிக்க ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வழிவகுத்த அரசியலமைப்புச் சட்டமாகும். இந்த மோசமான நிலைமையை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கிலான ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை விரைவிலேயே தயாரிப்பது பற்றி நீதி மற்றும் அரசியலமைப்பு சட்டவியற்துறை அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் நடாத்திய பல பத்திரிகையாளர்கள் மாநாடுகளில் தெரிவித்திருந்தார்.

இப்புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி பாராளுமன்ற அங்கத்தவர்களின் தொகை 245 ஆகவும், அவற்றில் 168 பேர் தொகுதிகளிலிருந்தும் ஏனைய 77பேர் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படுவார்கள் என்று அவர் தெரிவித்திருந்தார். அவரது புதிய அரசியலமைப்புச் சட்ட நகல் ஜனநாயக மரபுகளை மீளக்கொண்டுவருவது பற்றியும் கூறுகிறது. விருப்பத்தெரிவு முறை, போனஸ் ஆசன முறை, கட்சிகளுக்கு பிரதிநிதிகளை வழங்குவதற்கான வெட்டுப் புள்ளிமுறை என்பனவற்றை இல்லாமல் செய்வதுடன், நடத்தப்படாமல் இருக்கும் இடைத்தேர்தல்களை நடாத்துதல் என்பவை பற்றி தெரிவிக்கிறது. எப்படியோ, ஜீ.எல்.பீரிஸ் அவர்களின் புதிய அரசியலமைப்பு சட்டம் தொடர்பான சுருக்கமான இந்த விளக்கம், விரிவான, தீர்மானகரமான அபிப்பிராயம் ஒன்றுக்கு வருவதற்கு போதுமானதாக இல்லை. இங்கு நிலவுகின்ற இனப்பிரச்சினையின் தோற்றத்திற்கான பிரதானமான காரணமாக இலங்கை அரசாங்கங்களின் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவ கருத்தமைவை குறிப்பிடலாம். அரசு தனது கள்ளத்தனமான எதேச்சாதிகாரத்தை நாட்டின் எல்லா சமூக, பொருளாதார, கலாசார கட்டமைவுகள் மீதும் ஆழ வேரூன்றிப் பரவிவிட்டுள்ளது. இந்த நிலைமையானது, தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் கூட தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக ஆயுதங்களை தூக்க வைத்துள்ள அளவுக்கு மோசமாக இருந்துள்ளது. மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் கூடிய புரிதலுடனேயே நாம் செயற்பட வேண்டும் என்பதையே இவையெல்லாம் காட்டுகின்றன. அரசாங்கத்தைப் பொறுத்தவரை புதிய அரசியலமைப்பு சட்டத்தை தயாரித்தலும், இனப்பிரச்சினையை கையாள்வதும் இருவேறு பிரச்சினைகள் என்று கருதுவதாக தெரிகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினையின் தார்ப்பரியம் பற்றிய புரிதலே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பற்றிய அக்கறையோ இல்லாமல் ஒரு அரசியலமைப்புச் சட்டம் தயாரிக்கப்படுவது என்பது சாத்தியமற்றது. ஏனென்றால், இன்றைய பேச்சுவார்த்தைகளுக்கும் உருவாகவுள்ள அரசியல் தீர்வுக்கும் ஒரு உள்ளார்ந்த இணைப்பு இருக்கிறது; இதை உள்ளடக்காத அரசியலமைப்புச் சட்ட வரைபு நடைமுறை சாத்தியமான, ஜனநாயக பூர்வமான ஒன்றாக கொள்ளப்பட முடியாது.

அரசாங்கத்தின் அரசியலமைப்பு சட்ட வரைபை செய்வதற்கான நோக்கங்களுடன் ஒத்துப்போகும் விதத்தில் ''இலங்கைக்கான ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பு'' என்ற பெயரிலமைந்த அரசியலமைப்பு சட்டநகல் ஒன்றை ''அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான இயக்கம்'' என்ற பெயரிலான அமைப்பு சிறு பிரசுரமாக வெளியிட்டுள்ளது.

இந்த அமைப்பு (முகவரி: 18/2 அலோசாலை, கொழும்பு-3) மோர்ஜ் நிறுவனத்தின் இன்னொரு பிரிவாக இருக்கவேண்டும் என்று கருதுகின்றேன். முதலிலேயே தெரிவிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், இந்தப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள முன்மொழிதல்களின் கட்டமைப்பானது மிகுந்த பாராட்டுதல்களுக்குரியது என்பதே. அவர்களது இந்த கட்டமைப்பு, மிகவும் ஆழமான, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான பயனுள்ள கருத்துக்களை தருவதை பிரசுரத்தைப் பார்ப்பவர் புரிந்து கொள்ளலாம். சில மாதிரிக்கான தலைப்புக்கள்:

1. சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றுக்கான அடிப்படை அம்சங்கள்
2. தேசிய அளவிலான, பிராந்திய அளவிலான, நீதித்துறை நிர்வாக அமைப்புக்களின் இயல்புகள்.
3. அதிகாரப்பகிர்வின் கட்டமைப்பு
4. அதிகார அலகுகள்
5. அதிகார பரவலாக்கத்தின் அளவு.
6. மத்திய அரசினதும், பிராந்தியங்களினதும் அதிகாரங்கள்
7. பிராந்திய அதிகாரங்கள், சட்டமும் ஒழுங்கும்.....

இனப்பிரச்சினையினை மிகவும் ஆழமாகப் புரிந்துகொள்ளமுயலும் இந்த நகல் மக்கள் மத்தியில் பரவலாக்கப்படுவது அவசியமாகும். இலங்கையை ஒரு பிராந்திய அலகுகளைக் கொண்ட சமஷ்டி அமைப்பாகவும், இலங்கை அரசை இனமதச் சார்பற்ற ஒரு அரசாகவும், மலையக மக்களது அரசியலுரிமைகளை காப்பதில் கவனம் செலுத்துவதாயும் உள்ள இந்த நகலை ஒரு மார்க்சிய நோக்கு நிலையில் இருந்த நான் மதிப்பிடுகிறேன். அவர்களது துணிச்சலும்,

→15

**நிஷாந்த எழுதுவது**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## புதிய தேர்தல் முறை:

# மலையக மக்கள் எதிர் நோக்கும் ஆபத்து!

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து எட்டு மாதங்கள் கூட முழுமையாக ஆகவில்லை. அதற்கிடையில் அரசாங்கம் உருவாக்கப்பட்டதே மலையக மக்களை ஒடுக்குவதற்குத்தான் என்று நினைக்குமளவிற்கு காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அரசின் மேல் மட்டத் தலைமைகள் மௌனமாகவிருக்க கீழ்மட்டத்தலைமைகள் மூலம் அத்துமீறல் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. மலையக அமைப்புக்களை கலந்தாலோசிக்காமலேயே தோட்டங்களை 50 வருட குத்தகைக்கு தனியாரிடம் கொடுப்பதற்கு விலைகள் பேசப்படுகின்றன. மலையக தேசியவாத சக்திகளை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் வகை தொகையற்ற கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போது இதன் தொடர்ச்சியாகப் புதிய தேர்தல் முறையின் மூலம் மலையகத்தில் எழுந்துவரும் அரசியல் சக்தியைச் சிதைப்பதற்கான முயற்சிகள் அரசியல் திட்ட திருத்தத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது நடைமுறையில் இருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையை ஐக்கிய தேசியக் கட்சி தனது நலனின் அடிப்படையில் கொண்டுவந்த போதும் மலையக மக்களின் அரசியல் சக்தியை வெளிக்காட்டுவதற்கு அது உதவியிருந்தது. பாராளுமன்ற மட்டத்திலும், உள்ளூராட்சி சபைகள் மட்டத்திலும் கணிசமான பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கும் வழிசமைத்திருந்தது. அம்பேகமுவ, நுவரெலியா, பிரதேச சபைகளை இ.தொ.கா. தனது சொந்தச் சின்னத்தில் கேட்டு வெற்றி பெறுவதற்கும், 19 வரையிலான மாகாணசபை உறுப்பினர்களைப் பெறுவதற்கும், 11 பாராளுமன்ற உறுப்பினர்களை பெறுவதற்கும் இதனூடாக வழி ஏற்பட்டிருந்தது. உள்ளூராட்சி சபைகளைப் பொறுத்தவரை மலையக மக்கள் குறைவாக இருக்கின்ற இடங்களில் கூட பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடியநிலை இருந்தது.

ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொண்டு வர இருக்கின்ற புதிய தேர்தல் முறையின் மூலம் இவையெல்லாவற்றையும் இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் புதிய அரசாங்கம் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையையும் தொகுதிவாரியான பிரதிநிதித்துவ முறையையும் இணைத்த அடிப்படையில் ஒரு தேர்தல் முறையை அறிமுகப்படுத்த உள்ளது. அதிலும் கூடிய பிரதிநிதிகள் தொகுதிவாரியான முறையின் ஊடாகவே தெரிவு செய்யப்படப்போகின்ற நிலை உருவாக உள்ளது.

இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 245 ஆக அதிகரிக்கப்பட்டு 168 உறுப்பினர்கள் தேர்தல் தொகுதிகளினூடாகவும், 77 உறுப்பினர்கள் மாவட்ட அடிப்படையில் கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குவீதாசாரத்திற்கு இணங்கவும் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. தேர்தல் தொகுதிகளினூடாக தெரிவு செய்யப்பட இருக்கும் 168 உறுப்பினர்களும் இப்போது நடைமுறையில் இருக்கும் 160 தேர்தல் தொகுதிகளினூடாகவே தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலிருக்கும் தேர்தல் தொகுதிகள் பெரும்பான்மை இனத்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வகையிலும், மலையக மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படமுடியாத வகையிலும் உருவாக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளாகவும் பல தொகுதிகளில் மலையக மக்களின் பிரதேசங்கள் கூறு போடப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்களின் பிரதேசங்களோடு இணைக்கப்பட்டுள்ளன. நுவரெலியா. பதுளை, கொழும்பு மாவட்டங்களில் இந்நிலையினை தெளிவாகக் காணலாம்.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியுடன் முன்பு வலப்பன தேர்தல் தொகுதிகளில் இருந்த பல பிரதேங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்திலும் எந்தத் தொகுதியிலுமே மலையக மக்கள் பெரும்பான்மையாக வராத வகையில் சிங்கள பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.


கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மத்தியும், கொழும் தெற்குமே தமிழர் வாழும் பிரதேசங்களாகும். கொழும்பு மத்தியில் தமிழர் வாழும் பிரதேசங்கள் ஒன்றாக இணைக்கப்படாமல், கொழும்பு மத்திக்கும் கொழும்பு வடக்குக்குமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மத்தி தேர்தல் தொகுதியின் வடக்கு எல்லைக் கோடாக கொச்சிக்கடை ஜம்பட்டா வீதியே காணப்படுகின்றது. இவ்வீதிக்கு வடக்கில் உள்ள பகுதிகளும், கொட்டாஞ்சேனை பகுதியும் கொழும்பு மத்திய தொகுதிக்குள் அடக்கப்படவில்லை. இப்பகுதிகள் 60%த்திற்கு மேல் தமிழர்களைக் கொண்ட பகுதிகளாகும். இதேபோன்று கொழும்பு தெற்கு வெள்ளவத்தைப்பகுதி தமிழர்களைக் கொண்டதாகும். அங்கு அப்பகுதி அருகிலுள்ள சிங்கள பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டதால் தமிழர் அங்கு மிகச் சிறுபான்மையாகி உள்ளனர்.

பேரினவாத அரசாங்கங்களின் இத்திட்டமிட்ட தொகுதிப்பிரிப்பினாலேயே இத்தேர்தல் முறை அமுலில் இருந்த காலப்பகுதிகளில் (வாக்குரிமை கணிசமானளவு வழங்கப்பட்ட பின்னரும் கூட) கொழும்பு மத்தியிலிருந்தும் கொழும்பு தெற்கிலிருந்தும் தமிழர் பிரதிநிதிகள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே சோல்பரி குழுவினர் கொழும்பு தெற்கை இரண்டு அங்கத்தவர் தொகுதியாக்கியும் கூட இந்நிலை தொடர்ந்தது.

நுவரெலியா- மஸ்கெலியா தொகுதியில் அது மூன்று அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்ட போதும், 1977 தேர்தலில் மூன்றாவது பிரதிநிதியாகவே தொண்டமானால் வரமுடிந்தது.

எனவே இப்போதுள்ள தேர்தல் தொகுதிகளின் படியே தொடர்ந்து நடக்குமானால் நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியிலிருந்து மாத்திரம் ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்படலாம். சில வேளைகளில் அதுவும் தமிழர் வாக்குகள் சிதறப்படாமல் இருக்குமானால் கொழும்பு மத்தியிலிருந்து ஒரு தமிழர் தெரிவு செய்யப்படலாம். ஏனைய பகுதிகளிலிருந்து குறிப்பாக பதுளை, கண்டி, வன்னி மாவட்டங்களிலிருந்து எவருமே தெரிவு செய்யப்படமுடியாது. (1994 தேர்தலில் வன்னி மாவட்டத்தில் இருந்து பாலச்சந்திரன் என்ற இந்திய வச்சாவழியைச் சேர்ந்தவர் முதன் முதலாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வீதாசார முறையின் மூலம் கிடைக்கும் 77 பிரதிநிதிகளை பொறுத்தவரை நுவரெலியா மாவட்டத்திலிருந்து மாத்திரம் ஒருவர் தெரிவு செய்யப்படலாம். ஏனைய மாவட்டங்களிலிருந்து எவருமே தெரிவு செய்யப்பட முடியாது. எனவே மொத்தமாகப் பார்த்தால் புதிய தேர்தல் முறையின்படி மலையக மக்களின் பிரதிநிதிகளாக இருவர் அல்லது மூவரே தெரிவு செய்யப்படக்கூடிய நிலை உள்ளது. அதாவது பதினொரு பேராக இருந்த மலையக மக்களின் பிரதிநிதித்துவம் மூன்றாகக் குறைபடப்போகின்றது. மலையக மக்களின் தற்போதைய சனத்தொகை வீதாசாரம் 7% மாகும். இதன்படி பார்த்தால் 17 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் அரசின் திட்டமிட்ட சூழ்ச்சியால் இரண்டு அல்லது மூன்று பிரதிநிதிகளே தெரிவு செய்யப்படப்போகின்றார்கள்.



வேலுச்சாமி

இதைவிட உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வீதாசாரப்பிரதிநிதித்துவ முறையை முற்றாக நீக்கிவிட்டு பழைய வட்டார முறையை முழுமையாகப் பின்பற்றப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலை உள்ளூராட்சி மட்டத்திலும் மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கப்போகின்றது.

எனவே, அபாயகரமான இச்செயற்பாடு தொடர்பில் மலையக அமைப்புகள் விழிப்பாக இருக்க வேண்டியது மிக மிக அவசியமானதாகும். பிரதிநிதித்துவ அரசாங்க முறையில் அரசியல் பிரதிநிதித்துவமே ஒரு சமூகத்தின் அரசியல் சக்தியை வெளிக்காட்டுவதாக உள்ளது. இதன் மூலமே அதன் அரசியற்கோரிக்கைகளும், பேரம் பேசும் ஆற்றலும் வலுவடைகின்றன. அவர்களின் பிரச்சினைகள் அரசியல் அரங்கிற்கும் இதன் மூலமே கொண்டுவரப்படுகின்றன. மலையக மக்களின் அரசியற் பிரதிநிதித்துவம் அதிகரித்து வந்த போதெல்லாம் இதன் வளர்ச்சிகளை எம்மால் பார்க்கக்கூடியதாக இருந்தது. எனவேதான் மலையக அமைப்புக்களும் கல்விமான்களும் இது தொடர்பாக மிகவும் விழிப்பாக இருப்பது அவசியமானது.

இம்முறையையே அரசு பின்பற்றுவது என தீர்மானகரமாக முடிவெடுத்திருப்பின் மலையக அமைப்புகள் பின்வரும் கோரிக்கைகளை முன் வைப்பது அவசியமானதாகும்;

**1.** முன்னைய தேர்தல் தொகுதிமுறைகள் கவனத்தில் எடுக்கப்படக் கூடாது. புதிய தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்படவேண்டும். அவ்வாறு உருவாக்கப்படுகின்ற போது மலையக மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாகக்கூடிய வகையில் ஏற்படுத்த வேண்டும்.

**2.** கொழும்பு மத்தி தேர்தல் தொகுதிக்குள் கொச்சிக்கடையின் வடபகுதி, கொட்டாஞ்சேனைப்பகுதி என்பன முழுமையாக உள்ளடக்கப்பட வேண்டும்.

**3.** விகிதாரசார முறையின்படி தெரிவு செய்யப்படுபவர்கள் நாடு முழுவதும் ஒரு தேர்தல் அலகாகக் கருதப்பட்டு தெரிவு செய்யப்படுவதற்கு வழி செய்தல் வேண்டும். (தற்போது தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவது போல) இதன் மூலம் மலையக மக்களின் வீதாசாரத்திற்கேற்ற பிரதிநிதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு அரசாங்கம் ஒத்துக்கொள்ளாவிடின் பின்வரும் ஒழுங்குகளை அரசு மேற்கொள்ளுதல் வேண்டும்:

அ. மலையகத்தில் மலையக மக்கள் செறிவாக வாழ்கின்ற பிரதேங்களை இணைத்து மலையக மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

ஆ. கொழும்புமாவட்டத்தில் சிங்கள மக்கள் பெருபான்மையாக வாழும் பகுதிகளை அருகில் உள்ள மாவட்டங்களுடன் இணைத்து விட்டு அதனை பல்லினமக்களைக் கொண்ட மாவட்டமாக மாற்ற வேண்டும்.

**4.** இம்மாற்றங்கள் அனைத்தும் மலையக மக்களின் வீதாசாரத்திற்கு ஏற்ப ஆகக்குறைந்தது 17 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக் கூடியதாக அமைத்தல் வேண்டும்.

**5.** உள்ளூராட்சி சபைகளில் மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் மலையக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசசபைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

**6.** உள்ளூராட்சிசபைத் தேர்தல்களில் முழுமையாக வட்டார முறையைப் பின்பற்றாது குறைந்தது அரைவாசிப்பிரதிநிதிகளாவது விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படுவதற்கு வழி செய்தல் வேண்டும். இது மலையக மக்கள் ஐதாக வாழ்கின்ற இடங்களில் அவர்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு உதவுவதாக அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# பெண்ணிலைவாத நோக்கில்

## தமிழ் சினிமா -இறுதிப் பகுதி

கவர்ச்சியாக நடிக்குமாறு நடிகைகள் வற்புறுத்தப்படுவது இங்கு அவதானிக்கத்தக்கது. போட்டிச் சந்தையில் யாருடைய கவர்ச்சிக்கு அதிக மதிப்பு இருக்கிறதோ அவர்களுக்கு ஊதியம் அதிகம். இதுதான் தமிழ் சினிமாவின் நிலை. நடிகை சுஜாதா ''என்னை 'றியல்' நம்பூதிரிப் பெண் போலவே கொஞ்சம் செக்ஸியாக நடிக்க வேண்டும் என்று கேட்டார்கள். உடலில் துணி இல்லாமல் என்னால் நடித்துக் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டேன்.'' என்கிறார். அதே படத்தில் இன்னொரு நடிகையை வைத்து அப்படி ஒரு காட்சி எடுத்து விட்டு சுஜாதா அப்படி நடந்ததாக விளம்பரம் கொடுக்கப்பட்டது. ''அதே படத்தில் நடித்த இன்னொரு நடிகைக்கு என்னைப் போல உருவ ஒற்றுமை இருப்பதைக் கண்டு அந்த நடிகையை டூப்பாக வைத்து என் பெயரை அலங்கோலப்படுத்தி இருக்கலாம் என நினைக்கிறேன்'' என்கிறார் நடிகை சுஜாதா. சமீபத்தில் சாவி சஞ்சிகையில் ஒரு துணுக்குப் போடப்பட்டிருந்தது. ''ஒரு படத்திற்காக அண்ணா சாலையில் பானர் வைக்கப்பட்டது. விளம்பரத்தில் சீமாவை செக்ஸிராணி, இரவுராணி என்று குறிப்பிட்டிருந்தார்கள். செக்ஸ் ராணி ஓ.கே. இரவு ராணி என்றால் ...........? விபரீதமான விளம்பரம் அல்லவா? '' இத்துணுக்கில் இருந்து நடிகைகளை வைத்து நடைபெறும் வியாபாரத்தை அறிய முடிகிறது. ஒரு பேட்டியில் நடிகை ஸ்ரீதேவி கூறுகிறார். '' ஒரு நல்ல கரெக்ரரில் நடிக்கக் கூப்பிட்டாங்க. நான் ஒப்புக் கொண்டேன். முதல் நாள் பூஜை அன்று ட்ரெஸ் கொண்டாந்தாங்க. நான் அதைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவ்வளவு செக்ஸ் ட்ரெஸ். இது யாருக்கு என்று கேட்டேன். எனக்குத் தான் என்று சொன்னாங்க. நான் ஏமாற்றப்பட்டுவிட்டதைப் போன்ற ஒரு உணர்வு. இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற இன்னோர் படத்தில் எனக்கு நல்ல கரெக்டர். விளம்பர பாணர்களில் சில நிமிடங்களில் வந்து போகிற சில கவர்ச்சியான காட்சிகளில் பெரியளவில் 'எக்ஸ்.ப்.ளாய்ட்' பண்ணிட்டாங்க. பார்க்கிறவர்களுக்கு இது ஏதோ செக்ஸ் படம் என்று தோன்றுகிற மாதிரி.'' இது ஸ்ரீதேவியின் பேட்டி. ஒரு நடிகையைத் தயாரிப்பாளர்கள் எவ்வளவு கீழ்த்தரமாக மாற்றலாம் என்பதற்கு இது நல்ல உதாரணமாகும். ஆண் மேலாதிக்க அமைப்புக் கொண்ட சமூகத்தில் அதன் அங்கமான சினிமாத் தொழிலில் இந்த நிலைமைகள் வருவது ஆச்சரியமானதொன்றல்ல. இங்கு நடிகைகள் கேவலமாக மதிக்கப்படுகிறார்கள். அவர்கள் கலைஞர்களாகக் கருதப்படுவதில்லை. கவர்ச்சிப் பொருளாக, வியாபாரப் பொருளாகக் கருதப்படுகிறார்கள். உடல் அவர்களது மூலதனம். கவர்ச்சி காட்டுமாறு வற்புறுத்தப்படுகிறார்கள். வயது முக்கியமான பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. நடிகைக்கு வயது அதிகமாகிக் கொண்டு போகும் போது அவர்களுக்கு ஊதியம் குறைகிறது. ஆகவே எவ்வளவு விரைவாகப் பணம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகப் பணம் சம்பாதிக்கிறார்கள். இதனால் நடிகைகள் நடிகர்களில் தங்கி நிற்க வேண்டியிருக்கிறது. நடிகர்களின் சிபார்சு நடிகைகளுக்கு முக்கியமானதாக உள்ளது. இதன் காரணமாக நிறைய வதந்திகள் ஏற்படுகின்றன. வயது அதிகமாகிக் கொண்டு போகும் போது தங்கள் வயதைக் குறைத்துக் காட்டுகிறார்கள். அமுல் கிளக்சோ போன்ற சிறு பிள்ளைகள் சாப்பிடும் உணவைச் சாப்பிடுகிறவர்களாகவும் சித்திரக்கதை (கொமிக்ஸ்) போன்ற சிறுவர்கள் வாசிக்கும் புத்தகங்களை வாசிப்பவர்களாகவும் தங்களை வெளிக்காட்டுகிறார்கள். இதனால் நடிகைகள் சொந்தக் கருத்துக்கள் இல்லாதவர்களாக பிறரில் தங்கியிருப்பவர்களாக கருதப்படுகிறார்கள். நடிகைககளின் இத்தகைய அம்சம் ஆணாதிக்கம் உள்ள அமைப்பால் உருவானது. ஆனால் சில நடிகைகள் விதி விலக்கானவர்கள். தங்களுக்கு என்று சொந்தக் கருத்துக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். பானுமதி, பத்மினி, லட்சுமி, சௌஹார் ஜானகி, சுஜாதா போன்றவர்கள் இத்தகையவர்களே. சமீப காலங்களில் அறிமுகமானவர்களில் சுஹாசினி, சாந்தி கிருஸ்ணா போன்றவர்கள் சில அம்சங்களில் முற்போக்கான எண்ணம் கொண்டு காணப்படுகிறார்கள். ஆண்களைக் கட்டிப்பிடித்து நடிக்கமாட்டேன், ஆபாசமாகவும் நடிக்கமாட்டேன் என்பது இருவருடைய பிரகடனமாகும். ஆனால் சுஹாசினி பணத்திற்காக ஆண்களைத் தொட்டு கட்டிப்பிடித்து நடிக்கும் நடிகைகளுள் ஒருவராக மாறி விட்டார். இந்த நேரத்தில் இன்னும் ஒன்று நினைவுக்கு வருகிறது. அகில இந்தியப் புகழ் பெற்ற மறைந்த வங்காள ஹிந்தி நடிகையான சுமிதா பட்டேல் என்னும் நடிகை '' ஆண்களுக்குச் செருப்பைக் காவுதல், ஆண்களுக்குப் படுக்கையை விரிப்பது போன்ற அடிமை வேடத்தில் நான் நடிக்கமாட்டேன்.'' என்று சொன்னது போல் அப்படி நடிக்காமல் தன் தனித்துவத்தை இழக்காமல் அகில இந்திய ரீதியில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டார். இது தமிழ் நடிகைகள் அவதானிக்க வேண்டிய விடயம்.

சுசீலா ரவி

### பின்னுரை

1970க்குப் பின்னர் தமிழ்ச் சினிமாவில் பெண்கள் பற்றி விரிவாக நோக்குவதற்கு முன்னர் அக்கால சினிமாக்கள் பெண்கள் பற்றிக் கொண்டிருந்த பொதுவான போக்கினை அறிதல் இவ்வாய்வுக்குச் சிறந்ததாகும். பொதுவான போக்கை அறிவதற்கு குடும்பம், காதல் ,திருமணம், கற்பு என வகுத்து நோக்குவது இலகுவாகக் காணப்படும்.

1970க்குப் பின்னர் சினிமா குடும்பம், குடும்பத்தில் பெண்கள் பற்றிக் கொண்டிருந்த தன்மையை நோக்கும் போது 1970க்கு முந்திய போக்கிற்கும் அதற்குப் பிந்திய் போக்கிற்கும் அதிக வேறுபாடு காணப்படுவதாகத் தெரியவில்லை. அனேகமான படங்கள் ஒரே மாதிரியே இருந்தன. ஒரு சில படங்களே மாறுபட்டுக் காணப்பட்டன. சிறு வித்தியாசமே காணப்பட்டன. ஆணின் துணையின்றி ஒரு பெண்ணால் தனித்துக் குடும்பத்தை நடத்த முடியாது, என்று எல்லாம் கூறிவந்த திரைப்படம் 1970க்குப் பின்னர் அப்படிக் கூறவில்லை. ஒரு பெண்ணால் தனித்துக் குடும்பத்தை பாதுகாக்க முடியும் என்பதை சினிமாக்கள் சித்திரிக்கின்றன. **அவள் ஒரு தொடர்கதை, அரங்கேற்றம்** போன்ற சில படங்களில் இவ்வாறு பெண்கள் சித்தரிக்கப்படுகிறார்கள்.

முன்பெல்லாம் பெண்கள் உழைப்பவர்களாகக் காணப்பட்டனர். தனியே பெண்ணுக்கு சமைத்தலும், வீட்டு வேலைகளும் தான் செய்ய முடியும், செய்ய வேண்டும் இன்று திரைப்படத்தில் பெண்கள் படித்து வேலை பார்ப்பவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். இவ்வாறு சில மாறுதல்களை சித்தரிப்பினும் பெண் புருஷனுக்கு அடங்கியவளாகவும் சொந்தக் கருத்து இல்லாதவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.

காதல் என்ற அம்சத்தை நோக்கும் போது அங்கு காதல் திருமணம் பற்றிப் பேசவும் வரவேற்கவும் படுகின்றன. ஜாதி, மதம். அந்தஸ்து போன்றன காதலுக்கு தடையல்ல என்பதையும் சித்தரிக்கின்றன. ஆனால் காதல் காட்சிகளின் போது அங்கு பெண்கள் கவர்ச்சிகரமாகவும் விரசமாகவும் சித்தரிக்கப்படுவதைக் காணமுடிகின்றது. காதல் காட்சியின் போது பெண்களுக்கு கவர்ச்சிகரமான ஆடைகள் அணியப்படுகின்றன. அதே நேரம் காதல் பாடல்கள் இரட்டை அர்த்தம் தொனிப்பதாகவும் காணப்படுகின்றன. அனேகமாக எல்லாத்திரைப்படங்களிலும் காதல் காட்சியின் போது பெண்களே கவர்ச்சிகரமாக சித்தரிக்கப்படுவதைக் காணலாம்.

திருமணம் என்ற அம்சத்தினை சினிமா எவ்வாறு சித்தரிக்கின்றது என்பதை நோக்குவோம். இப்போது விதவைகள் திருமணம் செய்வது வரவேற்கப்படுகிறது.இவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவிற்கு ஒரு சில திரைப்படங்களிலேயே வரவேற்கப்படுகின்றன.**அவள் ஒரு தொடர்கதை** போன்ற சில படங்களிலேயே இத்தகைய காட்சி உள்ளன.அரங்கேற்றம் என்னும் திரைப்படத்தில் விபச்சாரி திருமணம் செய்கிறாள்.ஆனால் முடிவில் அவள் பைத்தியக்காரியாகக் காட்டப்படுகிறாள். விபச்சாரியின் திருமணத்தை செமிக்கவே முடியவில்லை போலும். விதவைகள்,விபச்சாரிகள் திருமணத்தை நிராகரித்தும் திரைப்படங்கள் வெளிவந்தன. நான் பாடும் பாடல் என்னும் திரைப்படத்தில் எவ்வளவோ முற்போக்கு அம்சங்கள் பேசப்படினும் முடிவில் அது பிற்போக்கு அம்சத்தையே வலியுறுத்துகிறது.அங்கு கதாநாயகி பல முற்போக்கு அம்சத்துடன் சித்தரிக்கப்பட்டாலும் அவள் திருமணம் மறுக்கப்படுகின்றது. வைதேகி காத்திருந்தாள் என்னும் திரைப்படமும் விதவை திருமணம் செய்வதனை மறுதலித்தே வந்தது.

அடுத்து பெண்களின் முதுசமாக சமூகம் மதிக்கும் கற்பினை சித்திரிக்கும் போது அது பற்றிய கருத்தில் மாற்றம் ஏற்படாதிருப்பதனைக் காணலாம். பொதுவாகப் பெண் விடுதலை,பெண்கள் உரிமைகள் என்று பேசப்படுகின்ற சில திரைப்படங்கள் வெளிவந்தமையைக் காணலாம். புதுமைப்பெண்,அக்கினிசாட்சி போன்ற சில திரைப்படங்களில் சிலகாட்சிகளும் அம்சங்களும் இதனை வலியுறுத்தும்.



- மகாஜனன்

## யுத்த சன்யாசம்

சக்கரவர்த்தி

### நான்காவது பரிமாணம் வெளியீடு

''யுத்தம் என்பது தர்மமா, அதர்மமா? என்பது என் வெற்று வினா அல்ல. பூகம்பம் பற்றியோ, நில நடுக்கம் பற்றியோ எனக்கு அக்கறை இல்லை. என் கவலை என்பது மனிதனின் மரணம் பற்றியது அல்ல; மனிதத்தின் நசிவைப்பற்றியது. இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்தக் கணம் வரை, எவருடனும் , எதுவுடனும் எனக்கு யுத்தம் இல்லை. ஆயினும் கூட இதை எழுதி முடிக்கும் முன்பதாகவே நான் பிறிதொரு புலத்துக்கு விரட்டப்படலாம்; அல்லது கொல்லப்படலாம்! இருந்தும், என் புதைகுழியிலிருந்து இன்னொரு நானோ - ஒன்றுக்கு மேற்பட்ட நானோ உயிர்த்தெழப்போவதில்லை. ஏனெனில் நான் கொல்லப்படும் போது வெறும் மனிதனாகவே இறந்து போவேன்'' என்று பின் அட்டையில் சக்கரவர்த்தி கூறுகிறார். சக்கரவர்த்தி கூறுவது போலவே இவரது கவிதைகள் மானுடத்தின் நசிவைப் பற்றிப்பாடுகின்றன. ***''நசிந்து போன மனிதம்''*** என்கிறார். ***''மனிதனுக்கு மேலான தெய்வமுமில்லை / மானுடம் போலொரு மெய்மையுமில்லை''*** என்று சித்தர்களும், ***''மானுடம் வென்றதம்மா''*** என்று கம்பனும், ***''மானுடன் என்பது புல்லோ - அன்றி/ மரக்கட்டையைக் குறிக்க வந்த வெறும் சொல்லோ''*** என்றும் மானுடத்தின் பெருமிதத்தைக் கூறிய கவிஞர்கள் ஏராளம். இக்கவிஞருக்கு மானுடத்தின் நசிவுதான் வேதனை தருகிறது. ***''பிணங்களை/ மிதித்து மிதித்து முன்னேறுகையில்/ மனிதம்/ நசுங்கித் தொலைந்தது''***/ என்றும் இன்னும் சில வரிகளில் மனிதத்தின் நசிவைப்பற்றிக் கூறுகிறார்.

போராட்டம், போராட்டத்துள் போராட்டம், அகதி வாழ்வு, அதுதரும் அவலம், மரணம், அதன் மகத்தான துயர், துப்பாக்கி, துயரவாழ்வு என்று இவரது கவிதை இதனையே பாடுபொருளாக்கிக் கொண்டது. ஆனால் இவை மாத்திரம் என்றல்ல. ***''ஆகாசப்பார்வை''*** என்றொரு கவிதை. வண்ணத்துப்பூச்சியுடனான உரையாடலில் வாழ்க்கையின் தத்துவத்தைக் கூறவருகிறது. ***''வாழ்க்கை என்பது/ பத்திரப்படுத்தவும்/ பதுங்கி இருக்கவும் தானோ?/ பறந்து திரியவும்/ காற்றாலோ/ கற்றாழை முள்ளாலோ காயம் படவும் தான்''***

இவர் ஏனைய கவிஞர்கள் போல ''சென்றொழிந்த பொற்காலத்தை''ப் பற்றிப் பாடுபவராகத் தெரியவில்லை. ஏனைய கவிஞரிடம் தாய் நாட்டைப் பற்றிய ஏக்கம் அதிகம் இருந்தது. இவர் புலம்பெயர்ந்த நாட்டைச் சுமுகமாக ஏற்றுக்கொள்கிறார். ஆனால் அவரது துயரம் இதுதான். ***''உனக்கு/ நாடு இல்லை என்றவனை விட/ நமக்கு நாடே இல்லை என்று/ தூபமிட்டவன் எவனோ/ அவனே என்னை/ விரட்டியடித்தவன் என்பேன்''*** என்று வேதனைப்படுகிறார். எனினும், புலம்பெயர் வாழ்க்கை ஒட்ட முடியாது என்றும் கழிவிரக்கப்படுகிறார்.

***''வேர்களை எங்கோ இழந்து விட்டு/ ஒட்டு மாங்கிளையாய்/ மேப்பிள் மரத்தில்/ கிளை விரிக்கவா முடியும்?***

இவரது கவிதைகள் உண்மையானவை. சொல்லலங்காரங்களும், பொய்யும், போலியும் கலந்து கவிதையைப் பண்ணவில்லை; படைத்திருக்கிறார். அது சிறப்பு. எனினும், சில கவிதைகள் கவித்துவமாக வெளிவரவில்லை; மனதைத் தொடவுமில்லை. ***''காலம் காலமான/ வாய்ச்சொல்/ வைராக்கியமாகினும்/ உங்களைப் போலவே/ என் விரோதிகளும்/ என்றேனும்/ ஊர் திரும்புதலே/ உணர்வோடு ஊறின/ உண்மை அல்லது பொய்/ ஆகிப்போனது''*** என்று இவர் எழுதுகிறவரிகள் கவிதையாகப்படவில்லை. கவிதையின் சிறுபகுதியைப் பிய்த்தெடுத்து இப்படிச் ''சத்திர சிகிச்சை'' செய்வது சரியில்லையாயினும், ஒரு கவிதையை முழுமையாகக் கவனிப்பதே சரியாயினும், சொல்ல வந்த விடயத்திற்கு ஆதாரமாக அதனை காட்ட வேண்டியேற்படுகின்றது.

முழுமையாக இத்தொகுப்பைக் கவனிக்கிற போது ''சுமாரானது'' என்ற சொல்லே போதும்.



www.tamilarangam.net



# நல்ல தேசியவாதம் தேசியவாதம், கூடாத தேசியவாதம் இனவாதம்?

கடந்த இரு இதழ்களிலும் இடமின்மை காரணமாக இடம்பெறாதிருந்த தேசியவாதம் தொடர்பான விவாதம் இவ்விதழில் தொடர்கிறது.

ராம் மாணிக்கலிங்கம்

சரிநிகர் ஆசிரியர் பீடமானது தேசியவாதமும் இனவாதமும் என்ற தமது கட்டுரையினை தேசியவாதம், இனவாதம் ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாடுகளை தெளிவுபடுத்தும் நோக்கிலேயே வெளியிட்டனர். ஆனால் சமூகவியல் அடிப்படையிலோ அன்றி அரசியல் அடிப்படையிலோ இவற்றின் தெளிவான வரைவிலக்கணங்களை வெளிப்படுத்தி வேறுபாட்டை புரியவைப்பதற்கு மாறாக ''நல்ல தேசியவாதம்'' தேசியவாதம் என்றும் ''கூடாத தேசியவாதம்'' இனவாதம் என்றும் வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். இவ்வரைவிலக்கணத்தின் அடிப்படையிலே விவாதம் தொடர்ந்துள்ள காரணத்தால், தேசியவாதத்திற்கும் இனவாதத்திற்கும் இடையிலுள்ள அரசியல் சமூகவியல் வேறுபாடுகளும், இவ்வேறுபாடுகள் இலங்கைத் தமிழ்த்தேசியவாதத்தில் எவ்வாறு பிரதிபலிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்விவாதம் எடுத்துக் காட்டத்தவறிவிட்டது.

தேசியவாதம், இனவாதம் என்ற கருத்துக்களுக்கு நீண்டகால வரலாறு உண்டு. 17ம், 18ம், 19ம் நூற்றாண்டு ஐரோப்பாவில் பிரஞ்சுப்புரட்சியின் ஜனநாயக, சகோதரத்துவ, சமத்துவக்கருத்துக்களும் ஏகாதிபத்தியக் கருத்துக்களும் மோதத்தொடங்கிய சந்தர்ப்பம் இவ்விவாதத்தின் ஊற்றுக்கண்ணாகும்.

**இனவாதம்:**

இலக்கிய விமர்சகரும், தத்துவஞானியுமாகிய தொடரோவ் என்பவர் தனது மனித பன்முகத்தன்மை தொடர்பாக (On Human Diversity by Tzvetan Todorov) என்ற புத்தகத்தில் இனவாதத்தையும் தேசியவாதத்தையும் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார். இன வேறுபாடு என்பது கலாசார ரீதியானதாக இருந்தாலும் கூட இவ்வேறுபாடுடைய இனத்தை அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களினூடாகக் கூட மாற்ற முடியாது; அவர்கள் பிறப்பாலே, அதாவது உயிரியல் ரீதியாக கீழானவர்கள் அல்லது மேலானவர்கள் என்ற கருத்தே இனவாதமாகும். இனவாதம் என்ற எண்ணப்பாட்டுக்கு தத்துவரீதியான அடிப்படையும் விஞ்ஞானவாதத்தின் அடிப்படையில் உயிரியல் ரீதியான தர்க்கமும் முன்வைக்கப்படுகின்றமையால் அதை சரியாக அடையாளம் காண்பதென்பதும், முறியடிப்பதென்பதும் இலகுவானதல்ல.

விஞ்ஞானவாதம் என்பது விஞ்ஞானத்தின் அடிப்படையில் சரி பிழை, சட்டம், ஒழுக்க நெறிகள், கலாசாரம் போன்றவற்றை நிர்ணயித்தல். அதாவது அரசியல் தத்துவத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டியவற்றை விஞ்ஞானத்துக்கு ஒப்படைத்தல். இந்த குழப்பத்தின் மூலம் 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் விஞ்ஞானம் பெற்ற அங்கீகாரத்தினால் இனவாதம் என்ற கருத்துநிலை மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இனவாதம் விஞ்ஞானவாதத்துடன் கொண்டுள்ள உறவு அதன் தாங்கு திறனுக்கும் என்றும் உயிர்தெழக்கூடிய ஆற்றலுக்கும் காரணமாகும். இனவாதம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட கருத்துக்களை நாளாந்தம் நடைமுறையில் நாம் கண்டு வருகிறோம். ''வயிற்றுக்குத்தை நம்பினாலும் வடக்கத்தையானை நம்பாதே'' என்பது இன்றும் சாதாரணமாக எமது மக்களால் சொல்லப்படுவதானது இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

சரிநிகர் ஆசிரியர் பீடம் இனவாதம் என்பதற்கு கொடுத்த வரைவிலக்கணம் - ''ஓர் இனம் இன்னோர் இனத்தை ஒடுக்குதல் அல்லது துவேஷத்தல்'' என்பதாகும். ஆனால் இது இனவாதத்தின் ஓர் அம்சமே தவிர இதுவேதான் இனவாதம் அல்ல. அதுமட்டுமன்றி இவ்வம்சத்தினை தேசியவாதத்திலும் காணலாம். எனினும் தேசிய வாதத்திலும் இனவாதத்திலும் இனத்தேசிய முரண்பாடுகள் செயற்படும்விதம் பற்றிய ஒரு முக்கிய வேறுபாட்டை சரிநிகர் ஆசிரியர் பீடம் மறைமுகமாக இனங்கண்டுள்ளனர். இனங்களுக்கிடையிலான (Hierarchy) தர அடுக்குதல் - ஓரினம் மேலானது மற்றையது கீழானது - இனவாதத்தின் ஓர் அத்தியாவசியமான அம்சம். இதை இனவாதத்தின் அரசியலிலும் தத்துவத்திலும் இலகுவாகக் காணலாம்.

தேசியவாதத்தில் தர அடுக்குதல் - ஒரு தேசம் மேலானது மற்றையது கீழானது - ஓர் அத்தியாவசியமான அம்சமல்ல. எனினும் இத்தர அடுக்குதல் தேசியவாதத்தின் ஓர் அம்சமாகவும் இருக்கலாம். தேசியவாதத்திற்கு ஆதரவாக எழுதிய Herder, Hegel, Renan போன்ற தத்துவஞானிகளின் கருத்துக்களில் கூட தேசியவாதத்தில் எவ்வாறு தர அடுக்குதல் தத்துவரீதியில் தோன்றலாம் என்பதை நாம் ஆராய்ந்து காணலாம். (இது அடுத்த இதழில் ஆராயப்படும்) ஒரு தேசம் மேலானது மற்றையது கீழானது என்ற கருத்து இத்தேசியவாத தத்துவஞானிகளின் தத்துவத்தில் கண்டு கொள்ளுதல் சிக்கலாக இருந்தாலும் தேசியவாதத்தை பின்பற்றும் அரசியல்வாதிகளினதும் இயக்கங்களினதும் நடைமுறையில் மிக இலகுவாகக் காணலாம்.

### தேசியவாதம்

தேசியவாதத்தின் வரைவிலக்கணம் இனவாதத்திற்கான வரைவிலக்கணத்திலிருந்து வேறுபட்டதும், சிக்கலானதுமாகும். தேசியவாதம் என்பது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒன்று: அரசியல் மற்றது, கலாசாரம். ஓர் பொது அரசியல் அலகுக்குள் வாழும் பல்வேறு கலாசாரமுள்ள மக்களை அப்பொது அரசியலின் அடிப்படையில் பொது கலாசாரமுடைய வர்களாக மாற்றியமைத்தல் அல்லது அதற்கு முயற்சித்தல் என்பது ஓர்வகைத் தேசியவாதமாகும். மாறாக பொதுவான கலாசார விழுமியங்கொண்ட ஓர் மக்கள் கூட்டம் தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கக் கூடிய அரசியல் கட்டமைப்பை அல்லது நிறுவனங்களை உருவாக்குதல் அல்லது அதற்கு முயற்சித்தல் என்பது மற்றோர்வகைத் தேசியவாதமாகும். மேற்கூறப்பட்ட இருவகைத் தேசியவாதங்களினதும் நோக்கம் ஓர் தனி நாடாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. அது சமஷ்டி அலகாகவோ மாநில அல்லது மாகாண அலகாகவோ அல்லது மத்திய அரசில் சில உத்தரவாதங்களோ கூட இருக்கலாம்.

இங்கு நாம் குறிப்பிட்ட இருவகைத் தேசியவாதங்களை, இலங்கையில் அரசியல் வரலாற்றிலும் காணலாம். முதலாவது வகைத் தேசியவாதமாக சிங்கள, பௌத்த தேசியவாதமாகும். இலங்கையைப் பொறுத்தவரை சிங்கள, பௌத்த மக்களின் கையிலுள்ள அரசியல் நிறுவனமும், அதிகாரமும் இலங்கை மக்களின் கலாசாரத்திலும் பிரதிபலிக்க வேண்டுமென எண்ணுதல் அல்லது அவ்வாறிருக்க முயற்சித்தலைக் காணலாம்.

தமிழ் தேசியவாதத்தில் புலிகளின் அணுகுமுறையும் இவ்வாறானதே. வடக்குக்கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையில் அங்கு வாழும் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை நிராகரித்து தமிழ்த் தேசியத்தினுள் உள்வாங்க முனைதலும் அது முடியாத பட்சத்தில் அவர்களை வடக்குக் கிழக்கிலிருந்து விரட்ட முயற்சித்தலும் இவ்வகைப்பட்டதே.

இரண்டாவது வகைத் தேசியவாதத்திற்கு இலங்கையின் தமிழ், முஸ்லிம் தேசியவாத வளர்ச்சி உதாரணமாகும். இவ்விருதேசியவாதங்களும் பொதுவான கலாசாரமுடைய மக்கள் கூட்டத்திலிருந்து ஆரம்பித்து அதனைப் பிரதிபலிக்கும் அரசியல் நிறுவனங்களையும் அதனூடாக அரசியற் கட்டமைப்புக்களையும் கோரும் அளவுக்கு பரிணாமமடைந்தன.

தமிழர்களைப் பொறுத்தவரை முதலில் விசேட பிரதிநிதித்துவம் பின்னர் மொழிச்சமத்துவம், தொடர்ந்து சமஷ்டி ஆட்சியும் இறுதியில் தனிநாடும் கோரினர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமது தனித்துவத்தை அங்கீகரிக்கக் கோரினர். பின்னர் அதனைப் பிரதிபலிக்கும் ஓர் அரசியல் நிறுவனத்தை உருவாக்கினர். அதன் பின் தனியான கலாசார அமைச்சும் இன்று முஸ்லிம் கவுன்சிலும் கோருமளவுக்கு பரிணாமம் அடைந்துள்ளனர்.

இதில் முதலாவது தேசியவாதம் ''கூடாததேசியவாதம்'' என்றும், இரண்டாவது தேசியவாதம் ''நல்ல தேசியவாதம்'' என்றும் சிலர் முடிவு செய்யலாம். ஆனால் இது ஓர் சடுதியான முடிவே ஆகும்.

உண்மையில் இவ்விருவகைத் தேசியவாதங்களின் இடையிலுள்ள வேறுபாடு என்னவெனில் ஒன்று அரசியல் அலகை அடிப்படையாகக் கொண்டு உருவானது, மற்றையது கலாசார அலகை அடிப்படையாகக் கொண்டு உருவானது.

சரிநிகர் ஆசிரியர் பீடத்தைப் பொறுத்தவரை இங்குமேலே குறிப்பிட்ட முதலாவது தேசியவாதத்தை இனவாதம் என்றும் இரண்டாவது வகைத் தேசியவாதத்தையே தேசியவாதம் என்றும் ஓர் மேலோட்டமான விளக்கத்தைக் கொடுத்துள்ளது. ஆனால் இரண்டும் தேசியவாதமே.

ஒரு தேசியவாதம் ''நல்லதா'', ''கூடாததா'' என்பதை நிர்ணயிப்பதற்கு ஓர் அரசியல் ஒழுக்கவியல் அளவு கோலும் அத்தேசியவாதத்தின் அரசியல் சரித்திரமும் உள்ளடக்களும் அத்தியாவசியமானதாகும். தமிழ்த் தேசியவாதத்தின் அரசியல் சரித்திரத்தைப் பற்றி மேலோட்டமாகக் குறிப்பிட்ட சரிநிகர் ஆசிரியபீடம் ''நல்ல தேசியவாதம்'', ''கூடாததேசியவாதம்'' என்பவற்றை வேறுபடுத்தக்கூடிய தத்துவரீதியான அளவுகோலைப் பற்றி மேலோட்டமாகக் கூட எழுதவில்லை.

ஆனால் நுஃமான் அவர்கள் ''இனத்தேசியவாதம்'' என்ற பதத்தை விவாதத்தினுள் கொண்டுவந்ததன் மூலம் தேசியவாதத்தின் பிரதி கூலமான பக்கத்தை விளக்க முயற்சித்தார். அவர் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசியவாதத்திற்கும், தற்போது நிலவும் ''இனத்தேசியவாதத்திற்கும்'' உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்ட முனைந்தார். எனினும் இம்முயற்சியை அவ்விவாதத்திலீடுபட்ட அநேகமானோர் முன்னெடுக்காமல் இன்று நிலவும் தேசியவாதத்தை ஆராய்வதை விட அதனை பாதுகாப்பதிலேயே குறியாக இருந்தனர்.

அதனால் ''நல்ல தேசியவாதம்'' தேசியவாதம் என்பதும், ''கூடாத தேசியவாதம்'' இனவாதம் என்பதுமான ஆசிரியர் பீடத்தின் எடுகோளே இறுதியில் முடிவாகவும் அமைந்துவிட்டது!

ஓர் தேசியவாதத்தின் மூலமே அதன் நன்மை தீமைகளை அளவிட முடியாது. எனவே இதனை அளவிட இன்னோர் அரசியல் ஒழுக்கவியலையே அளவு கோலாகப் பயன்படுத்த வேண்டும். இது பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

## ஓர் இரவு

இன்றிரவு
கும்மிருட்டு
எங்களுடன் சேர்ந்து
சந்திரனுக்கும் ஊரடங்குச்சட்டம்.
மருந்துக்குக் கூட
நட்சத்திரத்தை காணவில்லை
குறைந்த வெளிச்சத்துடன்
குப்பிவிளக்கு மட்டும் கடமையில்
ஒரே புழுக்கம்
செடி.... கொடி.... மரம் எதுவும்
அசையவில்லை
பொருளாதார தடையுடன்
அதற்கும் தடையோ?
எதிரில் உள்ள குளத்து
தவளைகளும் கத்தவில்லை
மௌன விரதம் போலும்.
நிசப்தத்தை கிழித்துக் கொண்டு
ஆங்காங்கு குண்டு வெடிப்பு சத்தங்கள்.
வீட்டுக்குள்ளே
எத்தனைபேர் செத்ததென்ற ஆவலுடன்
விடியலை எதிர்பார்த்திருந்தேன் நான்

- அமுதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"தாய்மார்களே! காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை அவரவர் குடும்பத்துக்கு மூன்று மாதங்களுக்குள் வழங்குவோம்'' இது சென்ற வருடம் ஒகஸ்ட் மாதம் பொதுத்தேர்தலின் போது இன்றைய ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி. அது பற்றி தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆட்சியும் அமைத்து, மேற்படி விடயம் தொடர்பாக ஆணைக்குழுவும் அமைத்தாகிவிட்டது. ஒன்றல்ல மூன்று ஆணைக்குழுக்கள். பல தாய்மார்கள் பெரும் நம்பிக்கை வைத்திருக்கின்ற இந்த சூழ்நிலையில் இவ் ஆணைக்குழு பற்றி சரிநிகர் சேகரித்த தகவல்கள் சில கேள்விகளை எழுப்பியுள்ளது.

காலத்துக்கு காலம் திடீரென்று தோன்றி திடீரென்று காணாமல் போகும் எத்தனையோ ஆணைக்குழுக்களைக் கண்டு புளித்துப்போன இந்நிலையில் மீண்டும் அதே ஏமாற்றத்தைத்தான் காணப் போகிறோமா என்ற கேள்வி எழும்பி வருகிறது.

### மூன்று ஆணைக்குழுக்கள்:

பதவிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் காணாமல் போனோர் பற்றிய தகவல்களை அவரவர் குடும்பங்களுக்கு வழங்குவதாக கூறிய பொ.ஐ.ஐ.மு. பதவிக்கு வந்த நான்கு மாதங்களின் பின்னரேயே அது பற்றிய ஆணைக்குழுவை அமைத்தது. அதாவது ஜனவரி 25ம் திகதி வெளியான வர்தமானிப் பத்திரிகையில் வெளியிட்ட இல.855/18 - 1994 கொண்ட அறிவித்தலின் மூலம் ஆணைக்குழுக்களை அமைத்தது. அதன்படி ஒன்பது மாகாணங்களிலுமாக - 25 மாவட்டங்களிலும் - காணாமல் போன (காணாமல் போய்க்கொண்டிருக்கின்ற) லட்சத்துக்கும் மேற்பட்டோர் பற்றி விசாரிப்பதற்கென்று மூன்று ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

முதலாவது; மத்திய, வடமத்திய, ஊவா, வடமேல் ஆகிய மாகாணங்களை உள்ளடக்கிய விசாரணைக் குழு.

இரண்டாவது; மேல் மாகாணம், தெற்கு, சப்ரகமுவா ஆகிய மாகாணங்களுக்கும்.

மூன்றாவது; வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களுக்கான தனியான விசாரணைக்குழுவும் அமைக்கப்பட்டது.

இவ்விசாரணை ஆணைக்குழுவுக்கு செயலாளர்களாக எம்.சீ. எம்.இக்பால், விமலதர்ம ஏகநாயக்க, மாணிக்கவாசகர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அவ்வறிக்கையின்படி 1988ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து காணாமல் போனோர் பற்றி விசாரிப்பதே ஆணைக்குழுவின் கடமையாக பிரகடனப்படுத்தப்பட்டது.

### இன்டர்கூலருக்கு 139 கோடி; ஆணைக்குழுவுக்கு ஒன்றுமில்லை:

இவ்வாணைக்குழுவின் செயற்பாடுகளுக்காக கனேடிய அரசு 16 லட்சத்தை உதவியாக வழங்கியுள்ளது இந்த நிதியைத் தவிர வேறுநிதி எதுவும் இதுவரை இவ்வாணைக்குழுக்களுக்கு கிடைக்கவில்லை. இவ்வாணைக்குழுவினரின் கருத்துப்படி மேற்படி தொகை ஆணைக்குழுவின் போக்குவரத்துக்காக தேவைப்படும் எரிபொருட் செலவை கூட ஈடுசெய்யக்கூடப் போதாது என்கின்றனர். உண்மையில் அரசாங்கம், இவ்வாணைக்குழுவுக்கு தேவையான அளவு நிதியை இதுவரை வழங்குவதற்கு முன்வரவில்லை என்று தெரியவருகிறது. ஒரு லட்சம் பேருக்கு நடந்த கதியைப் பற்றி விசாரிக்க தேவையான தொகையை வழங்க பின் வாங்குகின்ற அரசாங்கம் தங்கள் சொந்த சொகுசு தேவைக்கான இன்டர்கூலர் வாகனத்துக்காக 139 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது.

ஒரு லட்சம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்று பல தடவை உரத்துக்கூறிய அரசாங்கத்திற்கு இதுவரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 30,000 என தெரியவருகிறது. தெற்கு மற்றும் சபரகமுவ மாகாணங்களிலிருந்து மட்டும் 11 ஆயிரத்து 500 முறைப்பாடுகளும் வடமேல், மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலிருந்து 9,500 முறைப்பாடுகளும் வடக்கு கிழக்கில் மாத்திரம் இதுவரை 12,000 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

### விசாரணைகள் முடிய 10 ஆண்டுகள்:

இம்முறைப்பாடுகளை கொண்டு விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. மார்ச் மாதம் 14இலிருந்து 24ம் திகதிவரையான 10 நாட்களுக்குள் 45 - 50 வரையான முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டுள்ளன. (இதிலும் பிரதான சாட்சி மாத்திரமே விசாரணை செய்யப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது)


இதிலிருந்து ஒன்று தெரிகிறது. அதாவது பிரதான சாட்சிகளை மாத்திரம் விசாரித்து விசாரணைகளை தொடர்ந்தால் கூட ஒரு ஆணைக்குழுவால் நான்கு விசாரணைகளையே மேற்கொள்ள முடியும். ஆக, மூன்று ஆணைக்குழுவாலும் ஒரு நாளைக்கு 12 விசாரணைகளையே மேற்கொள்ள முடியும்.

இதுவரை ஏறத்தாழ 30,000 முறைப்பாடுகள் வந்திருக்கின்றன. இதன்படி பார்த்தால் இத்தனை முறைப்பாடுகளையும் விசாரிக்க ஏறத்தாழ 2500 நாட்கள் செல்லும். அதாவது அரசாங்கம் கூறும் வருட வேலை நாட்கள் 250 எனக்கொண்டால், இந்த முறைப்பாடுகளை விசாரித்து முடிக்க 10 ஆண்டுகள் செல்லும். ஒருவேளை முறைப்பாடுகளின் எண்ணிக்கை 30,000 ஐயும் விடக்கூடினால் இன்னும் பல ஆண்டுகள் செல்லும்.

இந்தத் தரவுகளை வெறும் ஆதாரபூர்மற்றவை என்றோ நடந்து முடிவதற்கு முன் கூறுகிறார்கள், என்றோ கூற முடியாது. ஏனெனில் கடந்த கால அனுபவங்கள் எமக்கு பாடம் சொல்கின்றன.

### பிரேமதாச ஆணைக்குழு தந்த படிப்பினை:

குறிப்பாக பிரேமதாச ஆட்சியின் போது, 1991ஆம் ஆண்டு, 1990 இலிருந்து காணாமல் போனோர் பற்றி விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவுக்கு இவ்வருடம் ஜனவரி 10ஆம் திகதிவரை கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் தொகை 947. அதில் 175 பேர் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் அவ்வாணைக்குழு தெரிவித்தது. அத்தோடு 115 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டன. 377 முறைப்பாடுகளை விசாரித்துக் கொண்டிருப்பதாகவும் 947 முறைப்பாடுகளில் 280 முறைப்பாடுகள் விசாரித்து முடித்து விட்டதாகவும் தெரிவித்தது.



# காணாமல் போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழு: ஒரு கண்

1991 இலிருந்து கிடைத்த முறைப்பாடுகளில் 180 பற்றி ஏதோ ஒரு வகையில் முடிவு கிடைத்துவிட்டது. அதாவது 19%. அதுவும் நான்கு வருடங்களின் பின் ஆயினும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்காக இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாணைக்குழு இயங்கிக்கொண்டிருக்கும் அதே சூழலிலேயே தற்போதைய அரசாங்கமும் மூன்று ஆணைக்குழுக்களை நியமித்திருக்கிறது.

பிரேமதாசவின் காலத்தைய ஆணைக்குழுவுடன் ஒப்பிடும் போது இவ்வாணைக்குழுவின் போக்குகளும் கடந்த காலத்தை நினைவுக்கு கொண்டு வருவதைத் தவறென்று எப்படிக்கூற முடியும்?

### படுகொலைக்கு காரணம் யார்?

1971 எப்ரல் புரட்சியின் போது அன்று ஆட்சியிலிருந்த சிறிமா பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் 20,000க்கும் மேற்பட்ட இளைஞர்களை அழித்து ஒடுக்கியது. அக்கிளர்ச்சியை முறியடிக்க இந்திய இராணுவத்தையும் துணைக்கு அழைத்துக்கொண்டது. அன்று காணாமல் போனோர் பற்றிய இதுவரை சரியான விசாரணைகள் இல்லை.

அதன் பிறகு நாட்டில் நடந்த பல்வேறு இனக்கலவரங்கள் பற்றி எந்தவித விசாரணைகளும் இல்லை. 1971இல் காணாமல் போனோர் பற்றி ஐ.தே.க ஆக்ரோஷமாக சிறிமா அரசாங்கத்தின் மீது பழி சுமத்தியது.

ஜே.ஆர். கூட ஆட்சிக்கு வந்ததும் சிறிமாவின் மீது குற்றம் சுமத்தி குடியியல் உரிமை பறிக்க எடுத்த முயற்சியளவுக்கு; ஏற்கெனவே குறிப்பிட்ட 1971 இளைஞர்கள் அழிப்பு பற்றி எந்தவித அக்கறையும் செலுத்தவில்லை. (1971இல் ஜே.ஆரின் மகனும் ஜே.வி.பியுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.)

ஜே.ஆர். 1981 தொடக்கம் இன அழிப்பை படிப்படியாக மேற்கொண்டார். அன்றிலிருந்து பல இன அழிப்புச் சம்பவங்கள் வடகிழக்கெங்கும் தொடர்ச்சியாக நடந்தேறின.

1988 முதல் அந்த கொலைகளுக்கு பிரேமதாச தலைமை கொடுத்தார். அதுவரை வடக்கில் கொலைவெறியாட்டம் புரிந்த இந்திய அமைதிப் படையை விரட்டிவிட்டு, புலிகளுடன் பேசுவதாக பாசாங்கு செய்து கொண்டு வடகிழக்கில் நிலை கொண்டிருந்த பீடையை தெற்குக்கு திசை திருப்பினார். தெற்கில் தனது கொலை வெறியாட்டத்தைத் தொடர்ந்தார்.

''ஜே.வி.பியை அடக்குதல்'' எனும் போர்வையில் தானும் தன்னைச் சார்ந்தவர்களும் அரசியல் பழிவாங்கல்களைப் புரிய வழிதிறந்து விட்டார். முழுப்பழியையும் ஜே.வி.பியின் மீது சுமத்தினார். தான் புனிதமானவராகினார் பிரே

### வடக்குக் கிழ

இப்படியாக வட
னிலங்கையிலும்
கள் எண்ணற்றன
மல் போனோர்
சம் என கூறப்ப
இயல்பாக உள்ள
வெறுமனே (19
இடைப்பட்ட கா
லங்கையில் கா



கை

''குடியியல், அரசியல் உரிமைகள் பற்றி
உடன்பாடு'' **OP to ICCPR (Optional Protocol to the**
**Convenant on Civil and Political Rights)** எனப்படும் ஒப்
வரை இலங்கை அரசு கையெழுத்திடவில்லை எனத் தெ

ஒரு நாட்டில் நடக்கும் மனிதஉரிமை மீறல் சம்பவ
சர்வதேச நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் ஒரு தனிந
பாடு செய்வதற்கான உரிமையை மேற்படி ஒப்பந்தம்
கிறது. அதேவேளை அம்முறைப்பாடு தொடர்பாக விச
தற்குமான உரிமையையும் அவ்வொப்பந்தம் வழங்குகி
காலம் அப்படியொரு ஏற்பாடு இருக்கவில்லை.

கடந்த காலங்களில் நடந்த படுகொலை சம்பவங்களைப்
ரணைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்கள்
கோரியபோதும் அரசு கவனத்தில் எடுக்கவில்லை.
சூரியகந்த விவகாரம். சூரியகந்தயில் கொல்லப்பட்ட
பெற்றோர்கள் எத்தனையோ காலமாக, ''எங்களது பி
கந்த குழிகளில் புதைக்கப்பட்டதாக அறிகிறோம். விசா
கள்'' என்று கோரிய போதும் பலகாலமாக அரசாங்



மதாச காலப்பகுதி
கொலைக்குழுக்கள்
பட்டன.

RDF - (Refit Defuce
CAFATERIA, SARA (
tionary Red Arm
பொறுப்பாக இருந்
பீரிஸ், PRRA - (Peop
ry Red Army)
ஜே.வி.பி.யின்
பிரச்சாரத்துடன்
இவ்வமைப்புக்கு
லக்க, டொக்டர் ரா
கொழும்பு மாணவ
சேர்ந்த தர்மசிறி,
சேகர ஆகியோர்
இருந்தார்கள் எ
றது. இவ்வமைப்
மூன்னாள் பிரதி
அதிபராக இருந்த
கம் பொல தலை
பலல்''(Black
அமைப்பு.

தெற்கின் நிலை
புலிகளுடன்
முறிந்ததோடு தெ
யினர் வடக்குக்கு
பட்டனர்.

வடக்கில்; பொ
தரைப்படை,
விசேட அதிரடி
பயன்படுத்தப்பட்
னாஸ் குழு'' போ
களும் பயன்படுத்

www.tamilarangam.net



கீழ்வரும்
ன்படுத்தப்
), YATORA,
ist Revolu-
இதற்குப்
அம்பாறை
evolutiona-
அமைப்பு
ப்பு என்ற
பற்பட்டது.
ன் ஜயதி
சேனாரத்ன,
ரவையைச்
அபய குண
ாட்டிகளாக
கூறப்படுகி
ளை விட
ாலிஸ் மா
மதாச உடு
லான "களு
எனும்
ப்படியிருக்க
சுவார்த்தை
ுள்ள படை
ச திருப்பப்
கடற்படை,
ாயப்படை,
ன்பன
"மு
ஆயுதக்குழுக்
ட்டன.

எண்ணிக்கை மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. 1987 இந்திய - இலங்கை உடன்படிக்கை தொடங்கு 1990 யூன் போர் தொடக்கம்; வரையான காலப்பகுதிக்குள் நடந்த கொலைகள். இந்திய அமைதி காக்கும் படை (IPKF - Indian Peace Keeping Force) யினராலும், அரச படையினராலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 1990 யூன் ...த்திலிருந்தே வடகிழக்கெங்கும் இன அழிப்பு வேகமாக பரவியது. பாரிய அளவில் நடந்த பல சம்பவங்களின் சில சம்பவங்களுக்கு மாத்திரம் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. (மைலந்தனை, கொக்கட்டிச்சோலை போன்றவை) அவற்றில் கூட திருப்திகரமான முடிவுகள் இதுவரை கிடைத்ததில்லை.

இந்த நிலையிலேயே ஏற்கெனவேயுள்ள பிரேமதாசவின் ஆணைக்குழுவுடன் இன்றைய அரசின் மூன்று ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய ஆணைக்குழுவின் தொடக்கமே, பாதிக்கப்பட்டோருக்கு சாதகமாக இருக்கவில்லை என பலர் குற்றஞ்சாட்டியிருந்தனர். குறிப்பாக பெப்ரவரி 14ஆம் திகதிக்கு முன்னர் முறைப்பாடுகள் வந்து சேர வேண்டும் என நிபந்தனை விதித்திருந்தனர். அதுவரை 20,000க்கும் குறைவான முறைப்பாடுகளே வந்து சேர்ந்திருந்தன. பின்னர் முடிவுத்திகதியை நீடிக்கக்

பாதிக்கப்பட்டவர்களில் பலர் தங்களது பிள்ளைகள், கணவர் எங்கோ உயிருடன் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இன்னும் பல குடும்பங்களில் பிள்ளை இறந்துவிட்டான் என்று தெரிந்தும் மரண அத்தாட்சி பத்திரம் கூட பெறமுடியாமல் இருக்கிறார்கள். (இவர்கள் மரண அத்தாட்சிப்பத்திரமின்றி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணங்களைக்கூட பெற முடியாமல் இருக்கிறார்கள்)

இன்று நடத்தப்படும் விசாரணைகளில் கூட பூரண நம்பிக்கையை இக்குடும்பங்கள் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

பயமின்றி சாட்சியமளிக்க இன்னும் சரியான சூழல் உருவாக்கப்படவில்லை.

### விசாரணை இழுத்தடிப்பு:

மேலும் ஆணைக்குழுவுக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட போதும் அப்படியொன்றே இருப்பதாகத் தெரியவில்லை. விசாரணை நடத்தப்பட




பொ.ஐ.மு.வின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார விளம்பரம் (Sunday Times (16-10-1994)) 3 மாதத்தில் விசாரணை முடிப்பதாக உறுதிமொழி

### அரசு, படைக்குப் பயம்:

இதைவிட விசாரணைகள் பெரும்பாலும் அரச படையினருக்கு எதிராகவே இருக்கின்றன. இந்நிலையில் அரச படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அரசுக்கு தயக்கம் இல்லாமலில்லை. விசாரணைகள் கூட படையினருக்கு வசதியாகவே நடத்தப்படுகின்றன. பாதிக்கப்பட்ட சாட்சிகளின் நலனை விட படையினரின் நலனுக்கே முக்கியத்துமளிக்கப்படுகிறது. இதற்கு சிறந்த உதாரணம் மைலந்தனை சம்பவம். அச்சம்பவம் நடந்த இடம் மட்டக்களப்பு. ஆயினும் 'படையினரின் பாதுகாப்பு நலன் கருதி அவ்வழக்கு விசாரணையை பொலன்னறுவை நீதிமன்றத்துக்கு மாற்றமாறு நீதிபதி உத்திரவிட்டிருந்தார். இன்றும் அவ்வழக்கின் சாட்சிகள் முழுப்பேரும் மட்டக்களப்பிலிருந்து சிங்கள பிரதேசமும், பாதுகாப்பில்லாததுமான பிரதேசத்துக்கு வந்து சாட்சியமளித்துவிட்டு போகிறார்கள்.

இதைவிட 1993இல் வண்ணாத்தியாறு பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 14 விவசாயிகளின் படுகொலை பற்றிய விசாரணை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருவது அறிந்ததே. அவ்வழக்கு கடந்தமாதம் 29ஆம் திகதியன்று சந்தேக நபர்களான 179 இராணுவத்தினரும் நீதிமன்றத்திற்கு ஆஜர் செய்யப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்த போதும் அவர்கள் அதனை பொருட்படுத்தாது நீதிமன்றத்திற்கு சமூகளிக்கவில்லை. நீதிபதியால் மீண்டுமொரு முறை "அவர்கள் அடுத்த முறை சமூகமளிக்க வேண்டும் என" உத்தரவிடுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாத நிலை.

இப்படியாக இந்த விசாரணைக் குழு பற்றி நம்பிக்கையற்ற தன்மைகள் நிறைந்து கிடக்கும் நிலையில் அரசாங்கம் இவ்வளவையும் கவனத்தில் எடுத்து செயற்படுவதாக தெரியவில்லை.

பகிரங்கமாக அறிக்கைவிடுத்த சிறிமா அம்மையார் இப்போது அது பற்றி வெளியிட முயல்வது தானே.

அது இருக்கட்டும் 1991 மார்ச் 19 இல் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் வைத்து காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் ஒன்றுகூடி "காணாமல் போனவர்களின் பெற்றோர் சங்கம்" என்ற அமைப்பொன்றை அமைத்தனர். அதற்கு தலைமை தாங்கியவர்கள் அன்றைய எதிர்க்கட்சி தலைவி சிறிமா பண்டாரநாயக்கவும், சந்திரிகாவும். அச்சங்கத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் மகிந்த ராஜபக்ஷ.

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 1992 இல் "ஹேபியஸ் கோபஸ்" 20,000 முறைப்பாடுகளை, சங்கத்தின் சார்பில் நீதிமன்றத்தில் வெளியிட ம்யற்சி செய்தவர். இத்தகவலை வெளிநாடொன்றில் நடந்த மாநாடொன்றுக்கு சமர்ப்பிக்க கொண்டு செல்கையில் விமான நிலையத்தில் அதை தடுத்து நிறுத்தியதாக அன்று குற்றஞ்சாட்டினார். அது லக்திவ பத்திரிகையில் அன்று வெளியாகியிருந்தது. அந்த தகவல்களை சமர்ப்பித்தால் கூட எவ்வளவோ முறைப்பாடுகள் அதிகரிக்கும். ஏன் அவ்வாறு செய்யாதிருக்கிறார். ஆணைக்குழுபற்றி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவுக்கு நம்பிக்கையில்லையா?

பாதிக்கப்பட்டவர்களில் பலர் தங்களுக்கு தங்கள் பிள்ளைகள் உயிருடன் கிடைக்கமாட்டார்கள் என்று தெரிந்தும் கூட ஏதோ ஒரு விமோசனம் கிடைக்குமென்ற எதிர்பார்ப்பிலேயே இன்று முறைப்பாட்டை முன்வைத்திருககிறார்கள்.

ஐ.தே.கவை பழி வாங்குவதாக நினைத்து கொண்டு வெறும் தேர்தல் வாக்குறுதி கொடுத்து விட்டதற்காக பேருக்கு இதனை செய்வதாக இருந்தால் மீண்டும் பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றுவதாகவே அமையும்.

அரசாங்கம் அக்கறையுடன்தான் செயல்படுகிறது என்றால் சில கேள்விகளை எழுப்புவது பொருந்தும்.

ஆணைக்குழுவுக்கான செலவுகளை ஈடுசெய்யக்கூடியவகையில் அரசநிதியிலிருந்து பணம் ஏன் ஒதுக்கப்படவில்லை? மாகாண மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் மாவட்டத்துக்கு ஒரு ஆணைக்குழு என்ற ரீதியில் அமைக்க முடியுமா? (இப்படி ஆணைக்குழுக்கள் அமைப்பதன் மூலம் அதிக விசாரணைகளை தனது ஆயுட்காலத்துக்குள்ளாவது முடிக்கலாம்)

தனது கணவரின் படுகொலை பற்றி த்னியான ஆணைக்குழு அமைத்து, அந்த விசாணைகளில் அக்கறை செலுத்திவரும் ஜனாதிபதி இந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களினதும் எதிர்பார்ப்புக்களில் அக்கறை செலுத்த முன்வருவார் என்பதை நடைமுறையில் நிரூபிக்க வேண்டும்.

# ...ணாமூச்சு விளையாட்டு?

ல்:
கிலும், தென்
ந்த கொலை
இன்று காணா
...ரு லட்
பொதுவான
அந்த தொகை
1990க்கும்
ல்) தென்னி
ல் போனோர்

— என்.சரவணன்

கோரி பலர் வேண்டுகோள் விடுத்த பின் இம்முடிவுத் திகதி நீடித்த பின்னரேயே 30,000 வரையான முறைப்பாடுகள் வந்து சேர்ந்துள்ளன.



## ...னித உரிமை ஒப்பந்தத்தில் ...ழுத்திட அரசு தயங்குவதேன்?

சர்வதேச
ernational
ந்தில் இது
வருகிறது.
மேற்படி
ல் முறைப்
கரித்திருக்
ண செய்வ
இத்தனை
ியும் விசா
ங்கத்திடம்
ணத்திற்கு
ளுர்களது
கள் சூரிய
செய்யுங்
வனத்தில்

எடுக்கவில்லை. அவ்விவகாரம் தொடர்பாக அரசாங்கத்துக்கு வெளியில் உள்ள நிறுவனமொன்றிற்கு முறைப்பாடு செய்வதற்கான வசதிகள் அவர்களுக்கு இருக்கவில்லை.

ஆனால் மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் எந்த ஒரு பிரஜையும் அரசாங்கத்திற்கு வெளியில் முறையிடலாம். புலநாடுகள் அவ்வொப்பந்தத்தை அங்கீகரித்துவிட்டன. ஆனால் இலங்கை அரசு இன்னமும் அதனை அங்கீகரிக்கவில்லை.

அந்த ஒப்பந்த ஆவணத்தின்படி அவ்வமைப்புக்கு முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவத்தைப்பற்றி அந்நாட்டிடம் கேள்வி எழுப்பினால் அந்நாடு விளக்கமளிக்க வேண்டும். பரிகாரம் காண வேண்டும்.

ஆனால் அந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்காத நாடுகளுக்கு அவ்வொப்பந்தம் பொருந்தாது.

பிரேமதாச காலத்தில் இவ்வொப்பந்தம் கையெழுத்திடப்படாமல் இருந்திருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் "மனித உரிமைகள்" கோஷத்தையே பிரதானமாகக் கொண்டு ஆட்சியமைத்த இந்த அரசாங்கமுமா இன்னமும் கையெழுத்திடாமல் இருக்கிறது?

விருக்கும் சுழற்சிமுறை இதற்கு ஓர் உதாரணம்.

முதலில் பாதிக்கப்பட்டவர் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்வார். அவ்விண்ணப்பப் பத்திரத்திற்கிணங்க ஆரம்ப விசாணைகள் தொடரும். அவ்விசாரணையின் பின் பிரதான சாட்சியாளர் விசாரிக்கப்படுவார். (ஏனைய சாட்சிகள் விசாரிக்கப்படுவதில்லை) பின்னர் அறிக்கையொன்று தயாரிக்கப்படும். அவ்வறிக்கைகள் எல்லாம் ஒன்று சேர்த்து ஜனாதிபதிக்கு அனுப்பப்படும். அவர் அதனை நீதிபதிக்கும், குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கும் ஒப்படைப்பார், அதன் பின்னரேயே விசாரணைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். விசாரணைகள் முடிந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறப்படுகிறது.

இந்த பெரும் சுழற்சி முறையை அடிப்படையாகக் கொண்டு கருத்து தெரிவித்த மனித உரிமைகள் குழுவொன்றைச் சேர்ந்த ஒருவர் "இந்த முறைப்படிதான் விசாரணை நடக்குமென்றால் மொத்தம் 38 வருடங்கள் பிடிக்கும் 30,000 முறைப்பாடுகளையும் விசாரித்து முடிக்க" என்கிறார்.

### அன்றும் இன்றும்:

அதுசரி... காணாமல் போனோரின் மொத்த தொகை ஒரு லட்சத்துக்கும் மேலிருக்க 30,000 முறைப்பாடுகள் மட்டும்தான் கிடைக்கப்பெறறதா? இந்தக் கேள்வியை அரசாங்கத்திலுள்ள ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் சிறிமா, தொழில் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் இன்று எழுப்புவது பொருத்தமாகும். ஏனெனில் கடந்த தேர்தல் காலங்களில் ஒரு லட்சம் பேர் காணாமல் போன சம்பவத்தை மேடைகளில் உரத்துப் பேசிய சந்திரிகா அவர்கள் எந்த ஆதாரத்தைக் கொண்டு கேட்டார். (அவர் பொறுப்புள்ள ஒருவராக இருந்து கொண்டு அதை எழுப்பியதாலேயே இக்கேள்வி எழுப்பப்படுகிறது).

சரி, முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல தலைமறைவாகிய நிலையில் (பிரேமதாச காலத்தில் ) 1500 பேரின் கொலைக்கு "கறுப்புப் பூனைகள்" படையே காரணம் எனக் கூறியிருந்தார். அதை சத்தம் போட்டு நாடு முழுவதும் தெரிவித்தது சிறிமா அம்மையார். படுகொலைகளை வெளிக்கொணர முன்வந்த உடுகம்பொலவுக்கு மக்கள், பாதுகாப்பு வழங்க வேண்டும் என



www.tamilarangam.net



# இலங்கை: அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும்

**பீ.ஏ.காதர்**

*பீ.ஏ.காதர். மலையக மக்கள் முன்னணித் தலைவர்களில் ஒருவர். மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன், வி.ரி.தர்மலிங்கம் ஆகியோரோடு இவரும் சிறையிலிருந்தவர்.*

*ஏற்கெனவே வி.ரி.தர்மலிங்கம் சிறையிலிருந்த போது எழுதிய ''மலையக அரசியல் சமூக, கலாசார அமைப்புக்கள்'' என்ற கட்டுரைத் தொடரை வெளியிட்டிருந்தது சரிநிகர். பீ.ஏ.காதரின் ''இலங்கை அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும்'' என்ற இக்கட்டுரையும் இவர் சிறையிலிருந்த போதே தொகுக்கப்பட்டிருந்தது. இவ்விதழில் இருந்து இது ஆரம்பமாகின்றது.*

இலங்கை வரலாறு அரசர் காலத்திலிருந்தே பல்வேறு வகையான அரசியல் யாப்புக்களைக் கண்டிருக்கின்றது. எனினும் நவீன அரசியல் யாப்புகள் என்ற வரையறைக்குள் வரையப்பட்டவை ஆங்கிலேயர் காலத்தின் பின்னரே தோன்றின.

இவ்வாறு இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் மூன்று அரசியல் யாப்புக்களையும் (1833 கோல்புறூக், கெமரன் அரசியலமைப்பு, 1931 டொனமூர் அரசியலமைப்பு, 1947 சோல்பரி அரசியலமைப்பு) சுதந்திரம் பெற்ற பின்னர் இரு அரசியல் யாப்புக்களையும் (1972 இலங்கை குடியரசு யாப்பு, 1978 - இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் திட்டம்) இலங்கை கொண்டிருக்கின்றது. தற்போது சுதந்திர இலங்கையின் மூன்றாவது யாப்பின் வரைபு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இச்சமயத்தில் மலையக மக்களும் அவர்களது தலைமைகளும் இலங்கை அரசியலமைப்பு வரைபில் ஏற்படுத்திய தாக்கங்களும், அரசியல் யாப்புகளும் இம்மக்களின் அபிலாசைகளையும் உரிமைகளையும் மதிக்கத் தவறிய போக்கையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

### *1. 1833 - கோப்புறூக் - கெமரன் அரசியலமைப்பு:*

1815ல் கண்டி ராச்சியம் இணைக்கப்பட்டது. 1823ல் கம்பளை - சிங்கபிட்டியவில் வெற்றிகரமாக கோப்பி பயிரிடப்பட்டது. 1818ல் வெடித்த பதுளை - வெல்லஸ்ஸ கிளர்ச்சி ஆங்கிலேயரால் மூர்க்கமாக முறியடிக்கப்பட்டது. சர்வதேச அரங்கில் பிரித்தானிய சாம்ராச்சியத்திற்கு சவால் விடக்கூடிய பலம் பொருந்திய வல்லரசுகள் இல்லை எனும் அளவுக்கு அவர்களின் ஆதிக்கம் நிலைபெற்றுவிட்ட இந்தக் காலப்பகுதியில் தாம் கைப்பற்றிய காலனிகளில் லாபநோக்குடனான பொருளாதார நடவடிக்கையில் அவர்களால் ஈடுபட முடிந்தது. இந்த ''அமைதி'' சூழலில் அரசியல் நிர்வாக முறைகளை தமது பொருளாதார நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் காலனிகளில் அவற்றின் தன்மைக்கேற்ப வகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இலங்கையை ஒன்றிணைக்கவும் கோப்பி பெருந்தோட்ட பொருளாதாரத்திறன் வளர்ச்சிக்கு இசைவாகவும் வரையப்பட்ட முதலாவது யாப்பே 1833 கோப்புறூக் - கெமரன் அரசியலமைப்பாகும். இவ் அரசியல் யாப்பு இலங்கையின் நவீனமயவாக்கத்திற்கான அரசியல் சட்ட கட்டமைப்பை வழங்கியது.

மலையக மக்களின் பூர்வீகத் தந்தையர் தென்னிந்தியாவில் இருந்து பெருமளவில் 1830களிலேயே வரத்தொடங்கினர். எனினும் தற்காலிக குடிகளாகவே அவர்களில் பெரும்பாலானோர் இருந்தனர். 1827 இலங்கையில் இருந்த இந்திய தொழிலாளரது தொகை சுமார் 10,000 ஆக இருந்தது. 1847ல் அது 50,000 ஆக இருந்தது. ஆயினும் சிறிதுகாலம் இலங்கையில் தங்கி, கிடைப்பதைக் கொண்டு இந்தியா திரும்புவதே கோப்பிக் காலப்பகுதியின் பிரதான போக்காகத் திகழ்ந்தது.

இதனால் பெருந்தோட்ட தொழிலாளர் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1920கள் வரை அரசியல் யாப்பில் எந்த ஏற்பாடும் இருக்கவில்லை; பெருந்தோட்ட தொழிலாளர் மத்தியில் வலுவான அமைப்போ தலைமையோ உருவாகவில்லை. 1921ம் ஆண்டு மானிங் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் பயனாக 16 பேர் மட்டுப்படுத்தப்பட்ட வாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். 57 அங்கத்தவர்களைக் கொண்டிருந்த சட்ட சபையில் ''இந்தியர்'' ஒருவர் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு முதற்தடவையாக உருவானது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட முதலாவது இந்தியப் பிரதிநிதி ஈ.ஜி.ஆதாம் அலி என்ற பிரபல வர்த்தகராவர். இது மலையக தமிழரை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய தலைமை ஒன்று உருவாகியிராத நிலைமையை உணர்த்துகிறது.

> **20களில் கோ.நடேச ஐயர் அரசியலிலும் தொழிற்சங்க இயக்கத்திலும் பிரவேசிக்கும் வரை பெருந்தோட்ட தொழிலாளரின் நலன் அரசியல் அரங்கில் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை**

20களில் கோ.நடேச ஐயர் அரசியலிலும் தொழிற்சங்க இயக்கத்திலும் பிரவேசிக்கும் வரை பெருந்தோட்ட தொழிலாளரின் நலன் அரசியல் அரங்கில் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.

கிறிஸ்துவ மனிதாபிமான அமைப்புக்களும் சில பத்திரிகைகளும் மாத்திரமே ஆரம்பகாலத்தில் இவர்களின் நலனுக்காக அவ்வப்போது குரல் கொடுத்தன. வெளிநாடுகளில் குடியேறிய பெருந்தோட்ட தொழிலாளரது அவல நிலை உள்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதனால் இந்திய அரசு இவ்விடயத்தில் அடிக்கடி தலையிட்டது. மற்றபடி இலங்கை வாழ் இந்திய தொழிலாளர் தமது நலன்களை பாதுகாக்கும் திறனைக் கொண்டிருக்கவில்லை.

ஒட்டு மொத்தமாக இலங்கை அரசியலை ஆராய்ந்தால் இலங்கையின் ஏனைய சமூகங்களும் 19ம் நூற்றாண்டு இறுதிவரை உறக்க நிலையிலேயே இருந்தன எனக்கூறலாம். பெருந்தோட்ட காலனிகள் யாவற்றிலும் அரசியல் சீர்திருத்தம் கோருகின்ற இயக்கம் ஜமேக்காவியே முதன்மை பெற்று திகழ்ந்தது. இலங்கையோ காலனியல் எசமானின் காலடியில் மௌனமாக இருந்தது. இதனால் பிரித்தானிய பத்திரிகையான ''த டெயிலி கிறபிக்'' என்ற பத்திரிகை 1905 ஜனவரி 10ம் திகதி இதழில் ''ஏனைய நாடுகள் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கும் போது இலங்கை மாத்திரம் பணம் பண்ணிக் கொண்டிருக்கின்றது'' என வர்ணித்தது.

இலங்கையில் வலிமைவாய்ந்த தேசிய முதலாளிகள் உருவாகவில்லை. வெளிநாடுகளில் கல்வி பயின்ற மேல் மட்ட புத்திஜீவிகளும் கூட இலங்கை திரும்பியதும் பெருந்தோட்ட முதலாளிகளாக மாறினர். அரசியலில் தோட்ட துரைமாரும், வர்த்தகரும், பறங்கியருமே செல்வாக்குச் செலுத்தினர். பெருந்தோட்ட பொருளாதாரத்தினால் ஏற்பட்ட நேரடியான அல்லது மறைமுகமான புதிய வாய்ப்புகள் உள்நாட்டின் செல்வாக்குமிக்க அணியை காலனியல்வாதிகளின் நலன்களோடு இணைத்து வைத்தது. இதனால் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான வலுவான இயக்கம் ஒன்று உருவாகவில்லை.

19ம் நூற்றாண்டின் இறுதிவரை இதனால் சுயாட்சிக் கோரிக்கை எழுப்பப்பட்வில்லை. சட்ட சபையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும், அதாவது அரசியலில் தமக்கும் கூடிய பங்கு இருத்தல் வேண்டும் என்பதே இக்காலப்பகுதியின் காலனித்துவ உயர்வகுப்பினரின் ஒரே கோரிக்கையாய் இருந்தது. **சட்ட சபையில் இன பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்த இந்த காலப்பகுதியில் இன உணர்வை விட சாதி உணர்வே மேலோங்கியிருந்தது.** அரசியல் யாப்புக்கான சீர்திருத்தக் கோரிக்கைகளுக்கு வெகுஜன ஆதரவோ அடித்தளமோ இருக்கவில்லை.

19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பித்து 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உத்வேகம் பெற்ற மத சீர்திருத்த இயக்கமும், மதுவிலக்கு இயக்கமும் முதற்தடவையாக வெகுஜனங்களைத் தட்டி எழுப்பி காலனித்துவத்திற்கு மறைமுகமான எதிர்ப்பை நல்கின.

—வரும்

## வனத்தின் அழைப்பு -3

ஈ
முன்னர்
''தக்கோன் தக்கோன்''
எனவுரைத்த வானம் மீண்டும் கூடிற்று!
கொலைச் சூத்திரம் நடந்தேறியகளம்!
தசைநார்களின் அதிர்விலெழும் போர்
பிதாமகர் தேர்த்தட்டின் கீழே
பூமியில் புரண்டார்!
பாட்டன் சாய்ந்த சேதியில் களம் திரண்டது!

அம்பணையில் முதுபெரு
வீரர் கிடந்தார்!
உடலில் குத்திய அலியின் அம்புகளை
வெறுப்புடன் இழுத்தெறிந்தார்!
இரத்தம் ஓடியது!
தப்பிக்கமுடியா மாயாலோகத்தின்
வசனங்கள் அவரிற்கு கேட்டன!

வீரன் தலைகுனிந்து நின்றான்!
''பிதாமகரே
நான் வெறும் கருவி!
கடமையைச் செய்தேன்
என்னை மன்னியும்''

''மரணத்திற்கு காத்திருக்கும்
எந்தன் சொற்கள் உண்மையே!
வனத்தின் அழைப்பைத் தாண்டி
எந்தன் மரணம் எட்டுமா!
கொலைச் சூத்திரங்களை மட்டும்
உனக்கு கற்பித்தவர்களிடம் சொல்!
விண்டுரைக்க முடியாமரணத்தின் விலையை
இனியும் தீர்மானிக்க வேண்டாம்!

வனங்களின் கோரக்குரலுன்
தசைநார்களில் அதிர்கிறது!
மகனே ஆயுத்ததுடன் நீ
நன்றாகவே பேசினாய்!
மனதையேன் இழந்து போனாய்!

மீள முடியா தளைகளை மீறி
உயிர் நிறுத்தி குரல் தந்தவன் முன்
சொல்லிழந்தவன் தலைகுனிந்தான்!
''மகனே! தாகமாய் உள்ளது''
வில்கோர்த்து புது ஊற்று நீர் ஈய்ந்தான்
முப்பாட்டன்
ஆவி குளிர்ந்தது!

வரலாறு
அம்பணையில் துஞ்சியது!
வீரம் வழி நடந்தது!

உ
மண்ணும் உக்கி
மாசற்றுப் போன காற்றில்
எழும் அவலக் குரல்கள்!

எனினும்
நினைவுகள் அழிவதில்லை!
தன் கனவுகளை விரித்தவன்
கதையினைக் காற்றும் அறியும்!

வீரஞ்செறிந்த எத்தனை கதைகள்
நம்மிடை எழுந்தன!
நாட்களில் நம்பிக்கை கொண்டிருந்தோம்!
மகிழ்ந்திருந்தோம்! ரம்ஙிவிளையாடினோம்!
செவ்வானம் மேற்கே
சொற்ப நேரத்தில் மறைந்ததில் திருப்தியில்லை!
அமைதியாய் சிந்தித்தோம்!
பொழுதுகள் ஒன்றாய்க் கழிந்த சொற்பகாலம்!
மக்கள் ஊரைவிட்டு
போய்க் கொண்டிருந்தனர்

மரணதூ தனின் ஊர்தி
காற்றில் மிதந்து வந்ததும்
மரண அழைப்பினை
நீ அமைதியாய் ஏற்றதும்
பின்னர் கேள்விப்பட்டோம்
பிறதேசங்களில் நிகழ்ந்தது போலவே
அவ்விரவிலும் அடுத்த இரவிலும்
நடந்ததொன்றும் புதிதில்லை!

அலையெறியும் கடலின் கரையில்
மூவராய் தனித்திருந்த மாலையில்
உன் உதடுகள் வெடித்து
மரண நிழல் கவிந்திருந்ததை நினைவு கூர்ந்தேன்

பின் கதவுகள் திறந்திருக்க
பாவம் நிறைந்த கனவுகளுடன்
பேதைபோல் தப்பிப் போயிருக்கலாம்!
விதியின் தத்துவங்களை
உரக்கப் படித்தபடி ஓடிப்போயிருக்கலாம்!
இங்கேன்
உதிர்ந்து போனாய்!

– ஜ.நம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிகாரப் பரவலாக்கமும் அபிவிருத்தியும்

சமுத்திரன்

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

4. மேற்கூறியவற்றுடன் இணைந்த மற்றைய அம்சங்களாவன; மக்களின் அடிப்படை உரிமைகளான உணவு - உறைவிடம் - உடை - கல்வி - சுகாதார வசதிகள்; தமது கூட்டு நலன்களுக்காக ஸ்தாபனங்களை மக்கள் அமைக்கும் சுதந்திரம்; தேசிய வருமானத்தின் பங்கீட்டின். அசமத்துவங்களைக் குறைககக் கோரிப்போராடும் சுதந்திரம்; குறிப்பிட்ட பிரதேசத்தின் அம்மக்களின் விசேட அம்சங்களை முழு சமூகத்தின் நலன்களுக்கும் பொதுவான ஜனநாயக ரீதியான முன்னேற்றத்திற்கும் உதவும் வகையில் அல்லது குந்தகம் விளைவிக்காதவகையில் பாதுகாப்பதற்கான சுதந்திரம். இவற்றை உறுதி செய்யவும் இவற்றிற்கு அடிநாதமாக விளங்கும் ஜனநாயக விழுமியங்களின் மேம்பாட்டிற்கு உதவவும் அதிகாரப் பரவலாக்கம் மிகவும் உதவியாக இருக்கும். மேற்கூறிய பொது அம்சங்களை விளக்கும் பல உள்நாட்டு உதாரணங்களைத்தரலாம். ஆனால் இப்போதைக்கு அதைத்தவிர்த்துக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை இங்கு அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெறும் ஒரு கேள்வியை விவாதித்தல் அவசியம். இங்கு குறிப்பிட்ட அம்சங்களையும் அவற்றிடமிருந்து கிளம்பும் கோரிக்கைகளையும் மக்கள் ஜனநாயகத்தில் ஈடுபாடுள்ளோர் எப்படிக் கையாள வேண்டும்? ஒரு முதலாளித்துவ அமைப்பின் விருத்திக் காலகட்டம் ஜனநாயக உரிமைகளின் போராட்டங்களுக்கும் அவற்றிற் கூடாக மக்களின் அரசியல் கலாசார அறிவூட்டலுக்கும் சந்தர்ப்பங்களைக் கொடுக்கிறது. தொழிற்சங்கப் போராட்டங்கள் நகர்ப்புறத்தில் தொழிலாளர் மத்தியில் ஜனநாயக உணர்வையும் போராட்டங்களின் வெற்றியைப் பொறுத்து உரிமைகளையும் பரவலாக்க உதவுகின்றன. ஆனால் இப்போராட்டங்களின் அரசியலோ பொருளாதார வாதத்திற்கு (Economism) கட்டுப்பட்டிருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கலுக்கான போராட்டமும் அதன் விளைவாக வரக்கூடிய நடைமுறை அதிகாரப் பரவலாக்கலும் ஜனநாயக உணர்வையும் உரிமைகளையும் நகரங்களுக்குமப்பால் நாட்டு மக்கள் மத்தியில் பரவலாக்க உதவுகின்றன. இதன் அரசியலும் இறுதியில் சீர்திருத்தவாதத்தின் எல்லைகளினால் கட்டுப்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் முதலாளித்துவத்தை அதன் சமூக ஜனநாயக எல்லைகள் வரை அரசியல் ரீதியில் தள்ளுவது மக்கள் போராட்டங்களின்றி இடம் பெறாது என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தப் போராட்டங்கள் உழைப்பாளரின் பொருளாதார ஸ்திரப்பாடு பற்றிய வர்க்கப் போராட்டங்களை மட்டுமல்ல, முதலாளித்துவத்திடமிருந்து பெற்று அனுபவிக்கக் கூடிய ஜனநாயக சுதந்திரங்கள், சூழலின் பாதுகாப்பு, பெண்ணுரிமைகள், குழந்தைகளின் உரிமைகள், இனசமத்துவம் போன்றவற்றிற்கான போராட்டங்களையும் உள்ளடக்கியவையே.

பல முனைகளில் பல்வேறு வழிகளில் பல்விதமான அணிகளின் இணைவுகளால் இடம்பெறும் இப்போராட்டங்கள் மக்களின் சமூக உணர்வையும் விரிவாக்க உதவுகின்றன. இந்த விரிவாக்கம் ஒரு பல்லின சமூகத்தில் இனத்துவ மையவாதத்திற்கும் (Ethnocentrism) வகுப்புவாதத்திற்கும் (Commicnalism) எதிராகச் செயற்படும் தன்மையது.

எனது அபிப்பிராயத்தில் தம்மை மக்கள் ஜனநாயகவாதிகள் எனக்கருதும் சகல சோஷலிசவாதிகளும் இத்தகைய போராட்டங்களை ஆதரிக்கவே செய்வர். அவற்றில் தீவிர பங்கை வகிக்ககூடிய அமைப்புக்களை உருவாக்கவும் செய்வர். வளர்முக முதலாளித்துவ நாடொன்றில் மக்கள் ஜனநாயகவாதத்தின் முக்கிய பணிகள் ஜனநாயக உணர்வையும் உரிமைகளையும் பரவலாக்கவும் முடிந்தவரை அவற்றை ஆழமாக்கவும் உழைத்தலாகும். பின்னையது - அதாவது ஜனநாயகத்தின் ஆழமாக்கலுக்கான அரசியற் செயற்பாடுகள் - முதலாளித்துவத்திற்கும் அப்பால் ஏற்படுத்தக்கூடிய அமைப்பு பற்றிய அறிவிற்கும் உணர்விற்கும் வித்திட்டு, அவ்வித்தினை வளர்த்தெடுக்க உதவும் நடைமுறை எனலாம். அதாவது சோஷலிச உணர்வை வளர்க்கும் வழிமுறை எனலாம். இதுவே பொருளாதார வாதத்தை விமர்சிக்கவும் அதைத் தாண்டிச் செல்லவும் நீண்டகாலப் போக்கில் உதவக்கூடியது.

**அதிகாரப் பரவலாக்கலுக்கான போராட்டமும் அதன் விளைவாக வரக்கூடிய நடைமுறை அதிகாரப் பரவலாக்கலும் ஜனநாயக உணர்வையும் உரிமைகளையும் நகரங்களுக்குமப்பால் நாட்டு மக்கள் மத்தியில் பரவலாக்க உதவுகின்றன. இதன் அரசியலும் இறுதியில் சீர்திருத்தவாதத்தின் எல்லைகளினால் கட்டுப்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் முதலாளித்துவத்தை அதன் சமூக ஜனநாயக எல்லைகள் வரை அரசியல் ரீதியில் தள்ளுவது மக்கள் போராட்டங்களின்றி இடம் பெறாது என்பதை மறந்துவிடக்கூடாது**

ஆகவே, மக்கள் ஜனநாயகப் பார்வையில் அதிகார பரவலாக்கல் ஒரு இறுதிநிலையல்ல. சமூக மாற்றத்தின் தொடர்ச்சிப் போக்கை குறிப்பிட்ட காலகட்டத்தின் தவிர்க்க முடியாத கட்டுப்பாடுகளுக்குள் நெறிப்படுத்தித் துரிதப்படுத்த உதவும் ஒரு வழிமுறையாக, கருவியாக அதிகாரப்பரவலாக்கலைப் பார்க்கலாம். இப்படிக் கூறுவது ஆட்சியாளர் நிலையிலிருந்து அதிகாரப்பரவலாக்கலைக் பார்ப்பதற்கும், மக்கள் மட்டத்திலிருந்து அதைப்பார்ப்பதற்கும் வேறுபாடுகள் உண்டென்பதாகும். இன்று நிலவும் சர்வஜனவாக்குரிமை அரசாங்கத்தை மாற்ற உதவுகிறது என்பது உண்மை. ஆனால் மக்கள் நலன்களைப் பாதிக்கும் பல முக்கிய விடயங்களை நடத்திச் செல்லும் ஸ்தாபனங்களை இந்த உரிமையால் மட்டும் ஏற்படுத்த முடியாது. முக்கிய தீர்மானங்கள் பல மட்டங்களில் எடுக்கப்படுகின்றன. உதாரணம்: பாராளுமன்றம் அமைச்சுக்கள் பொருளாதார நிறுவனங்கள், பிரதேச கிராமிய மட்டங்கள். இவற்றில் மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கக் கோரும் போராட்டங்களால் ஆட்சியாளர் வகுக்கும் அதிகார பரவலாக்கல் அமைப்பின் தன்மைகளை நிர்ணயிப்பதில் செல்வாக்குச் செலுத்த முடியும். இது அப்போராட்டங்களின் பலத்தைப் பொறுத்தது.

**மக்கள் ஜனநாயகப் பார்வையில் அதிகார பரவலாக்கல் ஒரு இறுதிநிலையல்ல. சமூக மாற்றத்தின் தொடர்ச்சிப் போக்கை குறிப்பிட்ட காலகட்டத்தின் தவிர்க்க முடியாத கட்டுப்பாடுகளுக்குள் நெறிப்படுத்தித் துரிதப்படுத்த உதவும் ஒரு வழிமுறையாக, கருவியாக அதிகாரப்பரவலாக்கலைப் பார்க்கலாம். இப்படிக் கூறுவது ஆட்சியாளர் நிலையிலிருந்து அதிகாரப்பரவலாக்கலைக் பார்ப்பதற்கும், மக்கள் மட்டத்திலிருந்து அதைப் பார்ப்பதற்கும் வேறுபாடுகள் உண்டென்பதாகும். இன்று நிலவும் சர்வஜனவாக்குரிமை அரசாங்கத்தை மாற்ற உதவுகிறது என்பது உண்மை. ஆனால் மக்கள் நலன்களைப் பாதிக்கும் பல முக்கிய விடயங்களை நடத்திச் செல்லும் ஸ்தாபனங்களை இந்த உரிமையால் மட்டும் ஏற்படுத்த முடியாது.**

இன்றைய இலங்கையில் அத்தகைய போராட்டங்கள் பரவலாகவும், தொடர்ச்சியாகவும் இடம்பெறவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். எனது அபிப்பிராயத்தில் ஒரு காரணம், இடதுசாரி அமைப்புக்கள் அதிகாரப் பரவலாக்கலை ஒரு வெகுஜன அரசியல் கோரிக்கையாக்கிப் போராட முன்வராது இருப்பது ஒருபுறம் அதிகாரப்பரவலாக்கல் ஒரு நிர்வாக ரீதியான சீர்திருத்தம் எனக்கருதி அதை மேலிருந்து கீழாக சட்டங்கள் மூலம் உருவாக்கிவிடலாம் எனக்கருதும் பிரதான போக்கு இடதுசாரிகள். மறுபுறம், கொச்சைப்படுத்திய மார்க்சிசத்திற்குத் தம்மைக் காவலர்களாகத் தாமே நியமித்துக் கொண்டு ஆக்க பூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழந்துவிட்ட சில சுலோகவாதக் குழுக்கள். இவை இரண்டிற்குமிடையே சில இடதுசாரி அமைப்புக்கள் இயங்க முற்படுகின்றன. இவற்றின் பலம் ஓங்குதல் அதிகாரப் பரவலாக்கலை தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், பெண்கள் போன்ற பிரிவினருக்கும், சூழல் இயற்கை வளங்களின் பயன்பாட்டைப் பேணும் அபிவிருத்திக்கும் உதவும் வகையில் நெறிப்படுத்த உதவலாம். இத்துடன் விஞ்ஞான தொழில்நுட்ப விருத்திக்கான இயக்கங்களின் செயற்பாடுகளும் இணைந்தால் மேலும் பயன்கிடைக்கும்.

இப்போது வடகிழக்குப் பற்றிய விடயத்திற்கு வருவோம். மேற்கூறியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது தீர்விற்குப்பின் வடகிழக்கின் அபிவிருத்திக்கு அதிகார மையப்படுத்தலை விட பரவலாக்கவே கூடுதலாக உதவும் எனவாதிடலாம். தமிழ் இனத்தவரின் தேசிய சுயநிர்ணய உரிமைப்பிரச்சினைக்கு ஒரு ஐக்கிய இலங்கையில் சமஷ்டி முறைக்கூடாக தீர்வு கிடைத்துவிட்டது என வைத்துக் கொள்வோம். அத்தகைய ஒரு நிலை ஏற்பட்டால் வடகிழக்கின் பிரதேச ரீதியான அபிவிருத்தியும் மக்களின் உரிமைகளும் பிரதான இடங்களைப் பெறும் என நம்புகிறேன். அங்குவாழும் முஸ்லிம் மக்களின் உரிமைகளும் பாதுகாப்பும் இதற்குள் அடங்கும். யுத்தத்தால் அழிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தின் பொருளாதார ரீதியான, சமூக ரீதியான புனர் நிர்மாணத்திற்கும் தொடர்ச்சியான அபிவிருத்திக்கும் அதிகாரப்பரவலாக்கல் மிகவும் பயன்பாடுள்ளது என்பது என் கருத்து.

ஏற்கெனவே குறிப்பிட்ட பொதுவான நியாயப்பாடுகளுடன் சில விசேட நியாயப்பாடுகளும் உண்டு.

1. இன்றைய நிலையில் அதிகார மையப்படுத்தல் அதிகாரவர்க்கத்தின் தொடர்ச்சிக்கும், அதன் பலப்படுத்தலுக்கும் உதவும். இது அபிவிருத்திக் கொள்கைகள் பற்றிய திறந்த விவாதங்களுக்குச் சாதகமானதல்ல. இப்படிச் சொல்வது அதிகார மையப்படுத்தலால் பொருளாதார வளர்ச்சி தடைப்படும் என்பதல்ல. ஒருவேளை தலைமையைப் பொறுத்து பொருளாதார வளர்ச்சி துரிதப்படலாம். ஆனால் கேள்வி என்னவெனில் வடகிழக்கு பிரதேசத்திற்குள் சமத்துவமான - அதாவது உட்பிரதேசப்பிரிவுகளுக்கிடையே விருத்தியை அது ஏற்படுத்துமா? சகல சமூகப்பிரிவுகளுக்கும் பொருளாதார விமோசனம் கிட்டுமா?

2. இவற்றைத்தான் திருப்திப்படுத்திவிட்டாலும் பெற்ற சுயநிர்ணய உரிமை மக்கள் உரிமைகளாகப் பரிணமிக்காத பட்சத்தில் மக்களுக்கு என்ன விடுதலை கிடைக்க முடியும்? தெற்கில் வாழும் சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் தனிமனித உரிமைகள் அரசியல் சுதந்திரங்களுக்குச் சமமான உரிமைகள் இல்லாத ஒரு வடகிழக்கு சுயாட்சி எப்படி நின்று பிடிக்கும். மக்கள் அங்கிருந்து தெற்கை நோக்கியோ, வேறு நாடுகளை நோக்கியோ செல்லும் போக்கு அதிகரிக்கலாம். இப்போது யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுவோர் தொகை அங்கு நிரந்தரமாகத் திரும்புவோர் தொகையை விட அதிகம். இப்போது விடுதலைப்புலிகள் போட்டிருக்கும் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால் இந்த நிலை மேலும் மோசடையலாம். தீர்விற்குப் பின் வடகிழக்கிற்கு முன்னர் அங்கிருந்து வெளியேறிய மக்களை முடிந்தவரை திரும்பிவர ஊக்குவிக்கும் நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். இதற்கு அதிகார பரவலாக்கலும் அடிப்படை ஜனநாயக உரிமைகளும் அவசியம்.

3. வடகிழக்கைப் பொருத்தமான சில உப பிரதேசங்களாக வகைப்படுத்தி அந்தப்பகுதிகளின் வளங்களின் பொருளாதார சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அபிவிருத்தி செய்வது புனர்நிர்மாணத்தைத் துரிதமாக்க உதவும் எனவாதிடலாம்.

இவை போன்ற காரணங்களால் வடகிழக்கிற்கு சுயாட்சி கிடைத்தால் அங்கும் அதிகாரப்பரவலாக்கல் பொருளாதார, சமூக, சூழல் விருத்தியினைத் துரிதமாகவும் முடிந்தவரை சமத்துவமானதாகவும் மாற்ற உதவும் எனக்கருதுகிறேன். வடகிழக்கு விடயம் பற்றி அடுத்துவரும் சரிநிகர் இதழ்களில் கட்டுரைகள் எழுத இருப்பதால் இங்கு குறிப்பிட்ட, குறிப்பிடாத அம்சங்களை அக்கட்டுரைகளில் விரிவாகக் கையாள எண்ணியுள்ளேன்.

இந்த நீண்ட குறிப்பை எழுதத் தூண்டிய ஒரு கட்டுரையை எழுதியமைக்காக தியாகராசாவிற்கு எனது நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''சே, இந்த அம்மா பெரிய மோசம். கொஞ்சமும் இரக்கமில்லை இண்டைக்கு முழுக்க வீட்டுக்குள்ளேயே இருக்க வச்சுப் போட்டா. எவ்வளவு நேரத்துக்குத்தான் நான் தனிய இப்பிடி முழிசி முழிசி இருக்கிற. அந்தக் குருட்டுக் கண் காக்கை இதோடை ஏழெட்டுத்தரம் முருங்க மரத்துக்கு வந்து வந்து போயிற்று. அவவத்தான் இன்னமும் காணல்ல. இன்னா வருவாவு அன்னா வருவாவு எண்டு பார்த்துப் பார்த்தே என்ட பாடு போச்சி. எங்க போனாவோ தெரியா. சேந்தன் கூட இதோட மூண்டு தரம் வந்து கூப்பிட்டுப்பாத்துப் போயிற்றான். இண்டைக்கு அவனோட விளையாடப் போகயில்லயெண்டு அவனுக்கு சரியான கோபம்.

கடைசியாய் போகக்குள்ள ''இனிமேல் உன்னக் கூப்பிட வ்ரமாட்டண்டி. சத்தியமாய் வரமாட்டன்டி'' எண்டு சொல்லிப் போட்டுத்தான் போனவன். அவன் திரும்பியும் வருவான். எனக்கு நல்லாத் தெரியும் அவன் திரும்பியும் வருவான். பாவம் சேந்தன்.. இண்டைக்கு மீன் பட்டம் விடுற எண்டு சொல்லி என்ன ஆசயா காசு சேத்து பட்டுக் கடதாசி வேண்டி வச்சிருந்தவன். காசு சேக்கிறதுக்கெண்டு சாமான்ட விலையக்கூடச் சொல்லி அவங்கட அம்மாட்ட அடியும் வாங்கியிருக்கான். அதுக்கிடையில் நேற்றுக் கருக்கலுக்குள்ள எனக்கு எனக்கு அப்பிடி நடந்து போச்சு. அவனுக்கு இதுகளைப்பத்தி ஒண்டும் தெரியாதாக்கும். ஆக்களெல்லாம் வந்து என்ட தலையில தண்ணி ஊத்தி குரலு போட்ட சத்தமும் கேட்கல்லயாக்கும். இல்லாட்டி ராவு வீட்ட வந்திருப்பான். வந்திருந்தா ரெண்டு மூண்டு வாழைப்பழம் எண்டாலும் குடுத்திருப்பன். நேற்றுக் கருக்கலுக்குள்ள எங்க போனானோ தெரியா.

இண்டைக்கு நான் அவனோட விளையாடப் போவன் எண்டு போட்டு விடியத்தோடயே பட்டுக் கடதாசியோட வந்திட்டான்.

முகத்தத் தொங்கப் போட்டுக்கொண்டு அவன் போனதப் பாக்கிற நேரம் பாவமா இருந்திச்சி.

ஆனா அதுக்கு நான் என்ன செய்யிற?

இனிமே ஒரு பெடியனுகளோடையும் கதைக்கக் கூடா, விளையாடக்கூடா எண்டு அம்மா சொல்லிப் போட்டா.

அப்படி நான் கதைச்சா ராவல படுக்கைக்குள்ள மோகினிப் பிசாசு வந்து கனவுல பயமுறுத்துமாம். எனக்கு அம்மாவுக்கும் அவ்வளவு பயமில்ல. இந்தப் பேய் பிசாசுகளுக்கு சரியான பயம். இல்லாட்டில் இன்னேரம் நான் சேந்தனோட சேந்து பட்டம் விட்டுக் கொண்டிருப்பன். சே, சனியன் பிடிச்சது என்னத்துக்கு நேத்து அப்பிடி நடந்திச்சோ தெரியா. அது நடந்த பிறகுதானே அம்மா என்ன இப்பிடிப் பூட்டி வச்சிருக்கா.

முதலெல்லாம் அம்மா இப்பிடிக் கடுமையா என்ன விளையாடப் போக வேணாம் எண்டு சொல்லயில்ல.

இப்ப எப்பிடி அவனோட விளையாடப் போறது?

அம்மா வந்தோண கேக்கோணும் ''எத்தினை நாளைக்கம்மா மோகினிப் பிசாசு பயமுறுத்தும்'' எண்டு.

ஆ, அந்தா படலை திறக்கிற சத்தம் கேக்குது. அம்மா தான் வாறாவாக்கும். இல்ல சேந்தனோ தெரியா. இல்ல அம்மாதான். பாவம் அம்மாட முகமெல்லாம் வேர்த்திருக்கு. அப்பா செத்துப் போன பிறகு அம்மாவுக்கு சரியான கரச்சல். கூப்பன் கடைக்கு போறதெண்டாலும், சந்தைக்குப் போறதெண்டாலும் அம்மாதான் போகோணும். வெங்காயம், கொச்சிக்காய் வாங்கிரதெண்டால் பக்கத்தில் செல்லையாட கடைக்கு நான் போய் வருவன். இப்ப அங்கயும் போகக்கூடாதெண்டு அம்மா சொல்லிப் போட்டா. இனி அதுக்கும் அம்மாதான் போவாவாக்கும்.

பாவம் அம்மா. அப்பா செத்த பிறகு சரியா கரச்சல். நாசமாய் போனவங்கள் அப்பாவச் சுட்டுப் போட்டாங்கள். அப்பா இருந்திருந்தா இன்னேரம் அப்பாட்டக் கெஞ்சிக் கூத்தாடியெண்டாலும் சேந்தனோட விளையாடப் போயிருப்பன். மோகினிப் பிசாக்கும் எனக்குப் பயம் வந்திருக்காது.

அப்பாக்குக் கிட்டப் படுக்கக்குள்ள மோகினிப் பிசாசென்ன, கொள்ளியாப் பிசாசு வந்தாலும் பயமில்ல. கனக்க என்னத்துக்கு கரையாக்கன் பேயெண்டாலும் பயமில்ல. அப்பாவோட கோரக்களப்பாத்துக்கு றால் பிடிக்கப் போற நேரம் எல்லாரும் என்னட்டச் சொல்லுவாங்கள், றால் தின்ன கரையாக்கன் பேய் வருமாம் எண்டு.

வீசிவீசிக் கூடைக்குள்ள போட்டாலும் சிலநேரம் றாலெல்லாம் மாயமா மறைஞ்சிடுமாம். அது முழுக்க கரையாக்கன்ர வேலை தானாம் எண்டு எனக்குப் பயம் காட்டுவாங்கள்.

இப்படிக் கனக்கப்பேருக்கு நடந்திருக்காம் எண்டு சொல்லுவாங்கள். ஆனா எனக்கு அப்பாவோட இருக்கக்குள்ள கொஞ்சமும் பயம் வாரயில்ல. நான் இந்தக் கதைகள் ஒண்டையும் கேளாமல் போறனான்.

அப்பாவோட வீசப் போறதுக்கு எனக்கு நல்ல விருப்பம்.

ஏனெண்டால், பக்கத்துத் துறைக்கு சேந்தன் அவன்ட அப்பாவோட வாறவன்.

பகல்ல விளையாடினது கர்ணாதெண்டு ராவிலயும் நல்ல விளையாட்டு.

வீசித்திருக்கக் குள்ள அவங்கட அப்பா கருட்டுப் பத்த சோமண்ணன்ட வாடிக்குப் போனாரெண்டால் சேந்தன் எங்கட துறைக்கு வந்திருவான். அவன் தனியா இருக்கக்குள்ள கரையாக்கன் பேய் வந்திருமோ எண்டு பயம்.

அப்பா வலைய உதறிக் கூட்டுக்குள்ள றாலெல்லாம் போட்டுப் போட்டு, பாடெடுத்து திரும்பியும் வீசப் போகக்குள்ள நாங்களும் பின்னால போய் கையக் கோத்துக் கொண்டு கரையில நிப்பம். ஆத்துக்குள்ள கம்பு நாட்டி அப்பா கொளுத்தி வச்சிருக்கிற லாம்புக் கடியில கெளுத்திக் குஞ்சுகள் கூட்டம் கூட்டமா வந்து வாயத்திறக்கும்.

''சேந்தா நல்லாப் பாருடா உன்னப் போல அதுகளுக்கும் பெரிய தல'' எண்டு சொல்லுவன். கொஞ்ச நேரத்துக்கு என்னோட பேசமாட்டான்.

அப்பா ஆத்துக்குள்ள வலைய எறிஞ்ச சத்தம் கேட்டாலே அவனுக்குக கோபமும் முடியும். வலைய எறிஞ்ச உடன றால் தெறிக்கிற சத்தம் எல்லாப் பக்கமும் கேக்கும். நாங்க ஓடி ஓடிப் போய் எல்லாப் பக்கமும் பாப்பம்.

சில நேரம் பெரிய மீன் என்னெண்டாலும் மாட்டிச்சுதெண்டால் 'சளக் புளக்' எண்டு தண்ணி அடிக்கிற சத்தம் கேக்கும்.

பிறகு நாங்க பாத்துக் கொண்டிருக்கக்குள்ளேயே வலையைப் பிச்சுக் கொண்டு பாயும். அதிலயும் கயல் மீன் எண்டால் குறஞ்சது அப்பாட உயரத்துக்குப் பாயும். அது பாயுறதப் பாக்கக் குடுத்து வச்சிருக்கோணும். அவ்வளவு வடிவு. லாம்பு வெளிச்சத்தில் பாக்கக்குள்ள இன்னமும் வடிவு.

றால் வலைய வச்சிக் கொண்டு இந்தப் பெரிய மீனுகளப் பிடிக்கேலாது, அதுக்கு வேற வலையிருக்கு. கொடுவா மீன் எண்டால் அதயும் பிச்சுக் கொண்டு பாஞ்சிரும். அதப் பிடிக்கிறது கடும் கஷ்டம். ஆத்துக்குள்ள இறங்கி ''கட்ட'' வேணும். கொடுவாயப் பிடிக்கிற ஆக்களத்தான் நல்ல வீச்சுக்காரம் எண்டு சொல்லுவாங்க.

அப்பாட வலைக்குள்ள றாலும், கெளுத்தி, சள்ளல், செல்வன் மாதிரி சின்ன மீனுகள் தான் வரும்

மட்டை றால் பட்டுதெண்டால் அது வால அடிக்கிற சத்தத்தைக் கேட்டே அப்பா சொல்லுவாரு கொம்பன் ஒண்டு கொளுவியிருக்குதெண்டு.

இதச் சொல்லக்குள்ள அப்பாக்கு சந்தோஷம் வரும். மட்டை றால் விலை கூடினது. முப்பது நாப்பது வெள்ளை றால்ர காசு.

அப்பா குனிஞ்சு, குனிஞ்சு கள்ளன் பதுங்கிறமாதிரி வலையக் கூட்டி எடுக்கிறதப் பாக்கிற நேரம் எங்களுக்குச் சிரிப்பு சிரிப்பா வரும். ஆனாச் சிரிக்கமாட்டம். வலையக் கூட்டக்குள்ள சத்தம் போடக்கூடா எண்டு அப்பா சொல்லியிருக்காரு. சக்கம் கேட்டா பெரிய மீனுகள் பாஞ்சிருமாம். அப்பா பதுங்கிறதப் பாத்துப் போட்டு சேந்தன் என்ட காதுக்குள்ள சொல்லுவான்.

''டியேய் உங்கட அப்பா நல்லாக் களவெடுப்பாருடி '' எண்டு. உடன அவன்ட இடுப்பில ஒரு கிள்ளு. அடிக்கிறதுக்கு ஓடி வருவான். அவன் ஓடி வாரதப் பாத்தா ஆருக்கெண்டாலும் சிரிப்புத்தான் வரும். வழுகிற காச்சட்டய இழுத்துப் பிடிச்சுக்கொண்டு ஓடி வருவான். அது குண்டிப்பக்கம் வழுக்கிக் கொண்டு போகும். சேந்தன்ட காச்சட்டையில் ஒரு பொத்தானும் இருக்கா. ரெண்டு பக்கமும் பிடிச்சி இழுத்து முடிஞ்சி வச்சிருப்பான். காத்துப் போறதுக்கோ தெரியா பின்பக்கத்தில அச்சாறு ஒட்ட ஒரு நாள் இப்படித்தான் என்னத் துரத்திக் கொண்டு வரக் கொள்ள ஆள்ர காச்சட்ட கழண்டு டக்கெண்டு முழங்காலுக்குக கிட்ட வந்திட்டுது. ''கூய்ரா, கூய்ரா'' எண்டு நான் கூய்ராப் போட்டதால அடுத்த ரெண்டு நாளும் ஆள் என்னப் பாக்கயும் இல்ல. சேந்தன் அடிக்க ஓடி வந்தா நான் வலிப்புக் காட்டிப் போட்டு கூட்டுக்கிட்ட இருக்கிற லாம்புக்குப் பக்கத்தில வந்து அப்பாவோட ஒட்டின மாதிரி நிப்பன். அப்பா வலைய உதறுவாரு. எங்கட முகத்தில் எல்லாம் ஆத்துத்தண்ணி தெறிக்கும். அது சரியாக் கடிக்கும். வலையிலிருந்து ஒவ்வொண்டா றால் கூட்டுக்குள்ள விழும். கெளுத்தி மீன்கள் மட்டும் வலைய கண்ணில மாட்டிக் கொண்டு தொங்கும். வலையோட வச்சே அதுகள்ர முள்ள முறிச்சுப்போட்டு கழட்டிச் சட்டிக்குள்ள போடுவாரு. கெளுத்தி முள் குத்தினா கடும் விஷம். அதால அப்பா அதுக்கெண்டே தனியா ஒரு சட்டி வச்சிருப்பாரு.

எங்க ரெண்டு பேரையும் அதத்தொட விடமாட்டாரு.

கடைசியா சுளிக்குள்ள கிடக்கிற மீனுகளக் கழட்டி விடுவாரு. நண்டுக குஞ்சுகளும் சேந்து விழும்.

நண்டுக் குஞ்சுகள் நடந்த கூட்டயும் விட்டு வெளிலே வரப்பாக்கும். அதப் பிடிச்சு கூட்டுக்குள்ள போடச் சொல்லி சேந்தன் கெஞ்சுவான்.

அவனுக்கு நண்டெண்டாலும் சரியா பயம். பேய் நண்டெண்டால் இன்னமும் பயம்.

எப்பத்தான் இவனுக்கு இந்தப் பயம் தீரப் போகுதோ எண்டு யோசிச்சுப் பாப்பன். இந்தப் பயத்துக்கு என்னெண்டாலும் செய்ய வேணும் எண்டு யோசின வரும்.

அதாலதான் ஒரு நாள் அந்த வேலையச் செய்த



நான். அத இப்ப நினைச்சாலும் சரியான சிரிப்பும் கவலயும்.

(ஒரு நாள் என்ன செய்தனெண்டால்) சேந்தனுக்குத் தெரியாம பின்னால போய் ஒரு சின்ன நண்டுக் குஞ்ச அவன்ட சேட்டுக்குள்ள போட்டுத்தன். ''ஆய் '' எண்டு அவன் போட்ட கூச்சல்ல பக்கத்துத் துறையள்ள வீசிக் கொண்டிருந்த ஆக்கள் எல்லாம் ஓடி வந்திட்டாங்கள். பிறகு மூணு நாள் சேந்தனுக்குக் கடும் காய்ச்சல். கோயில் ஐயர் வந்து திருநீறு போட்டுத்தான் சுகமாயிருச்சி.

விசயத்த கேள்விப்பட்டு வீட்ட எனக்கு நல்ல உரி.

அப்பா இல்லாம இருந்திருந்தா அம்மா என்ன அடிச்சே கொண்டிருப்பா.

சேந்தன் நல்லவன். அதுக்குப் பிறகும் விளையாட வருவான். பிறகும் ரெண்டு பேரும் ஆத்துக்குப் போவம். கண்ணாப் பத்தைக்குள்ள ஒளிக்கிற மீனுகள சுத்தாங்கால பிடிப்பம். அப்பா வீசக்குள்ள ஒரு ஓரமா இருந்து தூண்டில் போடுவம். நண்டக் கையால பிடிக்கிறதுக்கும் சேந்தன் கொஞ்சம் கொஞ்சமாய் பழகியிருந்தான். றால் சீஸன் முடிஞ்சா நிலவு காலத்தில பூக்கனெட்டிய எடுத்துக் கொண்டு நண்டடிக்க கடக்கர நெடுகப் போவம். நண்டடிக்கிறது சரியான முஸ்பாத்தி. அப்பாவும், சேந்தன்ட அப்பாவும் பூக்களெட்டியால ஓடித்திரியிற நண்டுகள்ள ஒரு போடு போடுவாங்க. நாங்க ரெண்டு பேரும் பின்னால ஓடி ஓடி நண்டுகளப் புறக்கி வேக்குக்குள்ள போடுவம். சேந்தன் நல்லா ஓடி ஓடிப் புறக்குவான். நான் இளைச்சுப் போயிடுவன். பிறகு சேந்தன். என்ட கையையும் சேத்து இழுத்துக் கொண்டு ஓடுவான். வேக்கு நிரம்புறதுக்கு இடயில எப்பிடியும் தோட்டத்துச் சுப்புறிந்தர்ர வங்களாக்குக் கிட்டப் போயிருவம். அங்கால எங்களக் கூட்டிக்கொண்டு போக அப்பாக்கு விருப்பமில்லை. அங்கால ஆக்கள் இருக்கிறதும் இல்ல. வெறும் தென்னந்தோட்டம் தான். அடிச்ச நண்டுகள அம்மா உடன கழுவிப் போட்டு அப்பிடியே போட்டு பால் பொரியல் வெச்சித்தருவா. சா, என்ன ருசி. குறுனல்ச் சோறோட அந்த நண்டுக்கறிய சேத்து வாசல்ல நிலவுல சாப்பிடுறது என்ன சந்தோசம். இப்ப அதெல்லாம் இல்லத் துப் போச்சி.

அப்பாவச் சுட்டதோட இப்ப ஒருத்தரும் ஆத்துக்கு வீசப்போறயில்ல.

ஒருத்தரும் நண்டடிக்கப் போறதுமில்ல. நிலவெண்டாலும் சரி, இருட்டெண்டாலும் சரி சவக்காலைக்கு அங்கால ஒருத்தரும் போறயில்ல.

சேந்தன்ட அப்பாவும் இப்ப கடலுக்குத்தான் போறவரு.

நேற்றையோட வீட்டில விளையாடிறதும் போச்சி.

இனிமே ஒரு நாளும் விளையாட ஏலாதோ தெரியா?

அம்மாட்டத்தான் கேக்கோணும்.

''இந்தா மகள், இந்த முட்டக் கோப்பியக்குடி'' அம்மா நீட்டிறா.

எனக்கு அது புதினம் மாதிரி. அப்பா செத்த பிறகு அம்மா இப்பிடி முட்டைக் கோப்பியெல்லாம் தாரதே இல்ல. எப்பெண்டாலும் எனக்கு காய்ச்சல், கீய்ச்சல் எண்டால் தருவ. இப்ப எனக்கு என்னத் துக்குப் தாறா?

''இந்தா மகள், கண்ண மூடிக் கொண்டு மடக் மடக் கெண்டு இதக்குடிபாப்பம்'' வாங்கிக் குடிச்சன். சாடையாக் கச்சுது.

முட்டைக் கோப்பிக்குள்ள மருந்தும் இருந்ததெண்டு பிறகு தான் சொன்னா. என்னத்துக்கெண்டு கேட்டன் சத்துக்காம் எண்டா.

''அம்மா இண்டைக்கு நான் சேந்தனோட விளையாடப் போகல்லம்மா''

''நல்ல பிள்ள''

''நாளைக்குப் போகலாம்தானே எனம்மா''

''இஞ்ச பாரு மகள். இனி நீ சின்னப் பிள்ளையில்ல. ஒரு நாளும் இனி சேந்தனோடயோ வேற பெடியனுகளோடையோ விளையாட போகக்கூடா. பள்ளிக்குப் போகத் தேவயில்ல.''

அம்மா சொல்லிச் கொண்டிருக்கக்குள்ள படலைச் சத்தம் கேட்டிச்சி. அம்மாக்குத் தெரியாம நைஸா எட்டிப் பாத்தன். சேந்தன், இதோட நாலாம்தரம் வாரான். பின் பக்கமா வரச் சொல்லி கையகாட்டினான். அம்மா, ஆரெண்டு கேட்டா.

''ஒருத்தரும் இல்லம்மா. காத்துக்குப் படலை ஆடிருக்கு'' எண்டு சமாளிச்சுப் போட்டன். பிறகு அம்மா குசினிக்குள்ள போனா.

சேந்தன் யன்னலுக்குப் பக்கத்தில வந்து நிண்டு கொண்டு உஸ்ஸடிச்சான். ''வாடி செவ்வந்தி. நீ பட்டம் செய்யவும் தேவையில்லடி. சும்மா வந்து நூலைப்பிடிச்சுக் கொண்டு நில்லுடி''

''டேய் போடா, எத்தின தரம் உன்னட்டச் சொல்றது நான் இனி வரமாட்டன் எண்டு''

''நீ சரியான ஆள்ரி. உனக்காவண்டிதானடி நான் மோகனோடயும் சாந்தியோடயும் சத்தம் போட்டநான். வாவன்டி''

''எனக்கும் பட்டம் விட விருப்பந்தாண்டா (சேந்தா). ஆனா, உன்னோட வந்து விளையாடினா என்னத்தான் மோகினிப் பிசாசு பயமுறுத்துமாம்''

''இல்லடி செவ்வந்தி, அது சும்மா சொல்றவங்கள்ரி. வாவன்டி''

''எனக்கொல்லுவாங்க''

'' நீ இண்டைக்கு வராட்டி உனக்குக் கணக்குச் சொல்லித் தரமாட்டன்''

''தேவல்லங்கா, நான் இனி பள்ளிக்கு வரமாட்டன்''

''உன்னக்கூத்துப் பாக்கவும் கூட்டிப் போகமாட்டன்''

''ப்ரவாயில்ல''

''புளியம்பழமும் ஆஞ்சி தரமாட்டன்''

''பரவாயில்ல''

''அப்ப நீ வரமாட்டியோ''

''இல்ல''

''வரமாட்ட, ஒண்டு''

''இல்ல''

''வரமாட்ட , ரெண்டு'',

''இல்ல''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''இன்னும் ஒருக்காத்தான் கூப்பிடுவன்
வரமாட்ட மூ... ண்... டு''
''இல்ல இல்ல இல்ல''
நான் உரத்துக் கத்தினது அம்மாக்குக் கேட்டிற்றுப் போல
''ஆரது'' எண்டு கொண்டு வந்தா.

யன்னலோரமா சேந்தன் நிக்கிறதக் கண்ட உடன அம்மாக்கு சரியான கோபம் வந்திச்சி.

''டேய் என்னடா அது, பொம்பிளைப் பிள்ள இருக்கிற அறையில வந்து யன்னல் பக்கமா நிண்டு கத. போடா வந்திட்டாரு. அப்பன்காரன் இவள்ர அப்பாவ இழுத்துக் கொண்டு போய் சாகக்குடுத்ததுமில்லாம, இப்ப மகன் வந்திற்றாரு''

சேந்தன்ட மகம் சுருண்டு போச்சி. குளறாத மட்டு குனிஞ்சு கொண்டு போனான். பாக்கப்பாக்க பாவமா இருந்திச்சி. மனசுக்குள்ள அம்மாவ நல்லாத் திட்டினன். சேந்தன்ட அப்பா எங்கட அப்பாவ வேணுமெண்டோ கூட்டிக் கொண்டு போனவ ரெண்டு யோசிச்சன்.

அண்டைக்கு ஆத்துக்கு வீசப் போகக் கூடா எண்டு ஊரில ஜீப்பில பீக்கர் கட்டி அவங்க சொன்னது தெரிய முதல்லயே அப்பாவும், சேந்தன்ட அப்பாவும் வீசப் போயித்தாங்கள்.

அடுத்த நாள் எங்களுக்கு கணக்குச் சோதின இருந்ததால நாங்க போகயில்ல. அவங்க ஒரே இப்படித்தான். கொஞ்சம் நேரத்தோடதான் போவாங்க.

பரமன்ட கள்ளுக் கொட்டில்ல கொஞ்சம் சுணங்க வேணுமே.

போனவங்கள் இருட்டுக்குள்ள திரும்பி வரக் கொள்ள சவக்காலையடியில வச்சி வெடிச்சத்தம் கேட்டிச்சுதாம்.

''ஐயோ'' எண்டு கொண்டு அப்பா விழுந்தாராம். பிறகு எழும்பவேயில்லயாம்.

அடுத்த நாள் அப்பாட நெஞ்சுப் பக்கத்த ஒரு வெள்ளத் துணியால மூடிக்கொண்டு வந்து கிடத்தினாங்கள்.

அதுக்குப் பிறகு கொஞ்ச நாள் ஒரே குளறுவன். என்னேரம் சேந்தன் தான் வந்து ''குளறாதடி செல்வந்தி, வாடி விளையாடுவம்'' எண்டு என்ட கண்ணத் துடச்சுப் போட்டுக் கூட்டிப் போவான்

*** *** ***

அம்மா ஏசினதுக்குப் பிறகு சேந்தன் எங்கட வீட்டுப் பக்கமே வாரயில்ல. இங்கால அவ்வளவாப் பாக்கிறதும் இல்ல.

என்னோடயும் கோபிச்சுத்தானோ எண்டு சரியான கவல.

கிணத்தடியில குளிக்கக்குள்ள, ''வேலிக்கு மேலால மச்சான் வெள்ள முகம் தெரிவதெப்போ'' எண்டு சாடமாடயாய் அவனுக்கு விளங்கட்டும் எண்டு கொஞ்சம் உரத்துப் படிப்பன். திரும்பிப் பாப்பன். பிறகு டக்கென ஒரு முறச்ச பார்வ, இதப்பாத்துப் போட்டு அம்மா என்னோட சேந்து கிணத்துக்குத் தட்டி வேலி கட்டிப் போட்டா.

அப்பிடி இருந்தும் சேந்தனப் பாக்க வேணும் எண்டிற துடிப்பும் மட்டும் எனக்குப் போகயில்ல.

சேந்தனில டக்கெண்டு ஒரு வளத்தி தெரிஞ்சிது.

மீசையும் முளைக்கத் தொடங்கிற்று.

இப்ப அவன் ஒரு விளையாட்டும் விளையாடுற மாதிரியும் காணல்ல. விளையாட்டெல்லாம் மறந்து போச்சோ தெரியா. என்னேரமும் கையில புத்தகம் தான் இருக்கும்.

பாவம் சேந்தன், அவங்கட அப்பாவும் கொஞ்ச நாள்ல இல்லத்துப் போயித்தாரு.

அது, கடல்ல பெரிய மீனுகள் பிடிக்கிற சீஸன். பெரிய மீனுகளப் பிடிக்க வேணும் எண்டால் கனக்கத் தூரம் போக வேணும்.

அண்டைக்கு கடும் காத்து. அதால சேந்தன்ட அப்பர் வக்கூட தோணி பாயில நல்லாக் காத்துப் பிடிச்சி எங்கயோ கொண்டு போயிச்சுதாம்.

மற்றாக்கள் தோணியில இருக்கிற பாய்க்கயித்த டக்கெண்டு வெட்டிப்போட்டு தண்டடிச்சு வந்திற்றாங்கள்.

சேந்தன்ர அப்பாவ தோணியில மூணுபேரும் நித்திரைலோ தெரியாதாம். ரெண்டு மூணு நாள் கடக்கர நெடுக இந்த இடப்பட்ட இடமெல்லாம் தேடிப் பாத்தாங்கள். தோணி அடஞ்சி கிடக்குதோ எண்டு.

இல்ல, ஓரிடமும் தோணியில்ல. பிறகு தான் அவங்க உயிரோட இருப்பாங்களோ எண்டு சந்தேகம் வந்திருச்சி.

ஆரோ, கோளாவிலுக்குப் போய் குறிபாக்கிறவரக் கூட்டி வந்தாங்கள். அவரு வந்து ஒரு சட்டியில தண்ணி கொஞ்சம் எடுத்து வாய்க்குள்ள முணுமுணுத்தாரு. பிறகு மூணு செவ்வரத்தம் பூவ தண்ணிக்குள்ள போட்டாரு. எல்லாரயும் கொஞ்ச நேரத்தில வரச் சொன்னாரு. போய்ப் பாத்தம். பூ வாடிக் கிடந்திச்சு.

''அவங்களுக்கு அமைப்பில்ல போல கிடக்கு'' எண்டாரு. சேந்தன்ர அம்மாவும் மற்ற ரெண்டு பேர்ர பெஞ்சாதிமாரும் வெருண்டு கத்தினாங்கள். சேந்தன்ட வீட்ட பெரிய கூட்டமே கூடிச்சி. என்னயும் கூட்டிக் கொண்டு அம்மாவும் போனா. சேந்தனப் பாத்தன். அவன் அந்த அலரி மரத்துக்குக் கீழ நீண்டு கொண்டு விம்மி விம்மிக் குளறிக் கொண்டிருந்தான்.

ஆக்கள் எல்லாம் அவனத்தான் பாத்தாங்கள். அங்கால வீட்டுக்குள்ள சேந்தன்ட அக்காவயும் தங்கச்சியயும் கட்டிப்பிடிச்சுக் கொண்டு சேந்தன்ட அம்மா சத்தமாக் குளறிக் கொண்டிருந்தா. வெளியில சேந்தன்ட அத்தான் ஆக்களுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தாரு. நல்ல வெறி எண்டு பாக்கக்குள்ளாயே தெரிஞ்சிது. நான் திரும்பியும் ஒருக்கா சேந்தனப் பாத்தன். அவன் இன்னமும் விம்மிக் கொண்டிருந்தான்.

இடைக்கிடை கடக் கண்ணால என்னயும் பாக்கிற மாதிரி இருந்திச்சி.

எனக்கெண்டால் அவன்ட கண்ணத் துடச்சுப் போட்டு ''குளறாதட சேந்தன்'' எண்டு சொல்ல வேணும் போல கிடந்திச்சி.

அம்மா என்னத்தான் பாத்துக் கொண்டிருந்தாவோ தெரியா, வீட்ட போகட்டாம எண்டு கண்ணக்காட்டினா.

நான் எழும்பித்தன். சேந்தனப் பாத்தன். அவன் இப்பயும் குளறின மாதிரியே என்னயும் இடக்கிடை பாத்தான்.

போயித்து வாரன் எண்டு கண்ணால சொல்லிப் போட்டு வந்திற்றன்.

அதுக்குப் பிறகு கொஞ்ச நாள் அவன வெளியில காணுறதே கஸ்டமா இருந்திச்சி. பிறகு கொஞ்சக் காலத்தில ஏ.எல். படிக்கயாம் எண்டு ஊரவிட்டுப் போனான் கத்தோலிக்க பாதர் அவன்ட கெட்டித்தனத்தப் பாத்துப்போட்டு கூட்டிக்கொண்டு படிக்க வச்சாராம்.

ஒரு ரெண்டு ரெண்டரை வருஷத்தால திரும்பி வந்தான்.

நல்ல நெடுவல் முடியெல்லாம் சுருண்டு, மீசையெல்லாம் கரும் கருமெண்டு வளந்து, பாக்கிறத்துக்கு நடிகன் மாதிரி. சின்னப்பிள்ளையாய் இருக்கக்குள்ள என்னேரமும் மூக்கில சளி ஒழுகிற மாதிரி இப்ப ஒண்டும் இல்ல.

கொஞசமெண்டாலும் அவனோட கதைக்க வேணும் எண்டு எனக்குச் சரியான ஆச.

பழயபடி, ''வேலிக்கு மேலால மச்சான் தலை தெரிவதெப்போ'' படிக்கத் தொடங்கித்தன்.
பாட்டுச் சத்தம் கேட்டா திரும்பிப் பாப்பான்.

சிரிச்ச மாதிரியே மெல்லமா நடந்து வருவான்.

நான் ஒண்டும் கதையாம வீட்டுக்குள்ள ஓடிருவன்.

''ஏமாற்றாதே, ஏமாறாதே...... ஏமாற்றாதே, ஏமாறாதே'' எண்டு வேலிப்பக்கம் பாட்டுக் கேக்கும். என்க்கு நல்ல சந்தோசம்.

சேந்தனுக்கு இப்ப என்னோட ஒரு கோபமும் இல்ல எண்டு தெரிஞ்சி போச்சி. ஆள்மாறி ஆள் பாட்டுப் படிக்கிறது கொஞ்சக் காலத்துக்குத் தொடந்திச்சி.

ஏன் எனக்கு சேந்தனோட கதைக்க ஏலாமல் கிடக்கெண்டு யோசிச்சுப் பாத்தன். இதத்தான் வெக்கம் எண்டு சொல்றாங்களோ?

ஆருட்டக் கேக்கலாம்?

அம்மாட்டக் கேக்கலாமோ?

சீ வேணாம். அம்மாக்கு சேந்தன்ட பேரச் சொன்னாலே கோபம் வரும்.

வாசல்ல கூப்பிட்டு, என்ர தலைய விரிச்சுப் பேன் பாக்கக்குள்ள ஒரே சொல்றது சேந்தன்ட வீட்டுப்பக்கம் பாக்கக்கூடா எண்டு.

இதால தான் அம்மாட்டப் பேன் பாக்கப் போகயும் எனக்கு விருப்பமில்ல.

ஆனா என்ன செய்யிற? வேற யாருட்டத் தலையை குடுக்கிற?

நான் தான் தனிய வந்து பிறந்திருக்கேனே.

அதுகும் இந்த முடியும் முசுமுசுவெண்டு வளந்து ஒரே பேன்கடி.

சின்னப்பிள்ளையா இருக்கக்குள்ள இருந்த மாதிரி கிப்பியும் இல்ல. முடியில மட்டுமில்ல உடம்பிலயும் இப்ப ஒரு வித்தியாசம் தெரியுதுதான்.

உடம்பில மட்டுமென்ன பழக்கங்களிலயும்தான்.

இல்லாட்டி சேந்தனோட கதைக்கிறதுக்கும் எனக்கு வெக்கம் வருமோ? மூணாம் வகுப்புப் படிக்கக் குள்ள,

''டேய் சேந்தா என்ன நீ கலியாணம் முடிப்பியாடா'' எண்டு எத்தினதரம் கேட்டிருப்பன்.

இப்ப கொஞ்சமும் கதைக்க ஏலாமல் கிடக்கு.

அவனெண்டாலும் கூப்பிட்டுக் கதைக்கலாம் தானே.

இப்ப அவருக்கு கொஞ்சம் திமிரு. இவரு பெரிய படிப்பெல்லாம் படிச்சித்தாரெண்டு திமிரு. இரிக்காதோ பின்ன? ஏ.எல். நல்லாப் பாஸ் பண்ணிப் போட்டானாம். எண்டு ஊரே அவனத் தலையில வச்சிக் கொண்டாடுது.

ஊரில இருந்து முதன் முதலா அவன்தான் கெம்பசிக்குப் போகப் போறானாம் எண்டு 'அண்டைக்கு கோயில் பீக்கரிலேயே சொன்னவங்க.

அதுகுமில்லாம ஊரில ரியூட்டரி போட்டுப் பிள்ளையளுக்கப் படிப்பிக்கிறானாம் எண்டு ஊராக்கள் எல்லாம் அவனக் கண்டா கடும் மரியாதையாம்.

இனியென்ன, அவரு பெரிய ஆள். கனக்க சம்பளம் எடுக்கிற ஆள்.

→ 15

திருக்கோவில் கவியுவன்

ஜப்பானிய திரைப்படங்கள்:

# போராட்டங்கள் முடிந்து விட்டதென்றால் வாழ்க்கை முடிந்து போய் விடுகிறது!

இலங்கை ஜப்பான் நட்புறவுக் கழகத்துடன் ஜப்பான் தூதராலயம் இணைந்து நடாத்திய ஜப்பான்-இலங்கை திரைப்படவிழா கடந்த 27 - 31ம் திகதிவரை எல்பின்ஸ்டன் திரையரங்கில் நடைபெற்றது. மூன்று ஜப்பானியத் திரைப்படங்களும், இரு சிங்களத் திரைப்படங்களும் இங்கு இலவசமாகக் காண்பிக்கப்பட்டன.

திரையிடப்பட்ட மூன்று ஜப்பானியத் திரைப்படங்கள் பற்றிய குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

## Fall Guy - விழுகிற இளைஞன்:-

திரையுலகத்தின் அந்தரங்கங்களையும், பெரிய, சிறிய கலைஞர்களது வாழ்வியல் யதார்த்தங்களையும் சிறிதளவான நகைச்சுவையுடன் படம் சொல்கிறது. திரையுலகத்தவர்களே தங்களை மனம் திறந்து வெளிக்காட்டியிருப்பது, வெற்றுக் கற்பனையல்லாத யதார்த்தமே என்று நம்பும்படி வைக்கிறது. முற்று முழுதாக ஒரு கலைப்படம் (Art Film) என்று ஏற்றுக்கொள்ளவோ, அல்லது மசாலாப்படம் என்று



புறந்தள்ளிவிட முடியாதிருப்பதுவே படத்தின் வெற்றியாக இருக்கலாம்.

ஒரு திரைப்படக்கூடம் ''கின்ஷிரோ'' (Ginshiro) என்ற பிரபலமான நடிகன் புதிதாக வளர்ந்து வரும் ''ஷிபானா'' (Tachibana) என்ற நடிகன் தன்னை மிகைத்துவிடுவான் என்று பயப்படுகின்றான். அதனால் ஏற்பட்ட மன உழைச்சல்களை அடிக்கடி கொட்டித் தீர்க்கிறான்.... 'கதிரைச் சுகம்' இவனை அல்லைக்கழிக்கிறது. தனது 'இமேஜை' எவ்வழிப்பட்டாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்ற வெறி இவனுக்குள். இந்த வெறிக்குப் பழியாய்ப் போனது ''யாசு'' என்ற துணைநடிகன். கின்ஷிரோவை யாசு மிகவும் மதிக்கிறான். அவன் சொல்வதையெல்லாம் வேதவாக்குகளைப் போல் ஏற்று நடக்கிறான். கின்ஷிரோவின் அந்தரங்க வாழ்க்கையின் அசிங்கங்களைக் கூட மறைத்து அவனது இமேஜைக் காப்பாற்றப் பாடுபடுகிறான். கின்ஷிரோ காதலித்த கொனாட்சு என்ற நடிகை திருமணத்திற்கு முன்னரே கர்ப்பமாகிறாள். அந்த நிலையில் அவளை திருமணம் புரியும்படி யாசுவை பணிக்கிறான் கின்ஷிரோ. அவனும் குருட்டுத்தனமான கடப்பாட்டில் சம்மதிக்கிறான். நிர்ப்பந்தமாய் தொடங்கிய உறவு புரிந்து கொள்ளல், விட்டுக் கொடுப்புக்கள் போன்றனவற்றால் அடர்த்தியாகிறது. நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் கொனாட்சுவை சண்டைப் பாத்திரங்களில் நடித்து அடிவாங்கி விழுந்து சிகிச்சை செய்து காப்பாற்றுகிறான். அவளுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கிறான். மொத்தத்தில் தனது வாழ்க்கையை தனது எஜமானனுக்காகவும், பின்னர் எஜமானனின் பிள்ளையைச் சுமந்த ஒருத்திக்காகவும் அர்ப்பணிக்கிறான்..... இந்த விசுவாம் இறுதியில் அவனது உயிருக்கே ஆபத்தாகப் பார்க்கிறது. தனது எஜமான நடிகனின் இமேஜை மேலும் வளர்க்க அவனுக்கு டூப்பாக ஓர் ஆபத்தான உயரத்திலிருந்து விழுகிற காட்சியொன்றில் நடிக்க ஒப்புக்கொள்கிறான்... உயிர்தப்பவே முடியாத காட்சி. உயிரை பணயம் வைக்கிறான்.... காப்புறுதிப்பணத்தையெல்லாம் பலருக்குப் பிரித்து வைக்கிறான்.... எனினும் இறுதியில் திருப்பம். படத்தில் முடிவு வேண்டுமென்பதற்காக அவனைக் காப்பாற்றுகிறார்கள். அதே நேரத்தில் கொனாட்சுவுக்கும் பிள்ளை கிடைக்கிறது.... இதற்கு மேல் சொல்லத் தேவையில்லை.... இதே போன்றதான இறுதிக்கட்டங்களை அதிகமாகத் தமிழ்த் திரைப்படங்களில் பார்த்திருப்பீர்கள்.

யாசுவின் நடிப்பே படத்திற்கு வலு. ''செல்வாக்குள்ளோரின் ஆதிக்கம்'' எந்தளவுக்கு ஒருவனை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றது என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கின்றது இப்படம்.

## The Shimanto River - ஷிமான்டோ ஆறு

முழுதாகவும் ஒரு கலைப்படம் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய படம்... குறுகிய சில பாத்திரங்களுடன் அடர்த்தியாக நகர்ந்து அதிகமாய்த் தாக்குகின்ற ஓர் அருமையான படம்.

பொருளாதாரப்பலம் குன்றிய ஒரு ஏழைக் குடும்பத்தின் கதை. ஜப்பான் என்றால் என்ன எந்த நாடென்றாலும் ஏழை - பணக்காரன் என்ற ஆளும் - போராடும் இரு வர்க்கங்கள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஏழைகளை வெறும் உணர்ச்சியூட்டித் தூண்டிவிட்டுக் கூத்துப்பார்க்காமல், வாழ்வின் யதார்த்தத்தை புத்தி பூர்வமாக அணுகுகின்ற ஒரு வழியை இப்படம் காட்டிக் கொடுகின்றது. மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. தேவைகளை தீர்மானிக்கின்ற அளவு கோல்களை சரியாக இனம்கண்டு அதைத் தேடச் சொல்கிறது.

''மூன்றாம் வகுப்பில் வைத்தே பள்ளிக்கும் போகாமல் சமைக்கத் தொடங்கிவிட்டேன்.... எனக்கு சுதந்திரம் வேண்டும்... நான் வீட்டை விட்டு புறப்படப் போகிறேன்.....'' என்ற அந்தக் குடும்பத்து இளம் யுவதியின் வார்த்தைகளில் இருக்கிற அர்த்தங்கள் எல்லோரையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

''பணக்காரர்கள் என்றால் எதையும் செய்யலாமா? '' என்று சிறுவனும்... (படத்தின் முக்கிய பாத்திரமே இந்தச் சிறுவன்தான்).

''நாமும் அவளை சின்னவயதிலிருந்தே அடிமையாகத்தானே நடத்திவிட்டோம். அவள் இப்பவாவது சுதந்திரமாக இருக்கட்டும்.. போகவிடு....''

''வாழ்க்கையென்றாலே போராட்டம்....., போராட்டத்தை விட்டுவிட வேண்டுமென்றால்... வாழ்க்கையை விட்டுவிட வேண்டும்...'' என்ற வசனங்களும் ஒவ்வொரு குடும்பத்தின் சகல நிலைப்பட்ட வடிவங்களையும் புரிந்து கொள்வதற்கான போதுமான உதாரணங்களாகும்.

ஒரு ஆற்றோரக் கிராமம். ஐந்து பிள்ளைகளைக் கொண்ட ஒரு ஏழைக்குடும்பம். தொழிலுக்கு வெளியூர் சென்றுவிட்ட கணவன். இயந்திரமாய் உழைக்கும் பெண்-பிள்ளைகளின் தாய் - வாழ்க்கைப் போராட்டத்தை இவர்கள் நடத்துகிறார்கள்.... இவர்கள் மட்டுமல்ல... உலகத்தில் அனேகம் பேர் நடத்துவது இந்தப் போராட்டம்.

ஆனால் இந்தப் போராட்டத்தின் ஆழ, அகலங்கள் யாருக்குமே தெரிவதில்லை.. அதைச் சொல்ல முயன்று வெற்றி பெற்றிருப்பது இத்திரைப்படத்தினதும், அதன் நெறியாளரதும் வெற்றி.

அட்சு என்ற அக்குடும்பத்தின் சிறுவனே முக்கிய கதாபாத்திரம். எங்களவர்கள் அவனிடம் கற்றுத்தேற நிறையவே விஷயங்கள் இருக்கின்றன. அவனது ஒவ்வொரு அசைவுகளும் நடிப்பாக இருப்பது சிறப்புத்தான். அவன், இன்னொரு ஏழைச் சிறுமி மீது வைத்திருக்கும் அக்கறை, சக நண்பனின் சுக துக்கங்களில் கலந்து கொள்கின்றமை.. அவனது பாடசாலை வாழ்க்கை நிகழ்வுகள், குடும்பத்தின் சுமைகளுக்காக தோள் கொடுத்தல். எல்லா நிலைகளிலும் தத்ரூபமாக நடித்து மனசைச் சிலிர்க்க வைத்திருக்கிறான்... அவனது நடிப்புக்காகவே இன்னுமொரு தடவை படம் பார்க்கலாம் போலிருந்தது.

மொத்தத்தில் ... வாழ்க்கை போராட்டமாகவே தொடங்கி, போராட்டமாகவே முடிகிறது என்று கூடச் சொல்லாமல் போராட்டமாகவே மீண்டும்... மீண்டும் தொடர்கிறது என்பதைச் சொல்வதை படம் தனது நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

→ 15

நில்ஷா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மறுபக்கம்

# 'வெள்ளிக் கிழமை'யும் 'குண்ட்டா கிண்டே'யும்

ஆழ்வார்க்குட்டி

ரொபின்ஸன் குருசோவின் கதை அனேகமாக எல்லோருக்கும் தெரிந்ததுதான். நாங்கள் சிறுவர்களாக இருந்த போது - 4ம், 5ம் வகுப்பாக இருக்க வேண்டும் - ரொபின்ஸன் குருசோவைப் பற்றிய மிகச் சுருக்கிய கதையொன்று எமது தமிழ்ப்பாடப் புத்தகத்தில் இருந்தது, அது சிறுவர்களுக்கான கதை. அந்த வயதில் சிறுவர்களான எங்களுக்கு பரிச்சயப்படுத்தப்படுகின்ற அரசகுமாரன் அரசகுமாரி கதைகளை விட வித்தியாசமாக அது இருந்தபடியால் ரொபின்ஸன் குருசோவின் கப்பலைப் போலவே, அவனது கதையும் எனது மனதில் என்றென்றைக்குமாக கரை தட்டியிருந்தது.

அதற்குப் பிறகு அவனது கதையை நான் முழுமையாக வாசித்தது கிடையாது. சமீபத்தில் ஒரு நாள் தொலைக்காட்சியில் ஒரு கார்ட்டூன் படமொன்று பார்த்தேன். அதுவும் சிறுவர்களுக்கானதுதான். ரொபின்ஸன் குருசோ, அவனது கிளி, நாய், ஆடுகள், அவன் வளர்க்கும் தோட்டம் என்று சிறுவர்களுக்கான அந்தக்கதை விரிகிறது. வெள்ளிக்கிழமையும் வருகிறான், அதே பழைய வெள்ளிக்கிழமை. அந்தக் கார்ட்டூன் படத்தில் வெள்ளிக்கிழமை ஒரு கவர்ச்சிகரமான பாத்திரமல்ல. ரொபின்ஸன் குருசோதான் கவர்ச்சிகரமான பாத்திரம்.

மிகச் சமீபத்தில் TNL இல் The man Friday - வெள்ளிக்கிழமை எனும் மனிதன் - என்னும் திரைப்படத்தைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. அது சிறுவர்களுக்கான படமல்ல. ஏனைய ஆங்கில (அமெரிக்க) திரைப்படங்களைப் போலல்லாது, சற்றே மிகு யதார்த்தமும், நகைச்சுவையும் கலக்க கதை சொல்லப்படுகிறது.

நான் அறிந்த பழைய கதையில் வெள்ளிக்கிழமையின் சமூகத்தினரைப் பற்றி அதிகம் சொல்லப்படவில்லை. அவர்கள் நாகரீகமற்ற நரமாமிசம் உண்ணும் காட்டு மிராண்டிகள் என்பதைத் தவிர, ஆனால் The Man Friday இல் அவர்கள் ஆரோக்கியமான வளமான ஒரு நாகரீக பாரம்பரியம் உடையவர்களாகக் காட்டப்படுகிறார்கள். இது உண்மைக்குப் புறம்பானதல்ல.

அத்துடன் இங்கு வெள்ளிக்கிழமை ஆர்வமூட்டும் படியான ஒரு பாத்திரமாக படைக்கப்பட்டிருக்கிறான். உண்மையில் ரொபின்ஸன் குருசோ கதை மீளவும் புனையப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமைக்கு குருசோ ஆங்கிலப் பேச்சுப்பயிற்சி அளிக்கும் போது ஆரம்பமே இப்படி வருகிறது. பாருங்கள்

''நீ - வெள்ளிக்கிழமை
நான் - எஜமான்''

படிப்படியாக வெள்ளிக்கிழமையை . அவன் எவ்வாறு அடிமை கொள்கிறான். அவனது உழைப்பாலேயே பெறும் செல்வத்தில் சில தம்படிகளை விட்டெறிந்து அவனை மேலும் மேலும் தனக்கு சேவகம் புரிய வைக்கிறான் என்பது நகைச்சுவை ததும்ப தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றது.

அடிமை வியாபாரிகள் அவர்களது சொர்க்கத்தீவுக்கு வருகின்றனர். குருசோ அவர்களுடன் விருந்துண்கிறான். வெள்ளிக்கிழமை தொலைக்காட்டி மூலம் வியாபாரிகள் கப்பல்களில் கறுப்பு அடிமைகள் ஏற்றப்படுவதைக் காண்கிறான். குருசோவிடம் அதைச் சொல்ல, அவன் வியாபாரிகள் சிலரைச் சுட்டுக் கொல்கிறான்.

அவ்வாறு அவன் செய்வது கறுப்பர்கள் மீதான பரிவினால் அல்ல. குருசோவின் நோக்கம் கறுப்பர்களை சொந்த நாட்டிலேயே அடிமைப் படுத்துவது. ஆனால் வியாபாரிகள் அவனது அடிமடியிலேயே கைவைத்தார்கள். கறுப்புச் செல்வத்தை ஏற்றுமதி செய்தார்கள். அதனால் குருசோவின் கையால் செத்தார்கள்.

அதன் பிறகு வெள்ளிக்கிழமையின் குணாதிசயங்கள் மாறி விடுகின்றது. தனது சமூகத்தினரிடம் அவன் செல்ல விரும்புகிறான். முன்னரேயே சிறிது சிறிதாக குருசோவின் மீது அவனது தார்மீகக் கோபம் வளர்ந்து வந்தது.

குருசோவும் அவனுடன் செல்கிறான். வெள்ளிக்கிழமையின் சமூகத்தினரிடம் சற்று அகம்பாவத்துடன் நடந்து கொள்கிறான். அவர்களோ வெள்ளிக்கிழமையோ குருசோவை தங்களது எஜமானனாகவோ, சக ஜீவியாகவோ ஏற்றுக் கொள்ளவில்லை.

குருசோ இறுதியில் வெள்ளிக்கிழமையின் வெளிப்படையான கோபத்தையும், வெறுப்பையும், சம்பாதித்துக் கொண்டு தனது தனிமை மிகுந்த வாழ்வுக்குத் திரும்புகிறான். அது பாழ் வாழ்வாக அவனுக்கு இருக்கிறது.

சமீப காலத்தில் நான் ரசித்துப்பார்த்த படங்களில் இதுவும் ஒன்று. அமெரிக்க கறுப்பர்களினால் உருவாக்கப்பட்டது என்று எண்ணுகிறேன்.

அடிமை வியாபாரத்தைப்பற்றி ஞாபகம் வந்த போது கூடவே இன்னுமொன்று சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

அலெக்ஸ் ஹேலி எழுதிய "Roots" என்றும் நாவலைப்பற்றி அறிந்திருப்பீர்கள். மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட நாவல். நல்ல நாவலும் கூட. தமிழிலும் ஏழு தலைமுறைகள் என்ற பெயரில் சுருக்கி மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது. அதுவும் கூட தொலைக்காட்சித் தொடராக காட்டப்பட்டதாம். ஒன்றல்ல, இரண்டு முறை. தவறவிட்டு விட்டேன்.

அதில் வரும் பிரதான பாத்திரமான குண்ட்டா கிண்ட்டே கடைசி வரையிலும் தனது அடையாளத்தை பாதுகாக்கப் போராடுகிறான். அவனது சந்ததியினர் தமது மூலச்சமூகத்தின் அடையாளத்தை மெல்ல மெல்ல இழந்து புதிய ஓர் இனமாக வளருகின்றனர். அந்தக் குண்ட்டா கிண்ட்டேயின் வழித்தோன்றல்களில் ஒருவன் தான் The man friday ஐப் புனைந்திருத்தல் கூடும்.

அதுசரி நாமும் நமது கதையை மீளப்புனைந்து பார்த்தால் என்ன?

ஆகக் குறைந்த பட்சம் சிவகாமி தன் தலைமுடியை முடிந்த கதையைப்பற்றி, வந்தியத்தேவனின் குதிரையைப்பற்றி எல்லாம் எழுதலாம்! எழுத்தாளர்களின் வசதி எப்படியோ?

அல்லது சுஜாதா, பட்டுக்கோட்டை பிரபாகர் ஆகியோர் சிருஷ்டிக்கும் ''டூமீல்'' பாத்திரங்களின் ரிவோல்வர்கள் எந்த நாட்டில் செய்யப்படுகின்றன என்றாவது ஆராய்ந்து ஒரு டாக்டர் பட்டம் பெறலாம்!


சுஜாதாவைப் பற்றியும் கொஞ்சம் எழுத வேண்டும் . பிறகு பார்ப்போம்.

# முஸ்லிம் தலைமைகள் விடுதலைப்புலிகளுடன் உடனடியாகப் பேச வேண்டும்!

புரையோடிப்போன, பேரினவாதிகளால் முடுக்கிவிடப்பட்டு அரசியல் லாபங்களுக்காக தொடரப்பட்ட, அர்த்தமற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமென ஒவ்வொரு ஆத்மாவும் - பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றன.

அதிர்ஷ்டவசமாக புதிய அரசாங்கம் பிரச்சாரம் செய்து பதவிக்கு வந்தது போலவே ''சமாதானம்'' என்ற கோஷத்துடனேயே ஆட்சியையும் அதிகாரத்தையும் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளதோடு பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் மீள வேண்டியிருக்கின்றது.

இப்போக்கின் இன்னொரு அம்சமாக அவசரமாகவும் அவசியமாகவும் விடுதலைப்புலிகளுடன் முஸ்லிம்கள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தேயாக வேண்டும். கடந்த காலங்களில் முஸ்லிம் தலைமைத்துவங்கள் பாரிய அரசியல் தவறுகளை இழைத்துள்ளதோடு - இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை இழுபறிக்குள்ளாக்குவதில் மகத்தான பங்களிப்புகளையும் செய்து முஸ்லிம் சமூகத்தை அனாதைகளாக்கியுள்ளன.



வரலாற்றில் தவறுகள் மீட்டப்படாது புதிய அணுகு முறைகளையும், உத்திகளையும் கையாள்வதில் அக்கறை காட்ட வேண்டிய தேவை என்றுமில்லாதவாறு சகல சமூகத்தினராலும் இன்று உணரப்பட்டுள்ளபோது முஸ்லிம் தலைமைத்துவங்கள் மௌனிகளாக முடங்கிக் கிடப்பது வேதனையை அளிக்கின்றது.

1989 ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவி ஸ்ரீமாவோ அம்மையாரின் காலை வாரிவிட்டமை -

விடுதலைப்புலிகள் பங்குபற்றாத தேர்தல்களை பகிஷ்கரிப்பதாக அறிக்கைகள் விட்டுவிட்டு தாம் எதிர்த்த இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ்வந்த மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டமை.


கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் முஸ்லிம் கவுன்சில் செய்த முயற்சிகளைத் தவிடு பொடியாக்கியமை.

முஸ்லிம் ஐக்கிய முன்னணி விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட உடன்பாட்டை மீளாய்வு செய்யவேனும் முற்படாது நிராகரித்தமை.

விடுதலைப்புலிகள் மிருகங்கள் அவர்களுடன் பேச முடியாது என்று திட்டவட்டமாக நிராகரித்தமை.

முப்படைகளுடனும் ஆட்சி நடாத்திய அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸாவின் கரங்களைப் பலப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அவசர கால நீடிப்பு பிரேரணைகளுக்கு ஆதரவாக வாக்களித்து யுத்தத்திற்கு ஆதரவு வழங்கியமை.

புலிகளுடன் போராட 10,000 வீரர்களுடன் ஜிஹாத் ரெஜிமன்ட் ஏற்படுத்த முற்பட்டமை போன்ற பாரிய அரசியல் தவறுகள் முஸ்லிம் தலைமைத்துவம் என்ற பேரில் இழைக்கப்பட்டமையால் தான் தமிழ் - முஸ்லிம் மக்கள் உறவுகள் இவ்வாறு இன்று இக்கட்டான நிலையில் இருக்கின்றன.



பதியுத்தீன் மஹ்மூத்

இன்று அரசும் புலிகளும் பேசும் போது முஸ்லிம் பிரதிநிதிகள் மௌனிகளாக இருக்கின்றார்கள் - புனர் வாழ்வு - புனரமைப்புக்கான பேச்சுவார்த்தைகள் - முடிவுற்றதன் பின்னர் பேசுவோம் என சிலர் காரணம் கூறுகிறார்கள்.

வடக்கில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு புனர்வாழ்வும், புனரமைப்பும் தேவையில்லையா? அது சமஷ்டி ஆட்சிமுறையின் கீழ்தானா இடம் பெறும்? என்றெல்லாம் முஸ்லிம் முஸ்லிம் மக்களிடமிருந்து கேள்விகள் எழும்புகின்றன.

அதிகாரப்பரவலாக்கம் அல்லது அதிகாரப் பகிர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கு முன் முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்.

அதற்கு அனுமதியளிக்கத் தயாராக இருப்பதாக அண்மையில் யாழ் சென்ற சமாதான அணியினரிடம் அன்டன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது. இந்த நல்ல தருணத்தையும் புரிந்துணர்வையும் முஸ்லிம் தலைமைத்துவங்கள் பயன்படுத்தத்தவறுவது கவலைக்குரிய விடயமாகும்.

விடுதலைப் போராளிகளான புலிகளுடன் ஏதாவதொரு தகைமையுள்ள முஸ்லிம் தலைமைத்துவம் புரிந்துணர்வுக்கு வராதபட்சத்தில் பழைய தவறுகளும் - இழைக்கப்பட்டு சபிக்கப்பட்ட யுத்தமும் திணிக்கப்படுமாயின் முஸ்லிம்கள் இன்னுமுள்ளவற்றை இழக்க வேண்டியதும் தர்க்க ரீதியானவிளைவாகும் என்பதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் மறந்துவிடக்கூடாது.

பின்னர் தாமிழைக்கின்ற தவறுகளுக்கு இஸ்ரவேலையம், மொஸாடையும் பழிகூறுவதில் அர்த்தமில்லை. இத்தகைய சிந்தனைகளை முஸ்லிம் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்வதன் மூலமே அரசியல் ரீதியிலான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். அதன் மூலமே அரசியல் சக்திகளுக்கு அழுத்தம் கொடுத்து நிர்ப்பந்திக்க முடியும்.

முன்னைய முஸ்லிம் முழு மந்திரிகளும், அரை மந்திரிகளும் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படுகின்ற இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களையும், அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு செய்த அதே அரசியலையே முஸ்லிம்கள் விடயத்தில் தற்பொழுதுள்ளவர்கள் செய்ய முனைவது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

தமிழ் , முஸ்லிம், மலையக தலைமைத்துவங்களின் புரிந்துணர்வும் , ஒத்துழைப்பும் இணக்கப்பாடுகளும் சிறுபான்மையினர் போராட்டம் என்ற பொதுவான இலக்கில் இனம் காணப்படுவதன் மூலமே நிரந்தர அமைதிக்கும் சமாதானத்திற்குமான ஆரம்ப முயற்சிகளையேனும் இதய சுத்தியோடு செய்ய முடியும்.

அஷ்ஷெய்க் மஸீஹுத்தீன் இனாமுல்லாஹ்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டக்களப்பு..

பெற்றோல் நிலையங்களிலிருந்து எரிபொருள் எடுத்துச்செல்வதற்கும் படையினர் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்கள். பதினைந்து லீற்றருக்கு மேல் டீசல் எடுத்துச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது அறுவடைக் காலம், கூடுதலான எரிபொருள் தேவைப்படும் . சிலநாட்கள் தடைநீக்கப்பட்டிருந்த எரிபொருள் கட்டுப்பாடு திருமபவும் படையினரால் கடுமையான முறையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

வாகரைப் பிரதேசம், வாவிக்கு அப்பாலுள்ள பிரதேசங்களுக்கு உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்வதிலும் படையினர் திரும்பவும் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்கள். வாகரை, மண்முனை, வவுணதீவு சோதனை நிலையங்களில் கூடுதலாக உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதற்கும், மருந்து பொருடகள் கொண்டு செல்லவும் தடைவிதித்துள்ளார்கள்.

இதைவிட மார்ச் 28ம் திகதி அதிகாலை இருதயபுரம் பகுதியை சுற்றிவளைத்த பொலிஸார் வீடுகளில் புதிதாக யாராவது பதியாமல் இருக்கிறார்களா எனச் சோதனையிட்டதுமில்லாமல் வீடுகளின் மூலை முடுக்கெல்லாம் துருவித்துருவி சோதனையிட்டுள்ளார்கள். வீடுகளிலுள்ள எலெட்ரோனிக் பொருட்களை எதற்காக வைத்திருக்கிறீர்கள், வாங்கிய கடை பற்றுச்சீட்டு இருக்கிறதா எனவும் கேட்டுச் சென்றுள்ளார்கள்.

அதேவேளை மாமாங்கம் கூழாவடிக் கொலனி என்பன திரும்பவும் இரண்டாவது தடவையாக சுற்றிவளைக்கப்பட்டு சந்தேகத்துக்குரிய வீடுகளில் கிடங்கு வெட்டியும் நிலத்துக்கு கீழே ஏதாவது புதைத்து ஒழித்து வைத்திருக்கிறார்களா எனவும் சோதனையிடப்பட்டது. பெண்களே கூடுதலாகத் துருவித்துருவி விசாரிக்கப்பட்டார்கள். விடுதலைப்புலிகளின் நடமாட்டம் பற்றியும் அவர்களின் ஆயுதங்கள் பற்றியும் பொதுமக்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

இதைவிட இரவு நேரங்களில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பார்றோட், அரசடி போன்ற இடங்களிலுள்ள சில வீடுகளைத்தட்டியெழுப்பி பொதுமக்களை திடீர் திடீரென அதிர்ச்சிக்குள்ளாக வைத்திருக்கிறார்கள் பொலிஸார்.

அண்மையில் மட்டக்களப்பு மேஜர் செழியன் பேரின்பநாயகத்தின் வீட்டைக்கூட நள்ளிரவில் சென்ற பொலிஸார் துருவித்துருவி தேடுதல் நடத்தியுள்ளார்கள். இந்நடவடிக்கையானது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையென்பது இங்குள்ள எல்லோருக்கும் தெரிந்தவிடயம்.

ஆனால் இதுபற்றி மாநகரசபை உறுப்பினரும் ஐ.தே.கட்சி நகர அமைப்பாளருமான பத்மநாதன் பொலிஸாரின் அடாவடித்தனம் என கண்டனம் தெரிவித்துள்ளார். (ஐந்தாறு மாதங்களுக்கு முன்னர் ஐ.தே.க. அரசின் போது இதே பொலிஸாரைக் கொண்டு இதே மாதிரியான பல்வேறு விடயங்களில் ஈடுபட்டவர் என்பது வேறுவிடயம்)

கடும் கெடுபிடி நிறைந்தசோதனைகளும் புதிய புதிய காவலரண்களும் திறந்து கொண்டேயிருக்கிறது. புலனாய்வுப் படையினரும் தீவிரமாக தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக ஆரையம்பதி பிரதேசசபை தலைவர் ரொபேட் (நவரெத்தினராஜா) தலைமையிலான ரெலோவினரும் புலிகளின் நடமாட்டம் வந்து போகும் இடங்கள் பணம் வசூல் செய்யப்பட்ட வீடுகள் என்பன போன்ற தகவல்கள்ளை சேகரித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் எனத்தெரியவருகிறது. இந்நடவடிக்கைகள் எந்தளவுக்கு சமாதானத்தை தரப்போகிறது என்பதுதான் இன்றைய கேள்வி.

—மைதிலி

## திரிசிங்களே...

கம வழங்கப்பட்டுவிட்டது என்றும், பௌத்த மதத்தவர்களது உரிமைகளெதிரானதென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இதைவிட அதன் ஆசிரியர் தலையங்கத்தில்: ''ஆயுதம் தூக்கியவர்களுக்கு ஆயுதத்தாலேயே பதில் சொல்ல வேண்டும். எந்த அரசியல் தீர்வுக்கும் வரமுன்னர் வடக்கில் புலிகளை அழிக்க வேண்டும்.'' என எழுதியுள்ளது.

தென்னிலங்கையில் மீண்டும் மேலெழுந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு இன்னொரு தீனியாக இதுவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## முஸ்லிம் காங்கிரஸ்...

வாகரை, பனிச்சங்கேணி, புனானை போன்ற இடங்களிலுள்ள தமிழர்களுக்கு சொந்தமான நிலங்களில் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் என்ற போர்வையில் அப்பாவி முஸ்லிம்களை குடியேற்றி தங்களுக்கு அரசியல் லாபங்களை தேடிக்கொள்ளவும் முஸ்லிம் காங்கிரஸ் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் தெரிகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் இந்நடவடிக்கைகள் மூலமாக கடந்த காலங்களை மறந்து ஒருவரோடு ஒருவர் பழையபடி உறவு கொள்ளும் அப்பாவிகளான தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகளுக்கு தீ வைக்காமல் இருந்தால் அது ஒன்று மட்டுமே கிழக்கு மக்களுக்கு செய்யும் பெரிய சேவையாக இருக்கும்.

தமிழ் முஸ்லிம் மக்களை அரவணைக்கக்கூடிய நிழலைக்கொடுக்காமல் நச்சு விதைகளை தூவினால் இந்தச் சமூகங்கள் இன்னுமொரு முறை வாழ்வொடிந்த வரலாற்று சுமை மரத்துக்கே சேரும்.

## ஜப்பானியத்...

'' வாழ்வியல் போராட்டங்கள் முடிந்துவிட்டதென்றால், வாழ்க்கையே முடிந்து போய் விடுகிறது...'' என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்பவராக இருந்தால், இந்தப் படத்தை நீங்கள் மிகவும் விருப்பத்தோடும் உணர்வோடும் பார்ப்பீர்கள்.

**Sumo Do, Sumo Don't:-**

ஜப்பானின் அருகிவரும் பாரம்பரியக் கலையொன்றை தக்கவைத்துக் கொள்வதில் பல்கலைக்கழக மட்டத்தில் (பேராசிரியர், ஐந்து மாணவர்கள், இரு மாணவிகள்) எடுக்கும் முயற்சியை முழு நீள நகைச்சுவையுடன் சொல்வது இப்படத்தின் நோக்கம்.

இன்னொருவகையில்... ''தனித்துவ அடையாளங்கள் பாரம்பரியங்கள்...'' என்ற சிந்தனைப் போக்கின் ஆழமான பார்வையில் இது முக்கியமானதும், ஆக்கபூர்வமானதுமான முயற்சியாகவே படும். எனினும், ''வயிறு குலுங்கவைக்கும் சிரிப்புக்களில் நோக்கங்க்ள் தொலைந்து போவதில் அர்த்தமேயில்லை... '' நல்ல 'ஜோக்' படம் சிரிச்சு வயிறு நோகுது...'' என்று மட்டுமே அனேகம் பேரை அப்படம் சொல்லவைத்திருக்கும்.

சுமோ என்ற ஜப்பானிய மல்யுத்தக்கலை, ''அந்நியக் கவர்ச்சிகளுக்குள்'' காணாமல் போகப்பார்க்கிறது. அதைத்தடுக்க ஐந்து மாணவர்களைக் கொண்டு பேராசிரியர் முயற்சிக்கிறார். ஒத்துழைப்பது ஆராய்ச்சி மாணவி.... ''அதைக் காப்பாற்ற வேண்டும், எங்கள் கலை, எங்கள் பாரம்பரியம்...'' என்று யாருமே முன்வரவில்லை.... ஒவ்வொன்றுக்காக ஒவ்வொருவரும் வந்து... பிறகு எப்படியோ ஒன்றிப் போகிறார்கள். பல்கலைக்கழக மட்டப் போட்டிகளில் வெற்றி பெறுவது நோக்கம் என்று குறுகிப் போகிறார்கள்... வெற்றியோடு விலகிப்போகிறார்கள். அடுத்தவருடப் போட்டிக்காக ஒருவன் தன்னை ஈடுபடுத்துகிறான்.... அவனில் ஒருத்தி (ஆராய்ச்சி மாணவி) ஈடுபாடு கொள்கிறாள்.... படம் சிரிக்க வைத்து முடிவுறுகிறது.

## ஊழல் — 3...

2. ஓட்டுமாவடிக்கு விஜயம் செய்த அரச அதிபர் மோன குருசாமி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்தின ஆகியருக்கு தனது செலவில் கிடாய் விருந்து படைத்தார். 94 ஆரம்பத்தில் மட்டக்களப்பு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட கிருமினல் வழக்கின் நிமித்தம் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதற்குப் பதில் மீள் நியமனத்தை இவை மூலம் பெற்றுக் கொண்டார். வழக்கு இலக்கம் (15207/M/C மட்டக்களப்பு)

எல்லாவற்றுக்கும் மணிமகுடம் வைத்தாற் போல் இலங்கையின் அதி உத்தம இரண்டாவது ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுடன், அமைச்சர் அஸ்வர் சகிதம் ''விறுதா'' எப்படியோ ஓர் படத்தை எடுத்துக் கொண்டார். பல நேரங்களில் அதிகாரிகளை மிரட்ட அந்தப் பாசுபதம் பயன்பட்டு வந்துள்ளது.

பலமுறை சேவை இடை நிறுத்தம் என்னும் தண்ணீர் வற்றிய ஆற்றை நடந்து கடந்தவரை 17 வருடத்தின் பின் வந்த புதுவெள்ளம் எனற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அள்ளிக் கொண்டு போகும் என்ற நம்பிக்கையில் அஷ்ரப்பின் கவனத்திற்கும் ஹிஸ்புல்லாவின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர் அவ்வூர் மக்கள். ஆயினும்....

முடிவுறாத ஊழல் பணத்தில் மக்களின் குரல் பின்தங்கிவிடுவது என்றும் புதிதல்லவே?

— நௌ.

## பாலம்...

வெளியிட்டுள்ள விடயங்களும் சந்தேகத்துக்கிடமின்றி புகழ்ச்சிக்குரியவைதான். எவ்வாறெனினும், இதன் பின்னணியில் உள்ள முக்கியமான விடயம் என்னவென்றால் இந்த சமஷ்டி கட்டமைப்பின் தன்மை ஒரு இந்திய மாதிரியை கொண்டதாய் உள்ளது என்பதே. இதற்குப்பதிலாக சற்று விரிவாக, அரசினது பரவலாக்கம் குறித்து இவர்கள் பேசியிருக்க முடியும் என்று தோன்றுகிறது.

நீண்டகாலமாக நீடிக்கும் இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இந்த அமைப்பினுடைய முன்மொழிவுகளை பார்க்கையில் அதன் முதலாவது பந்தியே இந்திய மாதிரியின் நகல் போன்று தோற்றமளிக்கிறது. இது இந்த முயற்சிக்கு சற்று பாதகமாக அமைவதாயுள்ளது.

இன்னொரு விடயமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விடயம் சில வேளை விடுதலைப்புலிகளும் சம்பந்தப்படுவதன் காரணமாக இந்த இயக்கம் தனது தீவிரத்தன்மையிலிருந்து விலகியுள்ளதாக எண்ண வைக்கின்றது.

அது சொல்கிறது: '' நாம் எந்த குறிப்பான முன்மொழிதல்களையும் - குறிப்பாக எவ்வளவு பரவலாக்க அலகுகள் அவசியம் என்பது போன்றவற்றை - குறிப்பிடவில்லை - ஏனென்றால் இவை மிகவும் உணர்வுபூர்வமானவையும் முக்கியமானவையும் என்பதால் சமாதானப் பேச்சுக்களின் மூலமாகவே அடையாளம் காணப்படலே சிறந்ததாகும்.

ஆனால், முழுமையாகப் பார்க்குமிடத்து, 1948ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நாம் எமது கோரிக்கைகளை எத்தகைய பயமுமின்றி முன்வைக்காததாலோ அல்லது அவற்றை பயமின்றி வழங்க தயாரில்லாதது போன்ற ஒரு நிலைமையிலேயே இன்னும் இருக்கிறோமா என்று கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

வடக்கு கிழக்கு பிராந்தி அதிகார பரவலாக்கம் வடக்கு கிழக்கை புலிகள் கைப்பற்றிக் கொள்ள வாய்ப்பாகிவிடும் என்ற கருத்தை ஒதுக்கிவிட்டு, நாட்டின் எதிர்கால சுபீட்சத்தை கருத்தில் கொள்வோமானால், அதை அடைய நீண்ட நாள் எடுக்காது.

இதன் குறைபாடுகளுக்கு அப்பால், அந்த நகல் பிரசுரத்தினை கொண்டு வந்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும்.

இது தொடர்பான தத்துவார்த்த அரசியல் கலந்துரையாடல்கள் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் ஒழுங்கு செய்யப்படுமானால் அது மேலும் பயனுள்ளதாக அமையும் என்று நினைக்கின்றேன்.

## செவ்வந்தி...

அடுத்த மாசத்தோட திரும்பியும் ஊரவிட்டுப் போய் கொழும்பு வாழ்க்க.

அடுத்த மாசம் சேந்தன் போகப் பேறானாம் எண்டு அம்மா சொன்னதைக் கேட்டது தொடக்கம் எனக்கு கவல.

போறதிக்கிடயில எப்படியும் ஒருக்கா அவனோட கதைக்க வேணும்.

ஆ, இண்டைக்குத்தானே சேந்தன் போரவன் எண்டவங்கள்.

வஸ் பின்னேரமோ காலமயோ தெரியா. வழமயாக்கொ கொழும்புக்குப் போற சிதம்பரம் மாமா பின்னேரமாத்தான் இதால போரவரு. அப்ப பின்னேரமாத்தான் இருக்க வேணும்.

ஆ, இந்தா சேந்தன்ட கிணத்தடியில தண்ணி அள்ளுற சத்தம் கேக்குது சேந்தனோ தெரியா? இப்பவே கதைச்சுப் போடுவம்.

பிறகு பின்னேரம் கதைக்க ஏலா கட்டாயம் ஆக்கள் வந்திருப்பாங்க

ஓம் சேந்தன் தான்.

''உஷ், உஷ்''

திரும்பிப் பாக்கிறான். என்ன செய்வம்? கூப்பிடுவமோ? ஓடுவமோ?

சீ, ஓடக்கூடா ஓடினால் இனிமேல் கதைக்கேலா, அப்ப கூப்பிடுவம் வேலிக்கு மேலால தலைய மெல்லமா நீட்டி கையால கூப்பிடுறன்.

வாறான்.

இப்ப என்னத்தக் கதைக்கிற. முகத்தப் பாக்கயும் வெக்கமா இரிக்கி.

முகத்த வேலியோட சேத்து மறைக்கிறன். என்னத்தக் கதைக்கிற?

என்ன கதைக்க வேணும் எண்டு நினைச்சதும் ஞாபகம் வருகுதில்லை.

மூணாம் வகுப்பெண்டாலும் பரவாயில்லை ஆசய இப்பிடியே சொல்லிப் போடலாம்.

இப்ப என்ன சொல்றது?

''கொழும்புக்குப் போய் ஊராக்கள மறந்திராதீங்கோ''

ஒரு மாதிரிச் சொல்லிப் போட்டு வீட்டுக்குள்ள ஓடிப் போறன்.

எப்ப எண்டகத இப்பிட மாறிச்சிதெண்டு எனக்கே புதினம் போல.

சேந்தன் இன்னமும் வேலியோரத்தில நிக்கிறானோ தெரியா.

*** *** ***

ஆ, இந்தா சேந்தன் கொழும்புக்கு போர நேரமும் வந்திற்றுது. எவ்வளவு சனம். வீட்டயே இவ்வளவு பேரெண்டால் சந்திக்கு எவ்வளவு பேர் வருவாங்களோ தெரியா.

சேந்தன் வேக்கத் தூக்கிறான். அவன்ட அம்மாவும் அக்காவும் கண் கலங்கின மாதிரி நிக்காங்க. சிங்கன் சேந்தன்ட கால நக்குது. அதுகும் இப்ப மெலிஞ்சி, மேலெல்லாம் புண் விழுந்து நோஞ்சானாப் போயிற்று. அன்னேரம் தளுக்குப் புளுக்கெண்டு என்ன வடிவு.

சேந்தன்ட விரலப் பிடிச்சுக் கொண்டு சின்னவளும் போறாள். எங்க மட்டும் போவாளோ? அத்தான்காரனுக்கு இப்பயும் நல்ல வெறி போல. அவருக்கெப்பத்தான் வெறியில்ல.

சேந்தன் எங்கட வேலிப்பக்கமா திரும்பிப் பாக்கிறான். நான் டக்கெண்டு தலையக் குனிஞ்சு கொண்டு இடுக்கால பாக்கிறன்.

வேலியப் பாத்த மாதிரியே சேந்தன் போறான்.

எனக்குக் கண்ணில தண்ணி தண்ணியா வருகுது.

சின்னப்பிள்ளையாய் இருக்கக்குள்ள நடந்ததெல்லாம் ஞாபகம் வருகுது.

சேந்தன்ட சட்டைக்குள்ள நண்டுக்குஞ்சு போட்டது.... காச்சட்ட உரிஞ்சி அவன் அம்மணக் குண்டியா நிண்டது.... ஒரு தரம் பள்ளியால டூர் போன இடத்தில என்ட புட்டுப் பார்சல களவெடுத்து சாப்பிட்டது..... இன்னொருக்கா அவன் என்ட சட்டைக்கு மீமயடிச்சதால அவனோட ரெண்டு நாள் சுத்தம் போட அப்பாட்ட வந்து குளறிச் சொல்லி என்னப் பேசச் சொன்னது... எனக்கு அம்மாள் வந்த ஏழு நாளும் அவனும் பள்ளிக்குப் போகம என்னோடயே கட்டிலுக்குப் பக்கத்தில இருந்தது...

அழகு துரையப்பச்சிர வளவுக்குள்ள மாங்காய் களவெடுக்கப் போய் அவரு அவனக் கட்டிப் போடப்பிடிக்க அவர்ர கையில மூத்திரத்தப் பேஞ்சி போட்டு அவன் ஓடி வந்தது.... எனக்கு புளியம்பழம் ஆஞ்சிதர மரத்திலேறி சறுக்கி விழுந்து படுக்கைல கிடந்தது.... ரெண்டு பேரும் சேந்து வண்ணத்துப்பூச்சி பிடித்தது.... வாகை மரத்தில பொன்னி வண்டு பிடிச்சது...

பிறகு எனக்கு அது நடந்த உடன அம்மாவால நாங்க ரெண்டு பேரும் பேசாமவிட்டது. எல்லாம் ஞாபகம் வருகுது.

சே, எனக்கு அது நடக்காமல் இருந்திருந்தால் இன்னேரம் சேந்தன்ட மற்றக்கைவிரலப் பிடிச்சுக் கொண்டு என்ன வடிவா சந்திக்கு மட்டும் போய் அவனுக்கு ரட்டா சொல்லியிருப்பன்.

சே, பாழாப் போனது வந்ததாலதான் எல்லாம்.

''வேலியால புதினம் பார்த்தது போதும், வா வந்து அரிசரிச்சி உலையில போடு''

*** *** ***

காதைத் திருகிக் கொண்டு பின்னால் செவ்வந்தியின் அம்மா நிக்கிறாள். அவள் அரிசரிக்கப் போறாள். மேற்கில் செவ்வானத்தில் அந்திச் சூரியன் இறங்கிக் கொண்டிருக்கிறது. அது நாளையும் கிழக்குப் பக்கமாய் வரும். வந்து இவள் குளிக்கும் போது இவள் மேனியைத் திருட்டுத் தனமாகத் தொடும். இவள் பூசும் மஞ்சளை உலர வைக்கும்.

கிழக்கில் மங்கலாய் நிலவு தெரிகிறது. அது இரவை எதிர்பார்த்து தவிக்கிறது போல.

www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR
சரிநிகர்

# வரலாற்றுக் குப்பையும் விடிவெள்ளியும்

"நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கம். எங்களுக்கு யாரும் காலக்கெடு விதிக்க முடியாது"

புலிகளின் ஏப்ரல் 19ஆம் திகதி காலக்கெடு தொடர்பாக ஜனாதிபதி தமது இந்திய, பங்களாதேஷ் விஜயங்களை முடித்துக்கொண்டு நாடுதிரும்பியபின் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு அளித்த பதில் இது.

நான்கு கோரிக்கைளை முன்வைத்து, புலிகள் விதித்த மார்ச் 28ஆம் திகதி காலக்கெடுவுக்கு ஜனாதிபதி அனுப்பிய பதிலில் இருந்த சாதகமான அம்சங்களை கணக்கிலெடுத்து, தாம் தமது காலக்கெடுவை ஏப்பிரல் 19ம் திகதிக்கு நீடித்திருப்பதாகவும், ஏப்பிரல் முதலாம் திகதி அடுத்தகட்டப் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம் என்றும் பிரபாகரன் பதிலளித்திருந்தார்.

இந்தப் 19ஆம் திகதிய காலக்கெடு பற்றியே பத்திரிகையாளர்கள் கேட்டிருந்தனர். ஜனாதிபதி இதற்கு அளித்த பதில் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி இவ்வாறு கோபப்பட அப்படி என்னதான் இருந்தது?

ஆயினும், நாடுதிரும்பியபின் இருந்த ஓரிரு நாள் அவகாசத்துள் பேச்சுவார்த்தைக்கு ஆட்கள் அனுப்புவதில் உள்ள சிரமம் காரணமாக முதலாம் திகதி பேச்சுவார்த்தை நடக்காது என்றும் எவ்வாறாயினும், ஏப்ரல் 10ம் திகதிக்குள் பேச்சுவார்த்தைக்காக அரசு தரப்பு குழு யாழ் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் எமது பத்திரிகையிலும், இப்பத்தியிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அடிக்கடி குறிப்பிட்டுள்ளது போல சமாதானப் பேச்சில் ஈடுபடும் போது, இருதரப்பாரும் ஒருவரை ஒருவர் சம அந்தஸ்து கொடுத்துப் பேச வேண்டும் என்பதில் அரசு தரப்புக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கதரப்புக்கு விஷேடத்துவம் இருப்பதான நினைப்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதானால், அது பேச்சுவார்த்தையின் அடிப்படை ஒழுக்க நியதிகளையே கைவிடுவதாகிவிடும்.

இலங்கை அரசாங்கங்கள் கடந்த காலத்தில் பல தடவைகள் புலிகளுக்கு எதிராகவும் இனப்பிரச்சினையை 'இல்லாமல் செய்வது' தொடர்பாகவும் காலக்கெடுக்கள் விதித்திருக்கின்றன.

ஏன் ஜனாதிபதி கூட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான காலக்கெடுவாக எதிர்வரும் ஜூலை மாதத்தை அறிவித்துள்ளார்.

காலக்கெடு விதிக்கப்படுவது ஒன்றும் அரசியல் வரலாற்றில் புதிய விடயம் அல்ல. அரசாங்கம் சொன்னவற்றை செய்வதற்கு மக்கள் கூட ஆட்சிக்காலம் என்ற ஒரு காலக்கெடுவை வைத்துத்தான் இருக்கிறார்கள்.

புலிகளின் காலக்கெடு ஒன்றும் ஆச்சரியப்படுகின்ற விடயம் அல்ல.

தொழிற்சங்கங்கள் கூட ஜனாதிபதிக்கு காலக்கெடு விதித்து கோரிக்கைளை முன்வைத்துப் பேசியது ஜனாதிபதிக்கு மறந்திருக்க முடியாது.

ஆக, ஜனாதிபதி அவர்கள் இவ்வாறு ஆத்திரப்படுவதற்கு காரணம் என்ன? காலவரையறையற்று பேச்சுவார்த்தையை இழுத்தடித்த கடந்தகால அரசுகள் போல் தாமும் இழுத்தடிக்க இக்காலக்கெடு தடையாக இருக்கும் என்று அவர் கருதுகிறாரோ என்னவோ?

'சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம்' என்ற விடயம் மட்டும், 'நாம் ஆயுதங்களை கீழே போடும்படி கோராமலேயே அவர்களுடன் பேசுகிறோம்' என்ற பேச்சுமட்டும் சந்திரிகா அரசு சமாதானத்திற்காக உளப்பூர்வமாக ஈடுபடுகின்றது என நம்ப போதுமானவை அல்ல.

சொல்பவற்றை செயலிலே காட்ட வேண்டும்.

மார்ச் 28ஆம் திகதி காலக்கெடு தொடர்பாக அரசியல் ரீதியாக விடயங்கள் ஆராயப்பட்டதை விட வேகமாக நாடளாவிய ரீதியில் படையினர் யுத்தத்திற்கு தயாராக உசார்ப்படுத்தப்பட்டமை நடந்துள்ளது. பலாலி முகாமில் விமானப்படை கொமாண்டர் ஜெயலத் வீரக்கொடி நாள் பூராவும் தங்கியிருந்து, யுத்த நிலையை சமாளிக்கவென அனைவரது விடுமுறைகளையும் ரத்துச்செய்து விமானங்கள், ஹெலிகப்டர்கள் என்பவற்றின் அசைவுகள் தொடர்பாக உசார் நிலையை ஏற்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நிறுத்தப்பட்ட காலத்தின் பின், அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடந்துவரும் கடிதமூலமான பேச்சுக்களில் பேசப்பட்டு வரும் விடயங்களை கூர்ந்து கவனிக்கும் ஒருவர், இந்த விடயங்கள் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் தமது நிலைகளை தெளிவுபடுத்திக்கொள்ள உதவுகின்றனவேயன்றி சமாதான முயற்சிக்கு அடிப்படையான அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பாக பேசுபவையாக இல்லை என்பதை புரிந்து கொள்ளலாம்.

உண்மையில் சந்திரிகா - பிரபாகரன் கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட அளவுக்கு, அரசின் அரசியல் தீர்வு விடயங்கள் விளம்பரப்படுத்தப்பட்டிருக்குமானால் அது எவ்வளவோ ஆரோக்கியமாக இருந்திருக்கும்!

எப்படியோ இந்தியா சென்று திரும்பிய பின்னர் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி நடந்து கொண்டவிதம், அவர் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக ஏதோ ஒரு உறுதியான முடிவில் இருப்பது போன்ற தோற்றத்தையே காட்டின.

இனப்பிரச்சினையை எப்படிக் கையாள்வது என்று 'ராவ்'விடம் கேட்டுவிட்டு வந்து அவர் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்று நம்புவோமாக.

ஜனாதிபதி நாட்டுக்கு நல்லது செய்ய நினைத்தால், நாட்டின் யதார்த்த நிலையிலிருந்து செயல்படுவது நல்லது. ஏனைய ஜனாதிபதிகள் செய்தது போல அவரும் வானத்திலிருந்து கொண்டு விடயங்களை ஆராயமுயலக்கூடாது.

ஏனென்றால், ஜனாதிபதி பதவி மக்கள் கொடுத்த பதவி; அது அவரது பிதுரார்ஜித சொத்து அல்ல!

அது மட்டுமல்ல எல்லா மக்களும் விரும்புவது சமாதானத்தை; அமைதியை; யுத்தமற்ற நிம்மதியான வாழ்வையே.

வடக்கு கிழக்கு மக்களும் அதைத்தான் விரும்புகிறார்கள்.

ஆனால், சமாதானம் என்பது வேறு, சரணாகதி வேறு என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சரணாகதி அடையவைத்து சமாதானத்தை நிலைநாட்ட விரும்பிய 'கொலைகார' ஜனாதிபதிகள் எல்லாம் இன்று மக்களின் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுவிட்டார்கள்.

சந்திரிகா அவர்கள், ஒரு வரலாற்றின் விடிவெள்ளியாக பிரகாசிக்க வேண்டுமென்பதே எமது விருப்பம்.

குப்பைக் கூடை ஏற்கெனவே நிரம்பிப்போயிருக்கிறது.

இனி, அவர் விருப்பம்.

# மட்டக்களப்பு: இராணுவ தர்பார் தொடர்கிறது!

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் ஆரம்பத்தில் இருந்த எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைக் கீற்றுக்களும் இன்று அற்றுப் போன ஓர் நிலையிலேயே கிழக்கு காணப்படுகிறது. அரச படைகளின் ஒவ்வொரு அசைவுகளும் மக்கள் மனதில் நம்பிக்கையீனங்களையே தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஐ.தே.க. அரசின் காலங்களில் கண்கள் தோண்டப்பட்டது முதல் ரயரில் உயிருடன் கிடந்து எரிபட்டது வரை பல்வேறு சொல்லொணாத் துயரங்களில் நலிந்து போன மக்கள் சந்திரிகாவின் புதிய அரசு எம்மை இந்த கோரயுத்தத்திலிருந்து மீட்டெடுக்கும் என்ற நம்பிக்கை ஆரம்பத்தில் இருந்தது என்னவோ உண்மை தான். ஆனால் சமாதானத்திற்கு கொடுக்கும் ஆக்க ஊக்கத்தை விட சந்திரிகா அரசினால் இராணுவத்துக்கு கொடுக்கம் தீனி பல்வேறு மடங்கு கூடுதலானதாக காணப்படுகிறது.

கிழக்கிலுள்ள அரசபடைகள் அனைத்து இராணுமுகாம்கள், பொலிஸ் நிலையங்கள் எல்லாம் இருபத்திநான்கு மணிநேரமும் உசார் நிலையில் இருக்குமாறு மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

அண்மையில் மட்டக்களப்புக்கு பாதுகாப்பு பிரதியமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்த விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இதைவிட பாதுகாப்பு பிரதியமைச்சர் படையினர் மத்தியில் பேசும் போது மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் தோல்வியடைந்தால் முன்னைய அரசு போலில்லாமல் படையினருக்கு தேவையான அனைத்தும் தரப்படும், நானும் சீருடை அணிந்து களத்தில் உங்களுடன் நிற்பேன் என படையினர் மத்தியில் யுத்தத்திற்கான உற்சாகத்தை அளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட படை உயரதிகாரிகளைச் கூட்டி மட்டக்களப்பின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும், இனிவரும் காலங்களில் (யுத்தம் மூளுமானால்) வாகரைப்பிரதேசம், படுவான்கரைப்பிரதேசம் போன்ற இடங்களில் (இவ்விடங்கள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு முன்னரும் புலிகளின் ஆளுமைக்குட்பட்டிருந்த பிரதேசங்களாகும்) உடனடி நடவடிக்கைகளை எவ்வாறு கையாளுவது போன்ற விடயங்களும் மிக முக்கியமாக ஆராயப்பட்டதாக தெரிகிறது.

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் சரத் பொன்சேகா அரச அதிகாரிகளையும் பிரதேச செயலாளர்களையும் கூட்டி ஓர் மாநாடு நடத்தினார். அதில் புலிகளால் விடுவிக்கப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் உடந்தையாகவோ ஆதரவாகவோ இருக்கக்கூடாதென்றும் எச்சரித்துள்ளார். இதைவிட, புலிகளின் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படும் ஒரு சில அரச அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பிலுள்ள அனைத்து இராணுவமுகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் முன்னரை விடப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. புதிய புதிய பங்கர்கள் அமைத்து மண்மூடைகள் அடுக்கி படைகள் விழிப்பாக இருப்பதைப் பார்க்கும் போது மக்கள் மத்தியில் அதே பழைய அச்ச உணர்வுகள் எழத்தொடங்கியுள்ளன.

வாழைச்சேனை பொலிஸ்நிலையம், கும்புறுமூலை இராணுவமுகாம் என்பனவற்றின் முன்பாதை மணல்நிரப்பி மண்மூடைகள் அடுக்கி பின்பக்கமாகவே வாகனங்களும் பொதுமக்களும் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

நகருக்குள் போவோர் வருவோர் மீதான சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதைவிட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு பின்னர் மாமாங்கம், கூழாவடி போன்ற இடங்கள் படையினரால் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தப்பட்டது.

காரைதீவுப்பகுதியில் முகாமிட்டிருக்கும் விசேட அதிரடிப்படையினர் நாளுக்கு நாள் புதுப்புது கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். சில வேளை இரவு ஏழுமணிக்கு பின்னர் நடமாடக்கூடாதென்பார்கள். பின்னர் நடமாடலாமென்பார்கள். திடீரென வந்து முகாமுக்கு பிடித்துப்போய் விசாரிக்கத் தொடங்குவார்கள்.

→15

# முஸ்லிம் காங்கிரஸ்: அரங்கேறும் அடாவடித்தனங்கள்!

"பொதுஜன ஐக்கிய முன்னணியின் இதயமே நாங்கள் தான். நாங்களில்லாவிட்டால் சந்திரிகாவே இல்லை" என மார்தட்டியபடி கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் அங்குள்ள பள்ளிவாசல்களினூடாக முஸ்லிம் காங்கிரஸ் கிளைகளை நிர்மாணிக்கும் பணியில் முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்கள் தீவிரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

புதிதாக திறக்கப்படும் கட்டிடங்கள், வீதிகள், மைதானங்கள் என்பவற்றிற்கும் தலைவர் அஷ்ரஃப்பின் பெயரை வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் அவர்கள், அஷ்ரஃப் என்ற பெயரை உச்சரிப்பதற்கு தடைவிதித்துள்ளார்கள். (அது அவரை மரியாதைக் குறைவாக அழைப்பதாக இருக்கும் என்பதால்) லீடர்(தலைவர்) என ஆங்கிலத்தில் உச்சரிக்கும்படியும் கட்டளைகள் பிறப்பித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட தமிழ் இயக்கங்கள் அரச படையினருடன் இணைந்து அடாவடித்தனங்களில் இறங்கியது போல் முஸ்லிம் காங்கிரசும் தங்கள் அரசியல் எதிரிகளை பழிவாங்குவதிலும் இனிமேல் எழும்பவே முடியாதபடி முடக்கிவிடுவதிலுமே முனைப்பாக இருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசில் இணைந்தவுடனேயே ஏறாவூரில் ஆசிரியர்கள் சிலரை இடமாற்றம் செய்து மாணவர்களின் எதிர்ப்பை வாங்கிக்கட்டிக் கொண்டது தொடக்கம் இப்போது ஓட்டமாவடி மத்திய மகா வித்தியாலய அதிபருக்கு இடமாற்றம் கொடுத்ததுவரை இது போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. இவை இன்னமும் தொடருமோவென முஸ்லிம் காங்கிரசின் அரசியல் எதிராளிகள் கவலையுடன் இருப்பதைக் காணமுடிகிறது.

வாழைச்சேனை இ.போ.சபையின் பணிப்பாளர் சபையைக்கலைத்துவிட்டு புதிய பணிப்பாளர் சபையை அமைத்ததுடன் அதன் புதிய பணிப்பாளராக சலீம்கான் என்னும் முஸ்லிம் காங்கிரசுக்கு நெருக்கமான ஒருவரை நியமித்து இருக்கின்றனர். இவ்விடயம் ஜனாதிபதி செயலகம்வரை சென்றிருக்கின்றது என்ற போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றே தெரியவருகிறது.

இப்புதிய பணிப்பாளர் சபையை நியமித்ததிற்கு எதிர்ப்புத்தெரிவித்து வாழைச்சேனை டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள் பல நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஆதரவாக பல சமூக நிறுவனங்களும் மட்டக்களப்பு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட ஆதரவு தெரிவித்துள்ளார்கள். ஆனால் இதுவரையும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இதனால் வாழைச்சேனை டிப்போவின் பஸ் சேவை சீரழிந்துள்ளது. புதிதாகப் பத்துப்பேரை புதிய பணிப்பாளர் சலீம்கான் சேவைக்கு அமர்த்தியுள்ளதாகத் தெரியவருகிறது. இவர்களில் அனேகமானோர் "மரத்தின்" அபிமானிகள் எனத் தெரியவருகிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் ஊழியர்கள் சிலர் எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இது தொடர்பாக முறையிட்ட ஒருவருக்கு, இது எங்களுடைய அரசு. லீடருக்கு (அஷ்ரஃப்) இந்தச் சின்னப்பிரச்சினைகளையெல்லாம் கேட்கப் பார்க்க நேரமில்லை. அதைவிட்டு வேறேதாவது பேசுங்கள் என்று பதிலளித்தாராம் ஒரு முஸ்லிம் காங்கிரஸ் முக்கியதஸ்தர்.

இதெல்லாவற்றையும் விட முஸ்லிம் காங்கிரஸ் "லீடர்" அஷ்ரஃப் அவர்கள் மட்டக்களப்பின் ஒரேயொரு சொத்தான வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தை அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவிலுக்கு மாற்றுவதற்கு அரசின் மேல்மட்டத்துடன் பேசியுள்ளதாகவும் அறிய முடிகிறது. இந்நடவடிக்கை உண்மையானால் தமிழ் மக்களுக்கல்ல முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல சேர்த்து செய்யும் அளப்பரிய துரோகமாகும்.

வந்தாறுமூலை தமிழ்ப்பிரதேசம் தமிழர்கள் செறிந்து வாழும் இடம். இங்கு முஸ்லிம், சிங்கள மாணவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதமில்லை. எனவே, அம்பாறைக்கு மாற்ற வேணுமென்ற ஒரு எண்ணமும் முஸ்லிம் காங்கிரசுக்கு முன்னமே இருந்தது என்பது பலருக்கு தெரியாத ஓர் விடயம்.

இப்பல்கலைக்கழகம் சிங்கள அரசுகளினால் புறக்கணிக்கப்பட்டு ஒரு தேய்ந்துபோன நிலையாயிருக்கிறது. இந்நிலையில் அம்பாறைக்கு மாற்ற வேண்டும் என்ற நிலைமையும் சேர்ந்தால் இன்னும் மோசமாக இருக்கும்.

இதை எதிர்த்து இப்பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களும் பொதுமக்களும் 28ஆம் திகதி முதல் அரைமணி நேர எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தத்தொடங்கியுள்ளார்கள்.

→15

சரிநிகர்
பிரதம ஆசிரியர் - சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல 4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு - 05. ☎ : 593615
வெளியீட்டாசிரியர் - ச.பாலகிருஸ்ணன். 18, ... கொழும்பு - 03.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்